# ஊடகப்படிகள்

JOURNALISM



M. இந்திரஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகப்படிகள்

(ஊடகத்துறையில் கால்பதிப்பவர்கள், பணியாற்றுபவர்களுக்கான தொகுப்பு)

எம். இந்திரஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஊடகப்படிகள் |
| ஆசிரியர் | : | எம்.இந்திரஜித் |
| இரண்டாம் பதிப்பு | : | பெப்ரவரி 2013 |
| பக்கங்கள் | : | 114 |
| விலை | : | ரூபா 250.00 |
| பதிப்பு | : | கொழும்பு, இலங்கை |
| மின்னஞ்சல் | : | sajeeth33@gmail.com |
| வெளியீடு | : | Sajee Associates |
| பக்க வடிவமைப்பு | : | ம. கதிர் |



பதிப்புரிமை பதிப்பாசிரியருக்கே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஊடக வளம் என்ற அம்சத்தை அந்தத் துறைக்குள் பிரவேசிப்பவர்கள் தெரிந்துகொள்வதற்கும் புதிதாக அந்த துறையில் இணைந்துகொண்டோருக்கும் உதவும் என்ற அடிப்படையில் இந்த நூலை வடிவமைக்க முயற்சித்துள்ளேன்.

இந்த நூல் ஊடகப்படிகள் என்ற பெயரில் ஊடகங்களின் அடிப்படைகளையும் செய்தித்துறையின் விளக்கங்களையும் கொண்டிருக்கிறது என்பது எனது எண்ணம்.

இந்த முயற்சி மேலும் தொடரவும் ஊடகங்கள் தொடர்பில் மேலதிக ஆக்கங்களைத் தருவதற்கும் உங்களின் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் சாதாரண பொதுமக்கள் மத்தியில் ஊடகங்கள் தொடர்பான தெளிவுக்காகவும் இந்த நூல் உதவும் என்றும் எண்ணுகிறேன்.

-நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியல்

## (இதழியல்) (Journalism)

*'பக்கச்சார்பின்மை, உண்மையை மறைத்துவிடாமல் உரைப்பதே' ஊடகத்தின் முதன்மை நோக்கமாக இருக்கவேண்டும்.*

ஊடகவியல் என்பது நிகழ்வுகள், சம்பவங்கள் மற்றும் மாற்றங்களை புலனாய்வு மற்றும் அறிக்கையிடலுக்கு உட்படுத்தி, வாசகர்களுக்கு நேயர்களுக்கு கொண்டுசெல்லும் இயலாகும்.




அரசாங்கம், அரசியல் வர்த்தக விளையாட்டு ஒழுங்கமைப்பு போன்றவற்றில் இருந்து, சமூகத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள், எதிர்பார்ப்புகள் (கலை மற்றும் களியாட்டம் போன்றவை) வரையான விடயங்களின் கீழ், வாசகர்கள் நேயர்கள் எதிர்பார்க்கின்ற தகவல்களை ஒழுங்குபடுத்தி வழங்குவதே ஊடகவியலாகும்.

பின் நவீனத்துவத்தில், செய்தி ஊடகம் என்பது, பொதுவிவகாரங்கள் குறித்த தகவல் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துவதாகவும் மாறியுள்ளது. எனினும் ஜனரஞ்சக ஊடகம் என்ற வகையில் ஊடகவியல் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது. இணையத்தளத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே இதற்கான காரணங்களாகும்.

இதன்விளைவாக இலத்திரனியல் ஊடகத்தின் வளர்ச்சி கட்டுக்கடங்காதுள்ளது. அதாவது தற்போது கணினி, ஸ்மார்ட் போன்கள் போன்றவற்றில் ஊடகங்களை வாசகர்கள் நாடுவதால், அதில் ஏற்பட்டுள்ள போட்டிச்சந்தைக்கு இடையில், அச்சு ஊடகத்தை பாதுகாக்க முடியாதுள்ளது.

இந்த நிலையில் செய்தி ஊடகம் என்பது, தகவல்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் தொடர்பிலான முதன்மை நிலை விநியோகஸ்தராக (chief purveyor) கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலின் வரலாறு

ஊடகவியலின் ஆரம்பகாலத்தைக் குறிப்பிட்டுக்கூறமுடியாத போதிலும், மனித நாகரிகம் நவீனமயப்பட ஆரம்பித்த காலத்திலேயே அதன் வளர்ச்சியும் ஆரம்பித்தது.







Johannes Guttenberg 1440



மனிதனுக்கு மனிதன் தகவல்களை பரிமாற்றிக்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்ட காலப் பகுதியில் ஊடகவியலின் பிறப்பும் ஆரம்பமானது.

பின்னர் அது பல்வேறு சட்டங்கள், நியதிகள் மற்றும் வரையறைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், ஊடகவியல் என்ற பரிணாமத்துக்கு உட்பட்டது.

ஆதிகாலத்தில் மன்னர்கள் தங்களது உத்தரவுகளையும் சட்டத்திட்டங்களையும் நிகழ்வுகளையும் மக்களிடம் பரப்புவதற்காக பொது ஊடக முறைமை ஒன்றைப் பின்பற்றினர்.

மன்னர்கள் இதற்காக செய்திகளை கடத்தும் பணியாளர்களை நியமித்திருந்தனர்.

அத்துடன் தமது பிரதேசங்கள், கட்டிடங்கள், வரலாற்றுக் குறிப்புகளையும் பதிந்துவைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்றுவந்தன.

இவ்வாறாக ஊடகவியலின் ஆரம்பப் படிநிலைகளில், 1439ஆம் ஆண்டு Johannes Gutenberg என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்கு இடம் நகர்த்தக்கூடிய புரட்சிகரமான தட்டச்சு - அச்சு இயந்திரத்தைக் கொண்டு 1594ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் புத்தகங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

இலத்தீன் மொழியிலான Mercurius Gallobelgicus என்ற சஞ்சிகை இந்த அச்சு இயந்திரத்தைக் கொண்டு முதன் முறையாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செய்தி ஊடகவியலின் ஆரம்பமாக 1605ஆம் வருடம் ஜேர்மனியின் Strassburg இல் வெளியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Relation aller Fürnemmen und gedenckwürdigen Historien (Account of all distinguished and commemorable news) என்ற ஜேர்மனிமொழி செய்தித்தாள் வரலாற்றில் இடம்பெற்றது.

இதனை ஜொஹான் கரோலஸ் (Johann Carolus) என்ற ஜெர்மனியர் வெளியிட்டார்.

இதன்பின்னர் 11 மார்ச் 1702ஆம் வருடம் Daily Courant என்ற பெயரில், Edward Mallet என்பவரால், பிரித்தானியாவில் செய்தித்தாள் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து 1920ஆம் வருடத்திலேயே செய்தி ஊடகவியல்துறை புதிய பரிணாமத்தை பெற்றது எனலாம்.



அமெரிக்காவின் எழுத்தாளர் Walter Lippmann மற்றும் அமெரிக்காவின் தத்துவஞானி John Dewey ஆகியோர் ஜனநாயகத்துக்குள் ஊடகவியல் என்பது தொடர்பில் விவாதத்தை முன்வைத்தபோதே ஊடகவியல் புதிய பரிணாமத்தை பெற்றது.

Walter Lippmann என்ற அமெரிக்க எழுத்தாளர், அன்றைய சூழ்நிலையில், ஊடகவியலாளர் என்பவர் பொதுமக்களுக்கும் கொள்கைகளை வகுக்கும் ஆட்களுக்கும் இடையிலான பரிவர்த்தனையாளர் அல்லது மத்தியஸ்தர் என்று உணரச்செய்தார்.

இதன்மூலம் கொள்கை வகுப்பாளர்கள் பேசுவதை கேட்கும் ஊடகவியலாளர்கள், அந்த தகவல்களை பதிவுசெய்து பின்னர், வடிகட்டி, பொதுமக்களின் நுகர்வுக்காக வழங்குபவர்கள் என்று Walter Lippmann குறிப்பிட்டார்.

அதாவது பொதுமக்கள் நேரடியாக கொள்கை வகுப்பாளர்களின் தகவல்களை பெற்றுக் கொண்டு அதனை உணர முடியாது.

எவராவது நடுநிலையாளராக நின்று அதனை வடிக்கட்டிய நிலையில் பொதுமக்களுக்கு விளங்கும் வகையில் கொண்டு செல்லவேண்டும்.



அவரே ஊடகவியலாளர் என்று Walter Lippmann குறிப்பிடுகிறார்.

John Dewey என்ற தத்துவஞானியின் கருத்துப்படி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சமூக ஊடகவியல்' என்ற வகுதிக்குள் சென்று ஊடகவியலாளர் ஒருவர், பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதுடன் நின்றுவிடாது அவர் தாம் வழங்கும் தகவலைக்கொண்டு பொதுமக்கள் அது தொடர்பான தீர்மானத்தை எடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று வாதிடுகிறார்.



அதாவது ஊடகவியலாளர் ஒருவர் அரசாங்கத்தை, அரசியலைக் கண்காணிக்கும் ஒருவராக, வர்த்தகத்துறை உட்பட்ட ஏனைய முக்கிய பாத்திரத்தை கொண்டிருக்கவேண்டும் என்பதே John Dewey கூறும் கருத்தாக அமைந்துள்ளது.




இதற்கிடையில், அமெரிக்க ஊடகவியலாளர் Bill Kovach மற்றும் ஊடகவியலாளரும் விமர்சகருமான Tom Rosenstiel ஆகியோர் தமது 'ஊடகவியல் மூலதர்மம்' என்ற நூலில், ஊடகவியலாளர் ஒருவர், உண்மையைக்கூறும், சமூகத்தில் சுயாதீன சக்திமிக்க கண்காணிப்பாளராகவும் புத்திஜீவியாகவும் கருதப்படுகிறார் என்று குறிப்பிடுகின்றனர்.

இதன்மூலம், "ஊடகவியலாளர் ஒருவர், ஏற்றுக்கொள்ளத்தக்க தகவல்களை தரமான உறுதிப்படுத்தலுடன் பொதுமக்களின் விமர்சனத்துக்கு கொண்டுசெல்பவராக செயற்படுகிறார்" என்று அந்த இருவரும் கூறுகின்றனர்.

செய்தியாளர் என்பவர், செய்தியை சேகரித்து, அதனை சரியாக, தெளிவாக விரைவாக அறிக்கைப்படுத்த வேண்டியவராக இருக்கிறார் என்று 'GET IT RIGHT: WRITE IT TIGHT' என்ற ஊடகவியலாளர்களுக்கான தமது கைநூலில் Frederick T. C. Yu என்பவர் தெரிவித்துள்ளார்.

"ஊடகவியலாளர் அல்லது செய்தியாளர் என்பவர், பொதுமக்களுக்காக செயற்படவேண்டியவர். அவர், ஒரு நிகழ்வின் சாட்சியாக மாத்திரம் செயற்படமுடியாது" என்று சர்வதேச ஐக்கிய ஊடகத்தின் உதவி தலைவரான எச் எல். ஸ்டீவன்சன் குறிப்பிடுகின்றார்.

ஊடகவியலாளர் என்பவர், தகவல் தெரிந்தவராக, கல்வியியலாளராக இருக்கவேண்டும்.

இதன் அர்த்தம், ஊடகவியலாளர், முறையான கல்விமுறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றிருக்கவேண்டும், பட்டதாரியாக இருக்கவேண்டும் என்பதல்ல.

கலாநிதிகளும், நிபுணர்களும் பட்டப்பின்படிப்பை மேற்கொண்டவர்களும் செய்தி அறைக்கு அவசியமற்றவர்கள்.

பெரும்பாலான ஊடகங்களில் செயலாற்றிய பிரசித்தமான ஊடகவியலாளர்கள் பலர், கல்லூரிப் படிப்பை முடித்தவர்களும் உயர்கல்லூரியில் படித்தவர்களும் ஆவர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எனவே சாதாரணக்கல்வியைக் கொண்டுள்ள ஊடகவியலாளர் ஒருவர் தமது திறன்களை நாளுக்குநாள் வளர்த்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறார்.

**ஊடகவியலாளர் (செய்தியாளர்) ஒருவர் பின்வரும் பொறுப்புகளுக்கு கட்டுப்பட்டவராக உள்ளார்:**

1) ஊடகவிலாளர் ஒருவர், ஊடகவியலின் அனைத்து அடிப்படை அம்சங்களையும் பின்பற்றவேண்டும். ஊடகவியல் திறன்களை பெற்றுக்கொள்ளவேண்டும்

2) ஊடகத்துறையின் தரம், தமது மொழி உட்பட்ட விடயங்களில் ஊடகவியலாளர் ஒருவர் தெளிவைக் கொண்டிருக்கவேண்டும்

3) ஊடகவியலாளர்கள், ஏனைய ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடக நிறுவனங்களின் ஊடகவியலின் அடிப்படை அம்சங்கள், பிரச்சினைகள், பயிற்சிகள், என்பவற்றுடன் பரீட்சியத்தை கொண்டிருக்கவேண்டும். எனினும் ஏனைய ஊடகங்களின் செய்தி அறைகளுடன் புலனாய்வு புரிந்துணர்வை கொண்டிருப்பது, மன்னிக்கக் கூடிய குற்றம் அல்ல என்று கூறப்படுகிறது.

**ஊடகவியலாளர் ஒருவர், பின்பற்ற வேண்டிய 11 படிமுறைகள்**

1) துல்லியத்தன்மை - Accuracy - சந்தேகமானால் கைவிடு. பரிசோதி, மீண்டும் பரிசோதி.

2) காரியத்தில் விரைவு - Promptness - வரையறை நேரத்துக்குள் பணிகள் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

3) ஒழுங்காட்சி - Discipline - வசனங்களுக்கு இடையிலான இடைவெளியை தக்கப்படுத்தல், கதையின் முக்கிய அம்சத்தை தீர்மானித்தல், நேயர்களை, வாசகர்களை சென்றடையக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில், செய்தியை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

4) தெளிவு - Clarity - வசன அமைப்புக்கள் பற்றிய கவனம், ஒரு வசனத்துக்கு ஒரு பந்தி, பக்கசார்பற்ற குரல்கள்.

5) தொழில்துணிபு ஆர்வம் - Enterprise - கண்களையும் காதுகளையும் எப்போதும் செய்திகளில் திறந்தநிலையில் வைத்திருத்தல்.

6) சளைக்காத குணம் - Persistence - தொடர்புகளை தொடர்ந்தும் வைத்திருத்தல், ஊக்கத்தை கைவிடாமல் இருத்தல், தடைகளை பிற்போடல்.

7) துணிவு - Courage – -ஊடகவியலாளரின் பணி, தகவல்களை திரட்டி அதனை வெளியிடுவது. இதன்போது ஏனையவர்கள் செல்வாக்கு செலுத்தல் மற்றும் மற்றவர்களின் உறுதிப்பாடு கிடைக்காமை போன்றவற்றை பெரிதுப்படுத்தகூடாது.

8) நோக்கம் - Objectivity – செய்தி திரட்டலையும் விமர்சனத்தையும் கலக்கவேண்டாம். செய்தி திரட்டல் என்பது ஒரு மனிதன் கூறுவது எனினும் அவருடைய கருத்துக்கள் செய்திக்கு உகந்தவையாக இருக்காது.

9) பக்கசார்பின்மை - Impartiality - செய்தியின் இரண்டு பக்கங்களையும் பார்க்கவேண்டும்.

10) நியாயாதிக்கம் - Legality - செய்தியிடலின்போது நாட்டின் சட்டங்கள், அபகீர்த்தி, நீதிமன்றத்தை அவமதித்தல், கோபத்தை தூண்டுதல், நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் பொதுமக்களின் கட்டளைகள் என்பவை கவனிக்கப்படல் வேண்டும்.

11) மொழி -Language- அனைவரும் விளங்கிக்கொள்ளக்கூடிய மொழியாள்கை முக்கியமானதாகும். செய்தியை உரிய முறையில் விளங்கி அதனை தெளிவாக எழுதவேண்டியவற்றில் மொழி முக்கியமானதாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாடுகளில் ஊடகவியலாளர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. எனினும் பல நாடுகளில் ஊடக சுதந்திரம் பல்வேறு காரணங்களுக்காக கட்டுப்படுத்தப்படுகின்றது.




இதன்போதே ஊடகவியலாளர் ஒருவர் நாட்டின் அரசாங்கத்தின் நலன் கருதி சமூக நலன் கருதி, இறுதியில் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள சுயதணிக்கைச் செய்திகளை வழங்க வேண்டியேற்படுகிறது.

இதற்கு மேலாக நிறுவனங்களின் செய்திக்கட்டுப்பாடுகளை, செய்தியின் உண்மைத்தன்மையைக் கண்காணிப்பதற்காக, ஓம்புட்ஸமன் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

## செய்தி




உலகில் சிறியோர் முதல் பெரியோர்வரை ஏதோ ஒருவகையில் ஈர்க்கப்படும் விடயமாக செய்தி எனும் பதத்தை இனம் காட்டமுடியும்.

எனினும், 'செய்தி என்றால் என்ன?' என்பதற்கு இலகுவில் பதில் கூறமுடியாது.




நியூயோர்க் டைம்ஸின் (New York Times) ஊடகவியலாளர் Turner Catledge "நேற்று நீ தெரிந்துக்கொள்ளாத எந்த விடயமும்" செய்தியாக இருக்கும் என்று கூறுகிறார். "உனக்கு கையாளத்தெரியுமானால் எதுவுமே செய்தி" என்றும் அவர் தெரிவிக்கிறார்.

"செய்தி ஆசிரியர்கள் கூறுவது செய்தியாக இருக்கும்"

"ஏதாவது ஒன்றில் யாராவது செல்வாக்கு செலுத்த முயன்றால் அது செய்தியாகும்".

"பொதுமக்களுக்கு ஆர்வமூட்டுவது, பொதுமக்களுக்கு தெரிந்துக்கொள்ளவேண்டியது செய்தியாகும்" என்பனவும் செய்திக்கான வரைவிலக்கணங்களாகக் கூறப்படுகின்றன.

சமூகத்தினால் பொருட்படுத்தத்தக்க தாக்கத்தகவல் (விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய (Impact) நிகழ்வு எதுவும் செய்தியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை பொருட்படுத்தாத விடயங்களும் செய்தியாக அமைந்துவிடலாம்.

எனினும் பிரசுர அல்லது ஒலி,ஒளிபரப்பு செய்தி என்பது செம்மைக்கு (நுனவைவைபெ) உட்படுத்தப்பட்டதாகும்.

எனவே, செய்தி என்பதை -

'சமூகத்தினால் பொருட்படுத்தத்தக்க தாக்கத்தகவல்களை (விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய (Impact) அச்சு ஊடகம், ஒலி-ஒளிபரப்பு, இணைத்தளம் அல்லது வாய் மூலமாக (Word of mouth) மூன்றாந்தரப்பு அல்லது பெருமளவான தோற்றத்தைக்கொண்ட நேயர்களுக்கு, வாசகர்களுக்குத் தெரிவிக்கும் தொடர்பாடல்' என்று அர்த்தப்படுத்தலாம்.

## செய்தியின் தோற்றம் பற்றிய அம்சங்கள்




செய்தி என்பது ஆங்கிலத்தில் நியூஸ் - NEWS என்று அழைக்கப்படுகிறது.


14 ஆம் நூற்றாண்டில் நியூ - NEW அதாவது புதிய என்ற ஆங்கில சொல்லின் பன்மை வடிவமாக NEWS என்பது உருவானது. மத்திய ஆங்கில பதமான NEWES என்பதன் சம சொல்லாகவும் செய்தி என்ற சொல் அமைந்துள்ளது.




பிரான்ஸ் மொழியின் nouvelles என்ற சொல்லும், ஜேர்மனிய மொழியின் neues சொல்லும் இதற்கு ஒத்த சொற்களாக அமைந்துள்ளன.

இவ்வாறான பரிணாம மாற்றங்களே நியூஸ் என்ற புதிய பதத்துக்கு வழி செய்திருக்கலாம் என்ற கருத்து கூறப்படுகிறது.

எனினும் NEWS என்பது, வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு (North, East, West, South) ஆகிய திசைகளின் முதல் ஆங்கில எழுத்துக்களை கொண்டு உருவாக்கப்பட்டதாகவும் விளக்கப்படுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திப் பெறுமானம்




ஒரு நிகழ்வுக்கு செய்திப் பெறுமானம் இருக்கிறதா இல்லையா என்று மதிப்பிடும் அளவுகள்:

**1) மாற்றம்**

செய்தி மக்களுக்குப் புதிய ஒன்றை கூறக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதன்போது மாற்றம் என்பது முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. நிகழ்காலம், எதிர்காலம் என்ற அடிப்படையில் இந்த மாற்றங்கள் அமையலாம்.

**2) தாக்கம்**



தாக்கம் எனும்போது, செய்தியாக இருக்கக்கூடிய விடயம் ஏதாவதொரு விடயத்தில் தாக்கத்தை செலுத்தக்கூடியதாயிருந்தால் அது செய்திப் பெறுமானத்தைப் பெறுகின்றது.

**3) விரைவு**

அண்மை அல்லது விரைவு என்ற விடயம், செய்திகள் தெரிவிக்கப்படும்போது உடனடித் தன்மையை வெளிப்படுத்துவதால் அதன் வெளிப்பாடு செய்தியின் பெறுமானத்தை அதிகரிக்கும்.

**4) முழுமை**




தொகுக்கப்பட்ட தகவல்களுடன் 5W+H (தமிழ் இலக்கியங்களான கம்பராமாயணம் போன்றவற்றில் சந்தர்ப்பம் கூறல் போன்ற) அம்சங்களும் சேரும்போது அது முழுமை செய்தியாகிறது. அதாவது, ஒரு விபத்தின்போது - என்ன? (W) எங்கே? (W) யார்? (W)ஏன்? (ஙு) (W) எப்போது? (W) எப்படி? (H) என்ற விடயங்கள் பூரணப்படுத்தப்படும்போது செய்தி முழுமை பெறுகிறது.

எனினும், உடனடிச் செய்தி அல்லது அவசரச் செய்தி எனும்போது, குறித்த ஐந்து விடயங்களில் குறைந்தது மூன்று விடயங்களேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணப்படுத்தப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

5) **முக்கியத்துவம்**

முதல் இரண்டு வரிகளிலேயே செய்தியின் முக்கியத்துவத்தை பிரதிபலித்தால், அது செய்திப்பெறுமானத்தை அதிகரிக்கும்.




6) **செம்மை**

இந்த விடயங்கள் அனைத்துக்கும் பின்னர் அது வானொலி அல்லது தொலைக்காட்சி அல்லது செய்திதாளின் மூலமாகவோ தெரியப்படுத்தப்படுவதற்கு முன்னர் அவை செம்மைப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.


எனவே தாக்கத்தகவல்களின் தொகுப்பு மாற்றம் விரைவு செம்மை ஆகியவற்றின் வடிகட்டலே செய்தி என்றும் வரைவிலக்கணப்படுத்தலாம்.

தகவல்களாக கிடைக்கப்பெறும் விடயங்கள் உரிய காரணிகளின் அடிப்படையில் செய்தியாக ஆக்கப்பட்ட பின்னர் அது நேயர்களை அல்லது வாசகர்களை சென்றடைவதற்கு முன்னர் மேற்கொள்ளவேண்டிய செயற்பாட்டினை 'செம்மை' என்று கூறலாம்.

இந்த செம்மை பார்க்கும் விடயத்தில் தலைப்புகள் முக்கியமானதாக அமைய வேண்டும்.

பொதுவாக வாசகர்களை கேட்கத்தூண்டும் வகையில் அந்த தலைப்புகள் அமைய வேண்டும்.

முதன்மை பந்தியும் வாசகர்களை கேட்கத்தூண்டும் வகையில் அமைய வேண்டும்.




சமனிலை, துல்லியம் என்பவை செம்மையில் முக்கியமான அம்சங்களாகும்.

நேயர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழிநடை அவசியம்.

வசனமும் பந்தியும் நேயர்கள் புரிந்துகொள்ளும்படி சிறிய பந்திகளாக அமைந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுபவப் பகிர்வு: செம்மை**

**ஆர்.பி.ஹரன்**
*தினக்குரல் பிரதம ஆசிரியர்*

'உண்மையிலும் பார்க்க நோக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல'.

ஒளியின் வேகத்தில் (மணிக்கு சுமார் 300000 கிலோமீற்றர்) இதழியல்துறை மாற்றமடைந்துவருவதாக பிரிட்டனின் முன்னணி செய்திதாளின் ஆசிரியர் அலன் ர்பிரிட்கரி அண்மையில் கூறியிருந்தார். இந்த மேற்கோள் உண்மை என்பதை ஏற்றுக்கொள்ளமுடியும்.

ஊடகத்துறையை, அச்சு, இலத்திரனியல் ஊடகங்களை புதிய டிஜிட்டல் தொழில்நுட் பங்கள் மாற்றமடைய செய்துகொண்டிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அத்துடன் அவற்றை உள்வாங்கிக்கொள்ளவேண்டிய தேவைப்பாடும் எழுந்துள்ளது.

பத்திரிகையைப் பொறுத்தவரையில் செய்திப்பிரிவின் அன்றாடப் பணிகளை நேரடியாக மேற்பார்வை செய்யும் ஆசிரியரின் பொறுப்பு அதிகமானதாகும்.

தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கான பொறுப்பு மாத்திரமின்றி, சிறப்பான பத்திரிகைகளை வாசகர்களின் கரங்களில் தவழவிடவேண்டிய பொறுப்பும் கடமையும் ஆசிரியருக்கு உள்ளது.

பத்திரிகைகளில் பணிபுரிவது என்பது, அதாவது தினசரிப் பத்திரிகைகளில் பணியாற்றுவது என்பது மிகவும் சவாலான விடயமாகும்.

குழவினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இந்தப் பணியில் பல்வேறு துறைகளில் அனுபவங்கள் நிரம்பப்பெற்றவர்களின் தேவைப்பாடு அதிகமாகக் காணப்படுகிறது.

செய்திகள், வர்த்தகம், விளையாட்டு, விவரணக்கட்டுரைகள், அறிவியல், சுகாதாரம், கலை, சமூகவியல், உட்பட பலதரப்பட்ட விடயங்களில் அடிப்படை அறிவு கொண்டவர்களாக இந்தத்துறை சார்ந்த விடயங்களை கையாளும் உதவி ஆசிரியகள், செய்திதொடர்பாளர்கள் இருக்க வேண்டியது முக்கியமானதாகும்.

அலுவலக மற்றும் பிராந்திய செய்தியாளர்கள் செய்திகளை சேகரித்து கொடுக்கின்றனர்.அவற்றைத் திருத்தி, செம்மைப்படுத்தும் பணியை உதவி ஆசிரியர்கள் மேற்கொள்கின்றனர்.

பின்னர் அந்தச்செய்திகள், விவரணக்கட்டுரைகள் என்பன செய்தி ஆசிரியர் அல்லது விவரணக் கட்டுரை ஆசிரியர் போன்றோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வையில் கணனிகளில் தட்டச்சு செய்யப்பட்டு, பக்கங்கள் வடிவமைக்கப்பட்டு, பின்னர் அச்சிடப்பட்டு வாசர்களின் கரங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இங்கு செய்திகள் கட்டுரைகளை திருத்திச் செம்மைப்படுத்தும் பணியை மிகவும் அவதானமாகவும் அதேசமயம் ஈடுபாட்டுடனும் விருப்பத்துடனும் மேற்கொள்ளவேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

முன்பக்கத்தில் பிரதான தலைப்புச் செய்தியாக ஒரு செய்தியை வெளியிடுவதென செய்தி ஆசிரியர் தீர்மானிக்கும்போது, அதற்கான தேவைப்பாட்டை, தன்மையை கொண்டிருக்கிறதா என்று சிந்தித்துத் தீர்மானிக்கவேண்டியுள்ளது.

அதுபோன்று, எந்தச் செய்தியென்றாலும் பொருத்தமான தலைப்பைக் கொண்டிருக்க வேண்டும். செய்தி பூரணமடைந்திருக்கிறதா? என்பதையும் பார்க்கவேண்டும்.

மேலும், சிறப்பான மொழிநடையில் வாசகர்கள் இலகுவில் புரிந்துக்கொள்ளக் கூடிய விதத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? என்பதையும் பார்க்கவேண்டும்.

செய்தித் தொடர்பாளர் ஒருவர் எழுதிய செய்தியில் பெயர்களை, சரியாக எழுதியிருக்கிறாரா? தகவல்களை திரட்டிய தரப்புக்கள், சட்டரீதியான, நம்பகத்தன்மை வாய்ந்தனவா என்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறதா? மேற்கோள்காட்டப்பட்டவை பொருத்தப்பாட்டை கொண்டிருக்கிறதா? சம்பந்தப்பட்ட செய்தியானது, பொருத்தமானதாக இருக்கின்றது என்று வாசகர்கள் திருப்தியடைவதற்கான பின்னணியை விடயத்தில் கொண்டிருக்கிறதா என்பது பற்றி உறுதிப்படுத்துதல் போன்றவை, செய்தி அல்லது விவரணக்கட்டுரையொன்றை மேற்பார்வை செய்யும்போது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயங்களாக இருக் கின்றன.

நல்ல பத்திரிகை ஒன்று அந்தப் பத்திரிகை சார்ந்த சமூகத்தை முன்நோக்கி வழிநடத்திச்செல்லும் என்று கூறுவார்கள்.

அதாவது சமூகப்பிரச்சினையுடன் செயற்படுவதே பத்திரிகையின் தலையாய கடமையும் பொறுப்பும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

ஆகையால் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் போன்றவற்றின் அளவுக்கதிமான பெருக்கத்தினால் சமூகப்பிரச்சினை என்பது ஆணிவேராக இருக்கின்றபோதிலும், பல்வேறு இளைஞர்களைத் தீய வழிப்படுத்தும் நடப்புக்களுக்கு இந்த ஊடகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளிக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக- களியாட்டம், சமூகத்தில் வணிகர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் முன்னுரிமை அளித்து செய்திகளை வெளியிடல், பரபரப்பு, கிளுகிளுப்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், புகைப்படங்களைப் பெரிதாகப் பிரசுரித்து வாசகர்களை வசீகரித்தல் என்பன போன்ற சூத்திரங்களை நாடவேண்டிய நிர்பந்தங்களும் எழுந்திருக்கின்றது. இது ஊடகங்கள் பல்கிப்பெருகியதால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அரசியல் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நீண்டு கொண்டே செல்லும் நிலையில், சமூகங்களின் அபிலாசைகளை, வரலாற்றை, உரிமைகளை, வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதாக இதனை நியாயப்படுத்த முடியும்.


அரசியல் ரீதியான விழிப்புணர்வு, பரபரப்பு என்பன ஊடகத்துறை வர்த்தகத்தை செழிப்பானதாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சுயாதீனமாக தொழில்சார்ந்த நிபுணத்துவம் கொண்ட இதழியல் துறையானது அதிகளவுக்கு அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளது என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

ஆனால், இதழியல் துறை சிறப்பானதாக இருக்கவேண்டும் என்ற உணர்வானது குழுவினரின் பணியே தவிர, தனிமனித ஆற்றல் என்பது சிறியதொரு வகிபாகமேயாகும்.

உறுதிப்பாடு, அதீத ஈடுபாடு என்பனவற்றை அதிகளவு கொண்டிருந்தால், இந்தத் துறையில் எழுந்துவரும் எந்தவொரு சவால்களையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளமுடியும்.

உண்மையிலும் பார்க்க நோக்கம் என்பது குறைந்தளவான முக்கியத்துவம் கொண்டதே என்பது தெளிவான விடயம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி மூலங்கள்



ஒவ்வொரு மனிதனினதும் கண்களும் காதுகளும் முதன்மை செய்தி மூலங்களாகும்.

இதன்படி, வீதியில் செல்லுகின்ற ஒருவர் கண்டது அல்லது காதால் கேட்ட விடயத்தை இன்னொருவருடன் பகிர்ந்துகொள்ளும்போது அது செய்தியிற்கான முதல் மூலமாக (தகவல்) கருதப்படுகிறது.

இதன் இரண்டாம் கட்டமாக, செய்தி நிறுவனத்தின் செய்தியாளர்கள் மற்றும் பிரதேச செய்தியாளர்கள் முதன்மை செய்திமூலங்களாக விளங்குகின்றனர்.

அடுத்தபடியாக, ஆர்வமூட்டும் எதனையும் விரைவாகப் பெற்று, செய்தியாக்கக்கூடிய வல்லமைப்பெற்ற ஆசிரியர் பீடங்கள் செய்தி மூலங்களாக கருதப்படுகின்றன.

இதன்போது, அடுத்தவருடன் கொண்டிருக்கக்கூடிய உடனடியான தொடர்புகள் செய்திமுலத்தின் முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் பிரதேசம் தொடர்பான அறிவு என்பன இதில் உள்ளடங்குகின்றன.

வாசகர்கள், செய்தி செவிமடுப்போர் மற்றும் கண்கண்ட சாட்சிகள் செய்தி மூலங்களாக அமைகின்றனர்

சர்வதேச வலைப்பின்னலாக விளங்கும் இணையத்தளம் செய்திமூலமாக அமைகின்றது.

இதைத்தவிர, நாட்குறிப்பு, பழைய ஆவணங்கள், சர்வதேச செய்தியொன்றை 'உள்ளூர் மயமாக்கக்கூடிய' தூரத்துச் செய்திகள், கடந்தகால நிகழ்வுகளுடன் தொடர்புபட்டிருக்கக்கூடிய நிகழ்காலத் தகவல், பிற ஊடகங்கள், செய்தியாளர் சந்திப்புகள் போன்றவை செய்தி மூலங்களாக அமைகின்றன.

இதனைவிட, உலகில் எந்த நேரமும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சிறு சிறு நிகழ்வுகளும் செய்தி மூலங்களாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தியின் தன்மைகள்

**நேர்மை**

நேர்மையின்போது விதிவிலக்கான சில நேரங்கள் தவிர செய்தியாளர்கள் நேர்மையாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

ஒரு செய்தியை பெற்றுக்கொள்ளும்போது அது எவ்வாறு ஒலிபரப்பப்படும் போன்ற விடயங்களில் செய்தி தருபவருடன் நேர்மையாக நடந்துகொள்ளவேண்டும்.

நேரடிச் செய்தியா? அல்லது ஒலிபரப்புச் செய்தியா? அல்லது செய்தி செம்மையாக்கப்படுமா? என்பன செய்தி தருபவரிடம் வெளிப்படுத்தல் அவசியம்.

**நடுநிலைத்தன்மை**

ஒரு செய்தியைப் பொறுத்தவரை அந்தச் செய்திக்கு உரித்தான விடயம், அதில் கோடிடப்படும், விடயம் மற்றும் ஏனைய தகவல்களை நேயர்கள், வாசகர்கள் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் தகவல்களை வழங்குதலை நடுநிலைத்தன்மை என்று கூறலாம்.

**துல்லியத்தன்மை**

செய்தி கூறப்படும்போது அதன் முக்கியத்துவம் உடடியாக உணர்த்தப்படல் அவசியம்.

துல்லியத்தன்மை எனும்போது, “செய்தியை முந்திக்கொண்டு சொல்லும் தவறைக் காட்டிலும் சரியான உண்மைச் செய்தியை தருவது மேல்” என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது.

செய்தியில் துல்லியத்தன்மை இல்லாது போகும்போது, செய்தியாளர் ஒருவரால் வழங்கப்படும் அனைத்துச் செய்திகளையும் சந்தேகத்துடன் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும்.

செய்திகளை தெரிவிக்கும்போது, செய்திக்கான தகவலைப் பெற்ற மூலங்களை கோடிட்டுக் காட்டுவது நேயர், வாசகர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

ஆவணத்தகவல்களை பெறுகின்றபோது, அதனை உறுதிப்படுத்திய பின்னர் தமது செய்திகளில் இணைத்துக்கொள்வது நன்மை பயக்கும்.

பெயர்கள், பதவிகள், திகதிகள், எழுத்துப்பிழைகள், நாட்கள், நேரம், இடம் என்பன, செய்தி வழங்கலின்போது துல்லியமாக அமைதல்வேண்டும் என்பது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை வழங்குபவரின் கருத்து மாறுபடும் விதத்தில் அதனை மாற்றியமைப்பது கூடாது.

சரியாக உச்சரிப்பது அவசியமானதாகும். தவறுகள் ஏற்படும்போது, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக திருத்தம் செய்யவேண்டும். அது செய்தியாளர்களை பல்வேறு பிரச்சினைகளில் இருந்து காப்பாற்றும்.

சட்டபூர்வமான நடவடிக்கை குறித்த எச்சரிக்கை வரும்போது சட்ட ஆலோசனை பெறுவது சிறந்தது. இதன் காரணமாக செய்தியை திரட்டுபவர், செய்தியை செம்மைப்படுத்துபவர் (ஆசிரியர்) போன்றே செய்தியை நேயர்களுக்கு வாசித்து அளிப்பவரும் செய்தி தொடர்பான அறிவைக் கொண்டிருக்கவேண்டியது அவசியம்.

இதன்போது, வாசித்தளிக்கையில் ஏற்படும் பிழைகளை உடனடியாக திருத்தியமைத்து வழங்குகையில் செய்திக்குரிய நம்பிக்கையை வெளிக்காட்டமுடியும்.

**பதில் கூறுவதற்கான உரிமை**

ஒருவரைப்பற்றி செய்தி வெளியிடப்படும்போது, அவருக்குப் பதில் கூறும் உரிமையை வழங்கவேண்டும்.

ஒரு செய்தியை மறுப்பதற்கான உரிமை, அந்தச் செய்தி தொடர்பான ஒருவருக்கு வழங்கப்படுதல் அவசியம்.

செய்தி வெளிப்பாட்டில் கைக்கொள்ளவேண்டிய அம்சங்கள், ஒழுக்கங்கள்

**அந்தரங்கம்**

செய்தி கூறப்படும்போது அதன் அந்தரங்களை செய்தியை பெறுநரிடம் உறுதியளித்தபடி, காப்பாற்றுதல் அவசியம்.

இதன் ஒரு கட்டமாகவே செய்திகளின் வெளிப்படுத்தமுடியாத மூலங்களை எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கக்கூடாது என்று கூறப்படுகிறது.

**இரகசியமான பதிவு**

இரகசியமாக பதிவு செய்தல் என்பது, சமூக விரோதச் செய்திகள், சுதந்திரச் செய்திகளுக்கான சட்டங்கள், சரியான விடயத்தை வெளிக்கொணராத சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடையாளத்தை மறைத்தல்**

அடையாளத்தை மறைத்தல் எனும்போது ஒருவரைப் பற்றி செய்தியொன்றைக் கூறும்போது, அந்த செய்தி தொடர்பான அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் செய்திக்குள் கொண்டுவருதல் வேண்டும்.

**சொந்தக்கருத்தைப் பிரதிபலிக்காமை**

செய்தி எழுதும்போது, செய்தியாளர் ஒருவர் தனது சொந்தக் கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது. செய்திக்காக நிதி உதவிகளைப் பெறுதல், அரசியல் கட்சிகளுக்காக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், செவ்வி காண்போருக்கு பதிலை தேடிக்கொடுத்தல் போன்றவற்றிலிருந்து செய்தியாளர் ஒருவர் விலகியிருக்க வேண்டும்.

**நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகாமை**

அரசியல் அழுத்தங்களுக்கோ விளம்பர அழுத்தங்களுக்கோ உட்படாமல் சுயாதீன செய்தியாளராக செயற்படுவதை இந்த விடயம் வலியுறுத்துகிறது.

**ஒலிப்பதிவில் உரிய நடைமுறைகளை கைக்கொள்ளல்**

சில நேரங்களில், செய்திக்கான தகவலை வழங்குபவர், தன்னை அடையாளப்படுத்த விரும்பாவிட்டால் அவரை அடையாளம் தெரியாதவாறு அவரின் குரலில் மாற்றம் செய்தல், அடையாளத்தில் மாற்றம் செய்தல், என்பன அவசியமாகும்.

பிற்காலத்திலும் அவருடைய அடையாளம் வெளிக்காட்டாமல் இருக்கவேண்டுமெனின் செய்தி தந்தவரின் குரல் மற்றும் அடையாளங்களை அழித்துவிடுதல் சிறந்ததாகும்.

## செய்திகள் பற்றிய புரிதலும் - தொடர்பாடல் முறையும்

**அ. நிக்ஸன்**

ஊடகத்துறை ஏனைய தொழில்களில் துறைகளில் இருந்து வித்தியாசப்படுகின்றது.

கடந்த கால சம்பவங்களை ஞாபகப்படுத்துவதிலும் சமகால நிகழ்வுகளை துல்லியமாக அவதானிப்பதிலும் எதிர்காலத்தில் நடக்கப்போகும் விடயங்களை அனுமானிக்கும் திறனும் ஊடகவியலாளர்களுக்கு இருப்பது அவசியமானது.

செய்திகளை எழுதுபவர்களுக்கும் அதனூடான செய்தி விமர்சனங்களில் ஈடுபடுபவர்களுக்கும் இது பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் பல வகைப்படும் அவற்றில்

**அரசியல்**
**பொருளாதாரம்**
**புவியியல்**
**இலக்கியம்**
**விளையாட்டு**



திரைப்படம் போன்ற துறைகள் முக்கியம் பெறுகின்றன. விளையாட்டு, மருத்துவம் போன்ற விடயங்களை எழுதுவதிலும் விமர்சிப்பதிலும் தற்போது ஊடகத்துறை முக்கிய பங்குவகிக்கின்றது.

இவற்றில் அரசியல் பொருளாதாரம் சார்ந்த விடயங்கள், ஊடகத்துறையில் முன்னிலைப்பெறுகின்றன

அரசியலையும் பொருளாதாரத்தையும் ஒன்றித்து பார்ப்பதுதான் ஊடகவியலாளன் ஒருவனின் பிரதான பண்பு. அதனையே நடைமுறை சார்ந்த விடயங்களாகவும் அவன் பார்க்கின்றான்.

விளையாட்டு, திரைப்படம் போன்றவற்றைக் கூட அரசியலாகவும் பொருளாதாரமாகவும் மாற்றிப்பார்க்கக்கூடிய திறன் ஊடகவியலாளர்களுக்கு உண்டு.

உதாரணமாக ஐபிஎல் கிரிக்கட் போட்டியில் இலங்கை வீரர்களுக்கு சென்னையில் விளையாட தமிழக அரசு தடைவித்தமை தொடர்பாக இலங்கை கிரிக்கட் வீரர் முத்தையா முரளீதரன் கருத்து வெளியிட்டமை அரசியல் சார்ந்த விடயமாகவே நோக்கப்பட்டது.

இலங்கை வீரர்கள் முற்றுமுழுதாக ஐபிஎல் போட்டிகளை புறக்கணிக்க முடியாது விளையாட வேண்டிய தேவையும் இருந்தது.

அதனை லக்பிம என்ற சிங்கள பத்திரிகை பொருளாதார கண்ணோட்டத்தில் விமர்சித்திருந்தது.

நடிகர்கள் சங்கம் ஈழத் தமிழருக்காக உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டபோது ஹிந்து என்ற ஆங்கில செய்திதாள் தமிழக முதலமைச்சரின் அரசியலுடன் அதனை ஒப்பிட்டிருந்தது.

கமல்ஹாசன் தயாரித்த விஸ்பரூபம் என்ற திரைப்படம் கூட அரசியல் நோக்கில் விமர்சிக்கப்பட்டது. அதிலே இந்திய தேசியவாத அரசியலும் இருந்தது.

ஆகவே ஒரு நாட்டில் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்திகளாக அரசியல், பொருளதாரம் என்ற காரணிகள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் தாக்கத்தின் பின்னர் தற்போது புவியியலும் முக்கியம் பெறுகின்றது.

ஆனாலும் அரசியல் மற்றும் பொருளாதாரம் என்ற காரணிகள்தான் நடைமுறை அரசியலை தீர்மானிக்கின்றது என்ற அடிப்படையில் ஊடகத்துறையில் அது சார்ந்த செய்திகள் முக்கியம் பெறுகின்றன.

இலங்கை இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் உள்ள ஊடகங்களில் இவ்வாறான தன்மைகளை காணலாம்.

அமெரிக்கா, கனடா போன்ற மேற்கத்தைய நாடுகளில் அரசியல், பொருளாதாரம் என்ற காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்ற அதேவேளை காலநிலை மாற்றங்கள் பற்றிய செய்திகள் கட்டுரைகளும் சமகாலத்தில் முக்கியம் பெறுகின்றன.

அங்கு அரசியல் பொருளாதாரம் என்ற காரணிகள் இரண்டு வகையாக நோக்கப்படுகின்றன.

1) உள்நாட்டு விடயங்கள்

2) வெளிநாட்டு விடயங்கள்

கூடுதலாக வெளிநாட்டு விடயங்கள் பற்றிய செய்திகள் கட்டுரைகள் அந்த நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளுடன் இணைந்ததாக காணப்படும்.

இவ்வாறான பண்பு இந்தியா பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் உள்ள ஊடகங்களில் காணப்பட்டாலும் இலங்கை ஊடகங்களில் அதன் இயல்புகள் மிகவும் குறைவாக உள்ளன.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் அதற்கு பிந்திய காலத்திலும் வெளியுலக அரசியல் நடவடிக்கைகள் மாற்றங்கள் இலங்கை ஊடகங்களில் செய்திகளாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்தன.

மறுபுறத்தில் அவை உள்நாட்டு அரசியலுக்கு ஏற்றதான அவதானிப்புகளாக மாத்திரமே அமைந்திருந்தன.

இலங்கை ஒரு சிறிய நாடு என்ற உணர்வுடன் மேற்கத்தைய நாடுகள் நோக்குவதும் வெளியுலக அரசியல் மாற்றங்கள் இலங்கையில் தாக்கங்களை ஏற்படுத்தாது என்ற சிந்தனைகளும் இலங்கை அரசியல்வாதிகளிடம் உள்ளன.

தமிழ் ஊடகத்துறையில் பல காலஞ்சென்ற முன்னணி செய்தியாளர்களின் கட்டுரைகள் வெளியுலக அரசியல் மாற்றங்கள் பற்றியதாகவும் அது. இலங்கையின் யுத்தத்துக்கு எவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புகளை அல்லது சாதகமான நிலைமைகளை தோற்றுவிக்கும் என்ற அடிப்படையில் அமைந்திருந்தன.

இலங்கை ஊடகத்துறையில் கூடுதலாக அரசியல் பொருளாதாரம் குறித்த செய்திகள் வெளிவருகின்றன என்று கூறினாலும் அரசியல்வாதிகள் பேசுகின்ற விடயங்கள் ஊடகவியலாளர் மாநாடுகளில் தெரிவிக்கின்ற கருத்துக்கள் நாடாளுமன்ற செய்திகளையே அதிகமாக அவதானிக்கமுடிகிறது.

கட்சி அரசியல் அற்ற ஒரு பொது நோக்கில் அல்லது சமூகமாற்றங்களின் தேவைக்கு ஏற்றதான செய்திகள் குறைவாகவே காணப்படுகின்றன.

மேற்கத்தைய நாடுகளில் அரசியல் பொருளாதார செய்திகள் கட்டுரைகள் என்பது அந்த நாட்டுகளில் உள்ள கட்சிகளின் கருத்துக்களை மையமானதாகவோ அல்லது ஆட்சியாளர்கள் கூறுகின்ற விடயங்களை பிரதிபலிப்பதாகவோ அமைவதில்லை.

அமெரிக்காவின் பொஸ்ரன், கனடாவின் ரொறொன்ரோ செய்திதாள்கள், மக்களின் பிரச்சினைகளை மையாக கொண்டு வெளிவருகின்றன.

உள்ளூர் அரசியல்வாதிகள் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தகவல்களுக்கு அந்த செய்திதாள்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

அந்த நாடுகளின் வரவுசெலவு திட்ட அறிக்கைகள் கூட மிகவும் சிறிய அளவில்தான் செய்திகளாக வெளியிடப்படகின்றன.

ஆனால் விமர்சனங்கள் அந்த நாடுகளின் ஆட்சியாளர்களையும் அரசியல் கட்சிகளையும் மிகவும் மோசமாக தாக்கிவிடுகின்றன.

அரசியல் பொருளாதாரம் பற்றிய செய்திகள் என்பதுக்கூட மக்களிடம் இருந்து வரக்கூடிய சிந்தனைகளாகவே அமைகின்றன.

ஆனால் இலங்கையில் அரசியல், பொருளாதார செய்திகள் என்பது வெறுமனே அமைச்சர்கள் அரசியல்வாதிகள் கூறுகின்ற விடயங்களையே குறித்து நிற்கின்றன.

அனேகமாக தலைப்பு செய்திகளாகவும் முன்பக்க செய்திகளாகவும் அவை அமைகின்றன.

சமூக பிரச்சினைகள், சமூக மாற்றத்துக்கான உலக விவகாரங்கள் அல்லது வரலாறுகள் வழுக்காறுகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் செய்திகளாக விமர்சனங்களாக வெளிவருவது குறைவு.

எனவே அரசியல் எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்பதை முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஊடகவியலாளன் அறிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் குடும்பத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. அதன் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சிதான் அரசு. அரசின் உருவாக்கம் குடும்பத்தில் இருந்து வந்தது என்பதை கொப்ஸ், லொக், ரூசோ போன்ற அறிஞர்கள் கூறியிருக்கின்றனர்.

குடும்பம் என்ற அரசியல் மூலமாகவே பொருளாதாரம் என்ற எண்ணக்கருவும் தோன்றிது.

ஆகவே ஊடகங்கள் அரசியல், பொருளாதாரம் என்பதை அரசாங்கத்துடன் மட்டுப்படுத்திவிடக்கூடாது. இதற்கு ஏற்கனவே இந்த கண்ணோட்டத்தில் கூறிய மேற்கத்தைய ஊடகங்கள் உதாரணமாகின்றன.

பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்திருக்கின்ற சமூகங்களின் பிரச்சினைகளையும் எண்ணங்களையும் பிரதிபலிப்பதற்கு அந்த சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் அல்லது அமைப்புகளின் கருத்துக்கள் முக்கியமானதாகும்.

ஆனால் அதனையும் தன்டி ஒவ்வொரு பிரஜைகளையும் முக்கியப்படுத்தும் செய்திகள் விமர்சனங்கள்தான் மாற்றங்களை கொண்டு வரும் உதாரணமாக துானிசிய நாட்டில் 30 ஆண்டுகள் ஜனாதிபதி பெண் அலியின் கொடுமைகளை அந்த நாட்டின் பிரதான ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை.

அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் அரபு தேசிய இயக்கங்களின் கருத்துக்களுக்கு மாத்திரம் ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன.

ஆனால் சமூக ஊடகங்கள் என்று கூறப்படுகின்ற பேஸ்புக் ருவிற்றர் போன்ற தளங்களை பயன்படுத்தி மக்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தியதால் அரசியல் கட்சிகள், அரபு தேசியவாத இயக்கங்கள் அனைத்தையும் தான்டி துானிசியாவில் புரட்சி ஏற்பட்டது.

இதனால் அங்கு சர்வாதிகாரம் முடிவுக்கு வந்தது.

ஆகவே அரசியல் கட்சிகளுடன் மாத்திரம் அரசியலையும் பொருளாதார செயற்பாடுகளையும் ஊடகங்கள் மட்டுப்படுத்தக் கூடாது என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணமாகும்.

சமூகம் சார்ந்து பிரதான ஊடகங்கள் செயற்படவில்லையானால் சமூக ஊடகங்கள் என்று கூறப்படுகின்ற பேஸ்புக் ருவிற்றர் போன்றவற்றின் செல்வாக்கு அதிகரிக்கும் அது ஆபத்தாகவும் அமையும். என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயத்தில் அவதானிக்க வேண்டும்.

**தொடர்பாடலின் அவசியம்**

ஊடகவியலாளனுக்கு ஒழுக்கம் தேவை. சமூக ஊடகங்களான பேஸ்புக் ருவிற்றர் போன்றவற்றை யாரும் பயன்படுத்தலாம். அவர்களிடம் ஊடக ஒழுக்க முறைகளை எதிர்ப்பார்க்க முடியாது.

இதனல்தான் சமூக ஊடகங்களின் வளர்ச்சி ஆபத்தானது என்ற கருத்து பரவலாக உள்ளது.

ஆகவே தனியே அரசாங்கம் அரசியல் கட்சிகள் என்ற தளத்தில் மாத்திரம் நிற்காது சமூக பிரச்சினைகளுக்குள் ஊடுருவும் வகையில் ஊடகவியலாளன் மாற வேண்டுமானால் அவனுக்கு இருக்க வேண்டிய தொடர்பாடல் முறைகள் என்ன? என்ற கேள்வி எழுவது இயல்பானது.

அரசியல், பொருளாதார விடயங்களை பெறுவதற்கு அரசியல்வாதிகள் அரசியல் கட்சிகள், வெளிநாட்டு தூதுவர்கள், அரச அதிகாரிகள் என்று பல தரப்பினருடைய தொடர்புகளும் அவசியம் என்பது ஊடகவியலாளர்களுக்கு தெரிந்ததுதான்.

ஆனால் அந்த தொடர்புகளை எவ்வாறு பேணுவது, எந்த அடிப்படையில் பேணுவது என்பது பிரதானமானது.

அவர்கள் கூறுவதை மாத்திரம் அடிப்படையாக கொண்டு செய்திகளை எழுதுவது செய்தியல்ல.

அது ஒரு அறிக்கை போன்ற தன்மைய பெற்று விடும். ஆகவே தகவலை கொடுத்து தவலை எடுக்கின்ற ஒரு பண்பு இங்கே முக்கியமாகின்றது.

அவ்வாறு தகவலை கொடுத்து தகவலை பெறுகின்றபோது ஊடகவியலாளானால் வழங்கப்பட்ட தகவலும் குறித்த அந்த செய்திக்குள் செய்தியாக உள்வாங்கப்பட வேண்டும்.

அதேவேளை வெளிநாட்டு தூதுவர் ஒருவருக்கு தகவலை கொடுத்து அவரிடம் இருந்து அந்த தகவலுக்கான பதிலை எடுப்பதற்குரிய நம்பிக்கை தன்மையும் கொடுக்கப்படுகின்ற தகவலுடைய உண்மைத் தன்மையும் ஊடகவியலாளனுக்கு முக்கியமாகின்றது.

குறித்த ஒரு விடயம் தொடர்பாக ஊடகவியலாளனுக்கு இருக்கின்ற அறிவின் பயனாகவே இவ்வாறான நடைமுறைகள் சாத்தியமாகும்.

**தொடர்பாடலின் வகைகள்**

தொடர்பாடல் பல வகைகளை கொண்டது. ஊடகவியலாளனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளிடைத் தொடர்பாடல், குழுத் தொடர்பாடல் அகமுகி தொடர்பாடல் முறைகள் தெரிந்திருக்க வேண்டும்.

இந்த தொடர்பாடல் முறை ஒரு பாடத்திட்டத்தின் அடிப்படையில் அமைந்தவை. இருவருக்கிடையேயான தொடர்பாடல் முறைதான் ஆளிடைத் தொடர்பாடல்.

இருவருக்கு மேற்பட்டவர்களுடன் ஏற்படும் தொடர்புகள் குழுத் தொடர் பாடலாகும்.

ஒரு விடயத்தைப் பற்றி தனக்குள் சிந்திப்பது அகமுகித் தொடர்பாடலாகும். ஊடகவியலாளான் ஒரு தகவலை பெற்றதும் அது குறித்து தனது ஆசிரியருடன் கலந்துரையாட வேண்டும்.

அந்த விடயம் தொடர்பானவர்களுடன் உரையாடுதலும் அவசியம்.

அப்போதுதான் குறித்த அந்த விடயம் பற்றிய நம்பிக்கையான சரியான தகவலை பெறமுடியும்.

இந்த அடிப்படையில்தான் சாதாரண மக்களுடன் தொடர்புகளையும் பேண வேண்டும் ஒரு பொதுமகனிடம் இருந்து பெறப்படும் தகவல்களை உறுதிப்படுத்த இன்னுமொரு பொதுமகனுடைய தொடர்பும் நம்பிக்கையும் அவசியமானது.

ஆகவே இந்த அடிப்படையில் எழுதுகின்ற செய்திகளின் உண்மைத் தன்மைகள் சமூகத்தில் வலுப்பெறும்போது ஊடகவியலாளன் மீதான நம்பிக்கை மேலும் அதிகரிக்கும் இதுதான் மேலே குறிப்பிட்ட ஒரு ஊடகவியலாளனுடைய அறிவின் பயன் என்பதாகும்.

**நம்பிக்கையான தகவல்**

ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரக உயர் அதிகாரி ஒருவருடன் ஊடகவியலாளர் ஒருவர் தொடர்பு கொண்டு இந்தியாவின் நிலைப்பாடு பற்றி கேட்டிருந்தார்.

அப்போது இந்தியா தொடர்பான தகவல் ஒன்றையும் அந்த ஊடகவியலாளான் அந்த அதிகாரிக்கு வெளிப்படுத்தினார்.

அப்போது அமெரிக்கா இந்தியாவின் ஆலோசனைகள் எதனையும் கேட்கவில்லை என்று அந்த அதிகாரி கூறினார்.

அவ்வாறு கூறிவிட்டு இந்த விடயத்தை இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேறும் வரை செய்தியாக வெளியிட வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் இராஜாங்க செயலாளர் ரெபேட் ஒ பிளேக் இந்தியாவின் ஆலோசனையுடன்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

உடனடியாக அந்த ஊடகவியலாளன் குறித்த அந்த வெளிநாட்டு தூதரக அதிகாரியுடன் மீண்டும் தொடர்பு கொண்டு நீங்கள் எனக்கு கூறியதற்கு மாறாக றெபேட் ஒ பிளேக் கருத்து வெளியிட்டுள்ளாரே என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த அந்த அதிகாரி றொபேட் ஒ பிளேக் கூறியது இராஜதந்திர கருத்து நான் உங்களிடம் கூறியது உண்மையான தகவல் என்று விளக்கமளித்தார்.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் தொடர்புகள்-நல்ல நட்புகள் இருக்கினறது என்பதற்காக தூதுவர்கள் அல்லது மூத்த அரசியல்வாதிகள் தெரிவிக்கின்ற கருத்துக்களை செய்திகளாக அப்படியே வெளியிடக் கூடாது.

முதலில் அது குறித்து தமக்குள் சிந்திக்க வேண்டும். சமூக பொறுப்பு எது என்பதை உணர வேண்டும். அதற்கு இதுவரைக்கூறப்பட்ட மூன்று தொடர்பாடல் முறைகள் அவசியமாகின்றன.

## செய்தியின் சில வகைகள்

**உயிர்ப்புள்ள செய்திகள்:**

அழிவுகள்,சுகாதாரம், வன்முறைகள் போன்றவை அடங்குகின்றன.

சமுதாய போசணை அல்லது சமூக நலன் செய்திகள்:

தொழில், போசணை, வீடமைப்பு போன்ற அம்சங்கள் அடங்குகின்றன.

பிரச்சினை செய்திகள்:

போக்குவரத்து, சட்டம், அரசியல், காலநிலை போன்றன உள்ளடங்குகின்றன.

ஒருவரை மேம்படுத்தும் செய்தி:

கல்வியும் பயிற்சியும் அடங்குகின்றது,

மகிழ்ச்சி செய்தி:

விளையாட்டு, மனிதாபிமான செயற்பாடு, சூழல் அபிவிருத்தி என்பன அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்தியின் வெளிப்பாடு**

**அனுபவப் பகிர்வு:**

**எஸ்.எஸ்.செல்வநாயகம்**

தினபதி, சிந்தாமணி முன்னாள் பிரதம உதவி ஆசிரியர், டெய்லிமிரர் சிரேஷ்ட செய்தியாளர்

"Comment is free, but facts are sacred" இந்தக் கருத்துருவத்தை ஊடகத்துறையில் முன்வைத்தவர், புகழ்பூத்த பிரித்தானிய செய்தியாளர் சி.எஸ்.ஸ்கெட்(ஊ.ஞ.ஞஉ ழவவ).

சார்ள்ஸ் பிறெஸ்விச் ஸ்கொட் (Charles Prestwich Scott) 1846 அக்டோபர் 26 பிறந்து, 1932 ஜனவரி 1 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார்.

'மான்செஸ்டர் காடியன்' (Manchester Guardian) தற்போது 'காடியன்' (Guardian) ஆக பரிணாமம் அடைந்த தலைசிறந்த நாளிதழ்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஸ்கொட், 1872 தொடக்கம் 1929ஆம் ஆண்டுவரையிலான காலப்பரப்பில் இதன் பத்திராதிபராக பதவி வகித்து, அதனை வழிநடத்திச்சென்றவர்.

'Comment is free, but facts are sacred' இந்தக் கருத்துருவத்தை, 'கருத்துரை தனிவிருப்பார்ந்தது, ஆனால் ஆதாரச் செய்திகள் தனிக்காப்பொதுக்கீடானவை- தூயதன்மையானவை' என்று மொழியாக்கம் செய்யலாம்.

இந்தக் கருத்துருவத்தை நான் அசைபோடுவதற்கு நியாயமான காரணம் உண்டு.

எனது காத்தூர அதாவது நான்கு தசாப்தகால ஊடகத்துறைப் பயணம் அதனால் பட்ட சூடுகள்; அனுபவச்சுவடுகளை அரசல் புரசலாக இரைமீட்டுப் பார்க்கிறேன்.

எழுபதுகளில் ஊடகத்துறையில் கால்பதிக்கிறேன். யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி- அதாவது வடமாகாணத்திலும்கூட என்று நினைக்கிறேன் - பிராந்திய செய்திதாளான 'ஈழநாடு' தமிழ்த் தினசரி கொடிகட்டிப்பறந்த காலம் அது.

அந்தக் காலகட்டத்தில் நான் தளிர்விடத் தொடங்கிய இளநிலைச் செய்தியாளன். எனது தகைமையையும் ஆற்றலையும் கொம்பு சீவிக்கொண்டிருந்திருந்தேன்.

முழுநேர ஊடகவியலானாகிவிடவேண்டும் என்ற உந்துதல் மேலோங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இந்த அபிலாஷையில் பல்செதுக்கிக் கொண்டிருந்தேன்.

ஐம்பதுகளில் தமிழர் விவகாரத்தில் சிக்கல்கள் தலைதூக்கின. எழுபதுகளில் அவை முனைப்பெடுத்தன. யாழ்ப்பாணப் பொருளாதாரத்தை இடதுசாரி இயக்க அரசியல் முன்னோடிகளில் ஒருவரான என். சண்முகதாஸன் 'தபால் கட்டளைப் பொருளாதாரம்' என்று வர்ணித்தது ஞாபகத்திற்கு வருகிறது.

உண்மையில் வடமாகாண - குறிப்பாக யாழ்ப்பாணப் பொருளாதாரம் மூன்று முக்கிய காரணிகளில் தங்கியிருந்த காலகட்டம். ஒன்று:விவசாயம், இரண்டுகல்வி, மூன்று:அரசாங்க உத்தியோகம்.

அதிகாரத்திலுள்ளவர்களால் அரசாங்க உத்தியோகம் மற்றும் கல்வித்துறை வாய்ப்புகள் தமிழ்ச் சமூகத்தவர்களிடம் இருந்து படிப்படியாக பறிக்கப்பட்டன; மறுக்கப்பட்டன.

அரசின் மொழிக்கொள்கை மற்றும் சர்வகலாசாலை நுழைவுக்கான தரப்படுத்தல் அணுகு முறை ஆகியன முழுக்கமுழுக்க அரசாங்க உத்தியோகத்தையும் கல்வியையுமே நம்பியிருந்த தமிழ் இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் மத்தியில் அதிருப்தியையும் போக்கற்ற மனநிலையயும் தோற்றுவித்திருந்தன.

அன்று- இளநிலை ஊடகவியலாளனான நான், 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் சென்றேன் கடமையில் ஈடுபட்டேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய கல்விமான் சபாரத்தினம். அவர் செய்திதாளின் தலைமை ஆசிரியராக அதாவது, பத்திராதிபராகப் பொறுப்பேற்றிருந்தார்.

சற்றுக் கடுகடுப்பாக காணப்பட்ட அவர் என் முன் தபால் அட்டை ஒன்றை வைத்தார் படித்துப்பாரும் என்றார் அந்தத் தபால் அட்டை முழுக்கமுழுக்க அழகான ஆங்கில மொழிப்பிரயோகத்தில் எழுதப்பட்டிருந்தது.

என்னால் முதல்நாள் அறிக்கையிடப்பட்ட செய்தி பற்றியது அது காரசாரமாக எனது செய்திக்கு கடும் விமர்சனம் பத்திரிகாதர்மத்திற்கு மாறான செய்தி அறிக்கையிடப்பட்டுள்ளதாகக் சாட்டையடி பத்திரிகா தர்மம் பற்றிய போதனை.

அந்தத் தபால் அட்டையை அனுப்பிவைத்தவர் வேறு யாருமில்லை சாட்சாத் காந்தியவாதியான பேராசிரியர் கு.நேசையா என்ற தகைமைசார் கல்விமான். என்னால் முதல்நாள் அறிக்கையிடப்பட்ட செய்தி பற்றியதே அந்தத் தபால் அட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவதினம் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்கள் பூரண வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கனவான் மாஹாதந்தில யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளார். உண்மையில் அவர் மாவட்ட தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் மதிப்பு மிக்க ஓர் அரசாங்க அதிகாரி.

நான் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் மாணவர்களின் பாடசாலை வரவு எவ்வாறு இருக்கிறது என்று கேட்டேன்.

அவர் அரசாங்க அதிகாரியல்லவா? திருப்திகரமாக இருக்கிறது என்றார். நான் அவரை மேற்கோள்காட்டி செய்தியை அப்படியே அறிக்கையிட்டேன்.

ஆயினும் உண்மை நிலைமை நேர்மாறானது என்பது எனக்குத் தெரியும். அந்தத் தினசரியில் மாணவர்களின் முழு அளவிலான வகுப்புப்பகிஷ்கரிப்பு பற்றிய உண்மை நிலவரச் செய்தியும் அறிக்கையிடப்பட்டது.

ஓர் ஊடகவியலாளன் என்ற கோதாவில் இதில் ஒரு முக்கிய விடயத்தை இங்கு அழுத்தமாகக் குறிப்பிடுவது பொருத்தமானது. செய்தியின் மூல ஊற்று செய்தியாளன் அல்ல. அவன் செய்தியை உள்ளதை உள்ளவாறாகக் கொண்டுசென்று சேர்ப்பிக்கும் ஓர் ஊடகமாகவே செயல்படுகிறான். அவனுடைய கடமை அத்துடன் நிறைவடைகிறது.

தகவல் பாதகமாக இருக்கிறது. எனவே அவனது சிரத்தை சீவிவிடலாமா? ஊடகவியலாளனின் முக்கியப் பணிகளில் ஒன்று அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் முகத்திரையைக் கிழித்தெறிந்து, அவர்களின் போலித்தனத்தை அம்பலப்படுத்துவது - இதில் எத்தனைபேருக்கு உடன்பாடோ நானறியேன்.

'Comment is free, but facts are sacred' – தபால் அட்டையில் பேராசிரியர் நேசையாவினால் மேற்கோள் காட்டப்பட்ட அழவவழ அச்சொட்டாக எனது செய்தி அறிக்கைக்கு பொருந்துகிறது.

இதனைப் பத்திராதிபர் சபாரத்தினத்துக்குச் சுட்டிக்காட்டினேன். ஆவரின் முகத்தில் காணப்பட்ட கடுப்பு அகன்றது. அவர் அங்கிருந்து மெல்ல நகர்ந்துவிட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகளின் வடிவங்கள்

**சித்தரிப்பு**
**ஆவணம்**
**செவ்வி**
**புலனாய்வுச்செய்தி**
**நாடகம்**
**தாளலயம்**
**குறுந்திரைப்படம்**
**திரைப்படம்**




**சித்தரிப்பும் பெட்டகமும்** (Features)

சித்தரிப்பு (Features) என்பது இலத்தீன் மொழியில் -Factura என்ற பதத்தை குறிக்கின்றது.

நேயர்களுக்கு கடினமான செய்திகளை இலகுவாக கொண்டுசெல்லும் செய்திக்கதையே சித்தரிப்பு ஆகும்.

சித்தரிப்பு என்பது கதை சொல்லும் பாணியில் பெரும்பாலும் அமைந்திருக்கும்.

செய்திகளில் வழமையான இறுக்கத்தன்மையிலிருந்து விடுபட்டுக் கொள்ள இந்த சித்தரிப்பு உதவுகிறது. செய்தியைப் போன்று பிரதான விடயத்தை முன்னிலைப்படுத்தவேண்டிய அவசியம் சித்தரிப்பில் இல்லை.

என்றபோதும், அந்த விடயத்தை நேயர்களுக்கு, வாசகர்களுக்கு இலகுவாகக் கொண்டுசெல்லக்கூடிய முறையே சித்தரிப்பு செய்தி எனப்படுகிறது.



சித்தரிப்பு செய்தியை வர்ணப்படுத்துவதற்காக வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் குரல் பதிவுகள், இசைகள் சேர்க்கப்படுவதும் இந்த இலகுபடுத்தல் நடைமுறையின் அம்சங்களாகும்.

(நேரம்) 2 முதல் 5 நிமிடங்கள் வரையிலான சித்தரிப்புகளே வானொலி தொலைக்காட்சிகளை பொறுத்தவரை நேயர்கள் ரசிக்கக்கூடிய, பார்க்கக்கூடிய நேரமாக கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்தரிப்புக்களின் வகைகள்:**

1. வழக்கமான செய்திகளின் அடிப்படை.
2. செய்தியை அதன் சூழலுக்கே சென்று விளங்கிக்கொள்ளும்படியாக அமைத்தல்.
3. கருத்துப் பிரதிகளாக அமைதல். குறிப்பாக ஆசிரியர் உரைகள், நாட்குறிப்புக்கள், துணுக்குள் என்ற அடிப்படையில் அமையலாம்.

சித்திரிப்பை பொறுத்தவரையில் செய்திகளை போல் முதல் பந்தியிலேயே காட்டாமல், கூறவந்த செய்தியை சித்தரிப்பு அம்சத்தின் எந்த இடத்திலும் காட்டலாம்.

எனினும் "சித்தரிப்பு" ஆர்வத்தை தூண்டுவதாக அமைவது அவசியமாகும்.

**ஆவணச் செய்தி** (Documentary)




ஆவணச் செய்தி அல்லது நிகழ்ச்சி எனும்போது, அதன் ஆரம்பமும் முடிவும் மிகவும் உறுதியாகவிருத்தல் வேண்டும். பொதுவாக மருத்துவ, விஞ்ஞான மற்றும் ஆய்வு தொடர்பாக செய்திகள் இதில் அடங்குகின்றன. ஒலிபரப்பு, ஒளிபரப்பில், சித்தரிப்பு பெட்டக நிகழ்ச்சியெனும்போது அது குறுகிய காலப்பகுதியை கொண்டதாயிருக்கும்.

ஆவணச் செய்தி அல்லது நிகழ்ச்சியெனும்போது பெட்டக நிகழ்ச்சியைவிட நீண்டதாக இருக்கும். நிகழ்ச்சிக்குத் தேவையான உறுதியான இணைப்புகள் சேர்த்துக்கொள்ளப்படும் அதனைத்தவிர குரல் பதிவுகள் மற்றும் இசை என்பன ஆவணச் செய்தியில் முக்கியமானவையாக அமைந்திருக்கின்றன.

நேரம் : 5 முதல் 40 நிமிடங்கள் வரையிலான ஆவண நிகழ்ச்சி, வானொலி தொலைக்காட்சிகளைப் பொறுத்தவரை நேயர்கள் ரசிக்கக்கூடிய, பார்க்கக்கூடிய நேரமாக கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செவ்விக்காணல்**



ஒரு விடயம் தொடர்பில் உரிய ஆட்களுடன் கதைத்து முழுமைச் செய்தியை பெற்றுக்கொள்ளும் முறையே செவ்வி எனப்படுகிறது.

இந்த செவ்விக்காணலானது, அடிப்படை திறனையும் உயர்தர ஊடகவியல் பட்டயத்தையும் கொண்டிருக்கிறது.

இதற்காக ஊடகவியலாளர் ஒருவர் தம்மை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று கோரப்படுகிறது. எனினும் அதற்காக கலைப்பட்டதாரியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

சகல செவ்விகாணலுக்கும் ஒரு வரன்முறை இல்லை. எனினும் செவ்விக்காணலுக்கு சில உத்திகள் உள்ளன.

சில ஊடகவியலாளர்கள் அந்த திறமையை இயல்பாகவே கொண்டிருப்பர். சிலரிடம் அது இருக்காது.

அனுபவம் வாய்ந்த ஊடகவியலாளர்கள், செவ்விகாணலுக்காக சில (வுனிள) தரவுகளை கொண்டிருப்பர். செவ்விக்கு கடுமையான அதேநேரம் விரைவான ஒழுங்குமுறைகள் உள்ளன.

செவ்வி இரண்டு வகைப்படுகிறது:

1) செய்தி செவ்விக்காணல்

2) சித்தரிப்பு செவ்விக்காணல்

இதில் செய்தி செவ்விக்காணலுக்கு நடைமுறைச் செய்திகளில் இருந்து தரவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இதன்போது செவ்விகாண்பவர், மூன்று வகையான செவ்வி காணப்படுபவரிடம் இருந்து தகவல்ளை எதிர்ப்பார்ப்பவராக உள்ளார்.

செய்தியில் பங்கேற்பவர் அல்லது செய்தியை உருவாக்குபவர். உதாரணம் - வானூர்தி விபத்தில் உயிர்தப்பியவர்.

செய்தியை, கொள்கையை ஒரு துறையில் இருந்து உருவாக்குபவர்.

உதாரணம் - வெளியுறவு அமைச்சர்.

செய்தி நிகழ்வு அல்லது அரசியலால் பாதிக்கப்பட்ட ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப்பெறுமதி இல்லாத அல்லது பிரசித்தியற்ற ஒருவர் சித்தரிப்பு செவ்விகாணலின் கருவாக இருப்பார்.

இந்த நிலையில் தனி ஆள் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையிலும் சித்தரிப்பு உள்ளவராக இருப்பர்.

எனினும் ஊடகவியலாளரின் கற்பனை மற்றும் திறமை என்பனவே குறித்த சித்தரிப்பு செவ்விகாணலை வரையறுக்கும்.

**செவ்விக்காணலுக்கு முன்னர் செயற்படும் விதம்**

**தயார் நிலை**

செவ்விக்காணப்படுபவரின் தராதரம், செவ்விக் கருப்பொருள் தொடர்பில் சிறந்த தெளிவு உட்பட்ட தரவுகளை பெற்றுக்கொள்ளவேண்டும்.

அவ்வாறு தரவுகளை கொண்டு முன்னாயத்தம் இல்லாது போனால், செவ்விக்காணும் ஊடகவியலாளர் தமது மரியாதையை செவ்வி காணப்படுபவரிடம் இழக்கநேரிடும். அத்துடன் செவ்விக்காணப்படுபவரிடம் செவ்விக்காண்பவர் கட்டுப்படவேண்டியும் வரும்.

முக்கியமாக செவ்வியைக் காண்பவர், தம்மை ஒருவர் மதிக்கக்கூடிய அளவில் ஆடைகளை அணியவேண்டியது அவசியம் என்று கூறப்படுகிறது.

கேள்விகளை தயார்ப்படுத்தல்

செவ்விகாணப்படும் முன்னர் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளவேண்டியவை:

1) செவ்வியின் நோக்கம் என்ன?

2) கதையின் கருப்பொருள் என்னவாக இருக்கவேண்டும்?

இதன் பின்னர் கேள்விகளைப் பட்டியலிடவேண்டும்.

இதன்போது கேள்விகள் தெளிவான தன்மையில் நேரடிக் கேள்விகளாகவும் இறுக்கமானதாகவும் இருக்கவேண்டும்.

உங்களுக்கு நேரம் இருக்குமானால் செவ்விகாணப்படுபவரின் நடவடிக்கைகளைக் கொண்டும் கேள்விகளைத் தயாரித்துக் கொள்ளமுடியும்.

செவ்விகாணலின்போது ஆரம்பத்திலேயே செவ்வியின் மூலம் எதிர்பார்க்கும் விடயத்தை தெளிவாக குறிப்பிடவேண்டும்.

இதன்போது செவ்விக்காணப்படுபவருடன் செவ்விக்காண்பவர் வாய்மூல உடன்படிக்கை ஒன்றை செய்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வியின் நேரம், காலம், விடயம் என்ற அடிப்படையில் இந்த உடன்படிக்கை அமையலாம்.

**செவ்விகாணலின் போது -**

செவ்விக்காணப்படுபவருடன், செவ்விக்காணலுக்கு முன்னர் செவ்விக்காணபவர், இயல்பான கலந்துரையாடலை மேற்கொள்ளலாம்.

இதன்போது, தாம் யார் என்பதையும் தமது செவ்வியின் நோக்கம் என்ன என்பதையும் தெரிவிக்கமுடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் செவ்விகாணப்படுபவர் தொடர்பில் சில தகவல்களை தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அதேநேரம் எல்லாமே தமக்கு தெரியும் என்ற தோரணையில் செவ்விக்காண்பவர் தம்மை இனங்காட்டிக்கொள்ளக்கூடாது

செவ்வியை ஆரம்பிக்கும்போது (ழிநடெ நனெநன) தெளிவான முடிவான கேள்விகளை தொடுக்கவேண்டும்.

செவ்வி காண்பவர் எப்போதும் செவ்விகாணப்படுபவரின் கண்ணை உற்றுநோக்கியவராக இருப்பது அவசியம். இதனை நுலந ஊழவெயஉவ என்ற பதத்தால் அழைக்கலாம். இதன்மூலம் செவ்வி காணப்படுபவரின் சமாளிக்கும் முயற்சியை கட்டுப்படுத்தமுடியும்.

அத்துடன் கடினமான கேள்விகளை ஆரம்பத்திலேயே கேட்கவேண்டாம்.

செவ்விக்காண்பவருடன் அதிகமாக பேசவேண்டாம். அத்துடன் அவருடன் வாதம் செய்ய வேண்டாம்.

உங்களது நோக்கம் செய்திக்கதையை பெற்றுக்கொள்வதேதவிர, விவாதத்தில் வெற்றி பெறுவதோ அல்லது கற்பிப்பதோ அல்ல என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

செவ்விக்காணலின்போது உங்களின் சொந்தக்கருத்துக்களையும் விமர்சனங்களையும் வெளிப்படுத்தக்கூடாது செவ்விக்காணப்படுபவர் சொல்வதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வதைப்போன்று காட்டிக் கொள்ளவேண்டாம்.

அதேநேரம், செவ்விக்காண்பவரான நீங்கள், தெளிவுபடுத்தலுக்காக செவ்விக்காணப்படுபவரை தொடர்ந்தும் கேள்விகளில் தக்கவைத்துக்கொள்வதற்காக வுசநயனைபெ றயவநச கேள்விகளை தொடுக்கலாம்.

உதாரணம்: ஏன் அப்படி? அப்படியானால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், உங்கள் கேள்விகளுக்கு செவ்விக்காணப்படுபவர் பதிலை வழங்கும்போது நீங்கள் ஏற்கனவே தயார்படுத்தி வைத்திருக்கும் கேள்விகளைத் தவிர அவரின் பதிலில் இருந்துவரும் விடயங்களை வைத்துக்கொண்டு கேள்விகளைத் தொடுக்கலாம்.

அதற்கு செவ்வியின்போது கவனம் வேறுதிசையில் செல்லாமல் இருப்பது முக்கியமானதாகும்.

கேள்விகளைக் கேட்கும்போது நீங்கள் தயார்செய்துக்கொண்டு சென்ற கேள்விப்பட்டியலைப் பார்த்துப்பார்த்துக் கேள்விகளைக் கேட்கவேண்டாம். அது உங்களை வித்தியாசப் படுத்திக்காட்டிவிடும். அத்துடன் உங்களுடைய உடல்மொழியில் (Body Language) திடகாத்திரம் அவசியமானதாகும்.

**கவனிப்பு மற்றும் புத்திக்கூர்மையான சளைக்காத குணம்**
(Courteously and intelligently persistent)

கவனிப்பு இல்லாமல் சளைக்காதக் குணத்துடன் செயற்படுவது பயங்கரமானது. அதே போல புத்திக்கூர்மையில்லாத சளைக்காத குணம் (Obstinate) முரண்டுப்பிடிப்பதற்கு சமனானதாகும். எனவே செவ்விகாணலின்போது முரண்டுப்பிடிக்கவேண்டாம்.

செவ்வியின்போது உங்கள் கேள்விநேரம் வரும்போது முக்கிய கேள்வியை கேளுங்கள்.

கஷ்டமான சங்கடத்துக்கு உள்ளாக்கக்கூடிய கேள்விகள் இருக்குமானால் அவற்றை இலகுவான முறையில் கேட்கவேண்டும்.

சிலவேளைகளில் செவ்விக் காணப்படுபவர் தெளிவில்லாத பதிலை வழங்கினால், பதற்றமில்லாமல் உங்களின் கேள்விளை தெளிவாக அவரிடம் கேளுங்கள்.

நீங்கள் கேட்கும் கேள்விகள் யாவும் நீங்கள் எதிர்பார்க்கும் பதிலுக்கான கேள்விகளாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்களின் எதிர்பார்ப்பு செய்தி, செவ்வி மூலம் கிடைத்துவிட்டது என்று நீங்கள் நினைத்தால், அந்தச் செய்திக்கு வலுவூட்டக்கூடிய தரவுகளை திரட்டுவதற்கான கேள்விகளை தொடுக்கமுடியமானால் சிறந்தது.

அதற்காக நீதிமன்றத்தில் சட்டத்தரணி குறுக்குக்கேள்விகளைக் கேட்பதைப் போன்று கேட்கவேண்டாம். எப்போதும் நீங்கள் ஒரு ஊடகவியலாளர் என்ற நினைப்பில் கேள்விகள் கேட்கப்படவேண்டும்.

ஒரு சிறந்த ஊடகவியலாளர் மரியாதைக்குரியவர் ஆவார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபப்படவோ, துவண்டுபோகவோ மாட்டார்

ஒரு சிறந்த ஊடகவியலாளர் மரியாதைக்குரியவரும் ஆவார். அவர் கோபப்படவோ, துவண்டுப்போகவோமாட்டார்.

செவ்விக்காணலின்போது சிலர் உங்களுக்குத் தேவையான தகவல்களுக்கு மேலதிகமான தகவல்களை வழங்க முன்வருவர். சிலர் தகவல்களை வழங்குவதற்குத் தயக்கம் காட்டுவர். எனவே, நிலைமைக்கு ஏற்றவாறு செயற்படவேண்டியது செவ்விகாண்பவரின் நோக்கத்துக்கு உறுதுணையாக இருக்கும்.

செவ்விக்காணும்போது செவ்விக்காணப்படுபவர் சில விடயங்களைப் பதிவுச்செய்யவேண்டாம் என்று கூறினால் அதன்படி நடந்துக்கொள்ளவேண்டும். அதனைப் பிரசுரிக்கவோ அல்லது ஒலிபரப்பவோ வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொள்வாராக இருந்தால் அதனை செயற்படுத்தவேண்டும். இதன்போது செவ்விகாண்பவருக்கும் காணப்படுபவருக்கும் இடையில் புரிந்துணர்வு தொடரும். இது எதிர்காலத்திலும் உதவக்கூடும்.

**உணர்வுடன் கூடிய தொழில்திறன் குறிப்பு எடுப்பவர்**
(Be a sensible and skilful note- taker)

சிறந்த குறிப்புகள் சிறந்த தகவல் திரட்டலுக்கு வழிவகுக்கும்.

எனவே சரியான, விளங்கிக்கொள்ளக்கூடிய, பயனுள்ள குறிப்புகளை செவ்விகாண்பவர் பதிவுசெய்துகொள்வது அவசியம்.

**தகுந்த தரவுகள் தொடர்பில் கவனம்**
(Stay alert for relevant material)

செவ்விக்காணச் செல்லும்போது செவ்விக்காணப்படவேண்டியவர்களின் அனைத்து உத்தியோகபூர்வ விடயங்களையும் தெரிந்துகொண்டு செல்வது செவ்விகாண்பவரின் செய்திக்கதைக்கு உரமூட்டுவதாக அமையலாம். குறிப்பாக, செவ்விக்காணப்படுபவரின் குணநலன்களை தெரிந்துகொள்வது சிறந்ததாகும்.

**செவ்வியை நிறைவுசெய்வதற்கு முன்னர் பரீட்சிப்பு-**
(Have a last check before ending the interview)

செவ்வியை முடித்துக்கொள்ளலாம் என்று செவ்விக்காண்பவர் நினைக்கும்போது ஒருமுறை தாம் உரிய விடயங்கள் யாவற்றையும் கேள்விகள் மூலம் பெற்றுவிட்டோமா? என்று பரீட்சித்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் செவ்வி தொடர்பில் ஏதாவது மேலதிக கேள்விகள் இருப்பின் மீண்டும் தொடர்புகொள்வதாகக் கூறி, அவரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்தில் இருந்து சுமுகமாக வெளியேறுவது சிறந்தது.

**செவ்வியின் பின்னர்**

(After the interview)

செவ்வியை நிறைவுசெய்து அலுவலகம் திரும்பியபின்னர் செவ்விக்கண்டவர், தாம் பெற்றுக்கொண்ட தகவல்களைச் சரிபார்த்துக்கொள்ளவேண்டும். அதில் உள்ள விடயங்களுக்கு மேலதிகமாக ஏதாவது விடயங்களை சேகரிக்கவேண்டியிருப்பின் அவற்றை பெற்றுக்கொள்வது அவசியம்.

**தொலைபேசி செவ்வி**

(Telephone Interviewing)



உங்களது இடம் மற்றும் கேள்விகளை தயார்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு என்ன நோக்கத்துக்காக செவ்விக்காண விரும்புகிறார்கள் என்பதை செவ்விகாணப்படுபவரிடம் கூறுதல் வேண்டும்.

செவ்விக்காணப்படுபவர் சரியானவரா? என்பதை முதலில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

செவ்விக்காணப்படுபவர் சரியானவரா என்பதைத் தெரிந்துகொள்ளும்வரை, அவரிடம் திறந்த நிலையில் உங்கள் கேள்விகளைக் கேட்கத் துணியவேண்டாம்.

உங்களது கேள்விகளை தொலைபேசிக்கு முன்னால் வைத்துக்கொண்டு கேள்விகளை கேட்கும் போது உங்களிடம் இருந்து தாமதம் ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும்.

அதேநேரம் நேரடி செவ்வியைப்போன்றே பதில்களில் இருந்து வரும் விடயங்களை வைத்துக்கொண்டு கேள்வியை உடனடியாக கேட்கமுடியும்.

சிலவேளையில் நீங்கள் எதிர்ப்பார்க்காத விடயங்கள் பதிலில் இருந்து வெளிப்படுமானால் அவற்றை வைத்துக்கொண்டு விடயங்களை அறிந்தபின்னர் மீண்டும் உங்களுக்கு தேவையான நோக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்கு வந்துவிடவேண்டும்.

அதாவது செய்தி நோக்கத்தை மாற்றுவதற்கு, புரள்வதற்கு செவ்விகாணப்படுபவருக்கு வாய்ப்பளித்துவிடக்கூடாது.

## செய்தி திரட்டல்




செய்தி எழுதல் என்ற விடயமானது, ஊடகவியலாளரின் இரண்டாவது கடமையாகும். அவரின் முதல் கடமை செய்திகளைச் சேகரிப்பதாகும்.

செய்தி சேகரிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்:

1) கவனிப்பு (Observation) -


   செய்தி இடம்பெற்ற இடத்துக்கு செல்லல்.

2) பொதுமக்களுடன் கதைத்தல்

3) விசாரித்தல்

சிறந்த ஊடகவியலாளர் ஒருவர், செய்தி ஒன்றுக்கான நல்ல (Nose) நுகர்ச்சியைக் கொண்டிருப்பார்.

இந்தநிலையில் குறித்த ஊடகவியலாளர், எங்கே? எப்போது? பார்க்கவேண்டும் என்பதையும் யாரை எவ்வாறு விசாரித்து அறிந்துக்கொள்ளவேண்டும் என்பதையும் அறிவார்.




அத்துடன், ஊடகவியலாளர் செய்திச்சேகரிப்பின்போது செய்தி விடயங்களுக்கான குறிப் புகள், பதிவுகள், தரவுகள், சாட்சியங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்களையும் மேற்கொள்வார்.

இதனையடுத்து செய்தி இடம்பெற்ற இடத்தில் விடுபட்ட விடயங்களை செய்தி அறைக்குச் சென்றபின்னர் பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டு, தேவையான தொலைபேசி இலக்கங்களையும் ஊடகவியலாளர் தம்வசம் கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டங்களில் செய்திசேகரித்தல்



பொதுவாக பொதுக்கூட்டங்களில் செய்தி சேகரிப்பதற்கு (Cub Reporters) இளம், குருளை மற்றும் அனுபவமில்லாத பயிற்சி நிலை ஊடகவியலாளர்களே பயன்படுத்தப்படுகின்றனர்.

பேச்சுக்களையும் பொதுக்கூட்டங்களையும் மையப்படுத்தி செய்தி சேரிப்பதே அந்த துறையின் முதல் திறனாக கருதப்படுவதால் பயிற்சி ஊடகவியலாளர்கள் அடிக்கடி பொதுக்கூட்டங்களையும் பேச்சுக்களையும் மையப்படுத்தி செய்தி சேகரிக்க அனுப்பப்படுகிறார்கள்.

இரண்டாவதாக பொதுக்கூட்டங்களும் பேச்சுக்களும் நேரடியான தகவல்களை தருவதால் அதனை கையாள்வது இலகுவாக உள்ளது.

மூன்றாவதாக, பொதுக்கூட்டங்கள் மற்றும் பேச்சுக்கள் என்பன எப்போதுமே ஊடகங்களில் இடம்பெறும் ஒன்றாகையால், ஆரம்பநிலை ஊடகவியலாளர் அவற்றுக்கு அனுப்பப்படுகிறார்.

இதன்போது ஊடகவியலாளர், கூட்டம் அல்லது பேச்சு பற்றிய ஆரம்பத்தகவல்களை அறிந்திருப்பது நல்லது.

கூட்டத்தின் நோக்கம், அதில் பங்குபற்றுநர்கள், பேசப்படவுள்ள முக்கியப் பிரச்சினை, அந்தப் பிரச்சினைகளின் அடிப்படைகள் என்பவற்றை ஊடகவியலாளர் தெரிந்துவைத்திருக்கவேண்டும்.

கூட்டங்களுக்கு நேரத்துடன் செல்வது நல்லது. இதன்போதே கூட்டத்தில் இறுதிநேரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் ஏனைய விடயங்களை தெரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

கூட்டத்துக்கு முன்னரேயே பங்குபற்றுநர்களின் பெயர்கள் மற்றும் பதவி நிலைகளை சரியாகப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம்.

பொதுக்கூட்டத்தில் அல்லது பேச்சுக்களில் பங்குபற்றுநர் உரிய நேரத்துக்கு வராமல் தாமதித்து வருவாராக இருந்தால் அதன் காரணத்தை அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அதுவும் ஒரு முக்கிய செய்தியாக அமைந்துவிடலாம்.

கூட்டத்துக்கு செல்லாமல் சக ஊடகவியலாளரிடம் செய்தியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இருப்பதால் கூட்டத்துக்கு அப்பாற்பட்ட பல முக்கிய அம்சங்களைத் தமது ஊடகத் தின் மூலம் பிரசுரிக்க அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்ப முடியாதநிலை ஊடகவியலாளருக்கு ஏற்படும்.

அத்துடன் பேச்சு அல்லது பொதுக்கூட்டம் ஆரம்பமாகும் முன்னரும் பின்னரும் பேச்சாளருடன் தனியாகக் கலந்துரையாடி, அவரிடம் இருந்து மேலதிக தகவல்களை கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது சிறந்தது.

பேச்சுக்களைப் பொதுக்கூட்டங்களில் செய்திகளைச் சேகரிக்கும்போது, கவனமாக செவிமடுத்தல் என்பது அவசியமானது. இதன்மூலம் உரிய சொற்பதங்கள், மற்றும் கருத்துக்களை அப்படியே பதிவுசெய்துகொள்ளமுடியும்.

இல்லையெனில் ஏனையவர்களை அல்லது பேச்சாளர்களை மீண்டும் தொடர்புக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். செய்திதாள்களுக்கு இது சாத்தியமானதாக உள்ளபோதும் ஒலிபரப்பு ஊடகங்களுக்கு சாத்தியமானதாக அமையாது. கூட்டத்தின்போது, அதில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள், யோசனைகள், அனுமதிகள்,அறிவித்தல்கள், மற்றும் ஒரு செய்தியை உருவாக்கக்கூடிய வாதங்கள், சவால்கள், கூட்டத்தில் பங்கேற்ற சனத்தொகை, என்பவற்றை கவனமாக சேகரிக்கவேண்டும்

**செய்தி சேகரிப்பின் பின்னர் -**

பொதுக்கூட்டங்களின் பேச்சுக்களை செய்தியாக சேகரித்த பின்னர் அவற்றைக்கொண்டு தலைப்பு சம்பவம், அதன் சந்தப்பம், தலைப்புக்கான காரணம், சேகரிப்பட்ட செய்தியைக் கொண்டு இரண்டாவது தலைப்பு சம்பவம், என்ற தொடர் அடிப்படையில் செய்தி தயாரிக்கப்படல்வேண்டும். இதன்போது உறுதிப்படுத்தல்கள் மற்றும் மேலதிக தகவல்களுக்காக அதிகாரிகளைத் தொடர்புக்கொள்ளலாம்.

சிலவேளையில் பொதுக்கூட்டங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பேச்சுக்கள் முன்கூட்டியே செய்தித்தாள்களுக்கு அனுப்பப்பட்டு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் பிரசுரிக்கப்படக் கூடாது (நஅடியசபழ) என்று கேட்கப்படுவதுண்டு.

அதனை ஊடகவியலாளர்கள் உரிய முறையில் கடைப்பிடிக்கவேண்டும்.

**விபத்து தொடர்பான செய்தி சேகரித்தல்**



சம்பவ இடத்துக்குச் சென்று சம்பவத்தை சேகரித்தல், அதன்போது என்ன நடந்தது? எங்கே? சம்பவத்தில் எத்தனை பேர் சம்பந்தப்பட்டிருந்தனர்? காயமடைந்தவர்கள் அல்லது மரணமானவர்களின் பெயர் விபரங்கள், தொழில், தற்போதைய நிலை, சேதவிபரம், மீட்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகள் விபரம், சாட்சிகள், விபத்து இடம்பெற்றவிதம், நீதிசம்பந்தமான ஏதாவது காரணங்கள், இதன் பின்னணியில் இருக்கக்கூடிய சித்தரிப்பு அல்லது அடிப்படைகள் போன்றவை முக்கியமானவையாக இருக்கும்.

குற்றச்சம்பவங்கள், காவல்துறை மற்றும் நீதிமன்ற செய்தியிடல் - செய்தி சேகரித்தல்

குற்றச்சம்பவங்கள் தொடர்பில் செய்தி சேகரிக்கும் போது செய்திசேகரிப்பின் அடிப்படைகளில் மாற்றங்கள் இல்லை.

எனினும் ஆரம்பநிலை அல்லது பயிற்சி ஊடகவியலாளர்கள் இந்த செய்தி சேகரிப்புக்கு பயன்படுத்தப்படுவதில்லை.



குறித்த செய்தி சேகரிப்பின்போது அடிப்படையில் நீதிமுறைகளை ஊடகவியலாளர் ஒருவர் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகும் என்பதும் தேவையற்ற நீதிப்பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்பதன் காரணமாக ஆரம்பநிலை ஊடகவியலாளர்கள் இந்தச்செய்தி சேகரிப்புக்கு பயன்படுத்தப்படுவதில்லை.

**அனுபவப் பகிர்வு:**

**குற்றச்செயல்கள் தொடர்பான செய்தி அறிக்கையிடல்**

**இரா. செல்வராஜா**

*சிரேஷ்ட ஊடகவியலாளர் (பாதுகாப்பு)*

சகல செய்தி ஊடகங்களிலும் குற்றங்கள் தொடர்பான செய்திகள் ஊசஅைந நெறள இடம் பெறுகின்றன.

சில குற்றச் செயல்கள் கதைகளைப்போல் அமைவதால் அவற்றை வாசிப்பதில் வாசகர்கள், நேயர்கள் அவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர்.

அதனால் சில செய்தி ஊடகங்கள் குற்றம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன.

பொதுவாக சட்டத்திற்கு எதிராகவோ மீறிச் செய்யும் எந்தச் செயலையும் குற்றம் எனக்கூறுகிறோம்

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, இலஞ்சம் வாங்குதல், மோசடி செய்தல், மோசடி செய்தல், அதிகார துஷ்பிரயோகம், மோதல்கள் என்பன குற்றங்களாக கணிக்கப்படுகின்றன.

குற்றங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. தனி மனிதருக்கு எதிரானவை
(கொலை, கடத்தல், பாலியல் வல்லுறவு, தாக்குதல்)

02. சொத்துக்கு எதிரானவை
(கொள்ளை, திருட்டு, ஏமாற்றுதல், தீவைத்தல்)

03. பொது நலனுக்கு எதிரானவை
(பலதார திருமணம், கலகம். பாலுணர்வுக் குற்றங்கள்)

04. சட்டபூர்வமான அதிகாரத்திற்கு எதிரானவை
(அரசாங்க அதிகாரிகளை கடமையை செய்யவிடாமல் தடுத்தல், லஞ்சம் பெறுதல்)

குற்றச் செயல்கள் தொடர்பான செய்திகளை விளக்கமாக எழுதுவதன் மூலமே வாசகர்களை ஈர்க்கமுடியும்.

பொதுவாகக் குற்றச்செய்திகளை காவல்துறை நிலையங்கள், காவல்துறை தலைமையகம், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் ஆகிய இடங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதனால் குறித்த துறைகளுடன் தொடர்புகளை வைத்திருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

குற்றச்செய்திகள் எழுதுபவர்கள், காவல்துறை மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பான மூலங்களாக உள்ள அதிகாரிகளின் பதவி நிலைகள் குறித்து உரிய தெளிவைக் கொண்டிருக்கவேண்டும்.

உதாரணமாக காவல்துறையை எடுத்துக்கொண்டால் காவல்துறை உத்தியோகத்தர், பரிசோதகர், உதவி மேற்பார்வையாளர், மேற்பார்வையாளர், பிரதம மேற்பார்வையாளர், உதவி காவல்துறை அத்தியட்சகர், காவல்துறை அத்தியட்சகர், சிரேஷ்ட அத்தியட்சகர், பிரதி காவல்துறை மா அதிபர், காவல்துறை மா அதிபர் என்று அமைந்துள்ளன. பிரதி காவல்துறை மா அதிபர், காவல்துறை மா அதிபர் என்று அமைந்துள்ளன.

சகல காவல்துறை நிலைகளிலும் குற்றத்தடுப்பு பிரிவு உள்ளது.

இங்கு பெரும்பாலும் குற்றம் தொடர்பான அனைத்து செய்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனைத் தவிர காவல்துறை நிலையங்களில் சிறு குற்றப்பிரிவு (MO Branch) போக்குவரத்துப் பிரிவு ஆகியன அமைந்திருக்கும்.

காவல்துறை நிலையம் ஒன்றுக்கு மேற்பார்வையாளர் (இன்ஸ்பெக்டர்) தரத்திலான அதிகாரி ஒருவரே பொறுப்பதிகாரியாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தநிலையில் காவல்துறை நிலைய அதிகாரிகளுடன் சிறந்த புரிந்துணர்வான முறையில் தொடர்புகளை வைத்திருப்பதன் மூலம் செய்திகளை இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாட்டில் அனைத்துக்காவல்துறை நிலையப்பிரிவுகளில் நடைபெறும் குற்றச்செயல்கள் தொடர்பான செய்திகளைக் காவல்துறைத் திணைக்களப் பேச்சாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

பொதுவாக அவர் குற்றச் செயல்களின் சாராம்சத்தையே தெரிவிப்பார்.

எனினும் சம்பவம் நடந்த இடத்தில் உள்ள காவல்துறை நிலையத்துடன் தொடர்பு இருந்தால் அந்தச் சம்பவத்தின் பூரண விபரங்களை எம்மால் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்.

முடிந்தவரை நேரில் சென்று செய்திகளைச் சேகரிப்பதே குற்றச்செயல்கள் தொடர்பான செய்தியிடலுக்கு மிகவும் பயனளிக்கும்.

குற்றம் தொடர்பான செய்திகளை எழுதும் ஊடகவியலாளர், காவல்துறைக் கட்டுப்பாட்டு அறை, அவசர காவல்துறைப் பிரிவு, மருத்துவமனை, தீயணைப்பு அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகளை வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

குற்றங்கள் தொடர்பான செய்திகளை எழுதுபவர்கள் குற்றப்புலனாய்வு (Investigate Crime reporting) செய்திகளை எழுதுவதன் மூலம் புகழடைய முடியும். உதாரணமாக, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிக்ஸனின் (Nixon) நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் குறித்து Washington Post என்ற இதழில் பணியாற்றிய Woodward மற்றும் Bernstien ஆகிய இரு ஊடகவியலாளர்களும் 'வோட்டர் கேட்' (Watergate Story) என்ற தலைப்பில் செய்திகளைப் புலனாய்வு செய்து வெளியிட்டதால் ஜனாதிபதி நிக்ஸன் பதவி விலகவேண்டிய நிலை ஏற்பட்டது.




ஆகவே குற்றச்செய்திகளை எழுதும் ஊடகவியலாளர்கள் குற்றப்புலனாய்வுச் செய்திகளை தேடி ஆதாரத்துடன் வெளியிடுவதன் மூலம் புகழடைய முடியும்.

நான், குற்றங்கள் தொடர்பான பாதுகாப்புத்துறை செய்தியாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி செய்தித் தாளில் பணியாற்றியபோதும் பின்னர் சக்தி எப். எம் வானொலியில் செய்தி ஆசிரியராக பணியாற்றியபோதும் எனது தொடர்புகளைக் கொண்டு பாதுகாப்புத்துறை செய்திகளை அதிகளவில் வெளிக்கொணரக்கூடியதாக இருந்தது.

இந்தநிலையில், குற்றங்கள் மற்றும் பாதுகாப்புத்துறை செய்திகளை சேகரிக்கும்போது பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலை உள்ளது.

இதனை நான் 1985 ஆம் ஆண்டில் எதிர்கொள்ள நேரிட்டது. தினபதி, சிந்தாமணி செய்திதாள்களில் பணியாற்றியபோது, யாழ்ப்பாணத்தின் நிலைமைகளைப் பற்றி செய்தி சேகரிப்பதற்காக நானும் சிரேஸ்ட புகைப்படச் செய்தியாளர் பேர்ட்டி மெண்டிஸூம் அங்கு சென்றோம்.

அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் போராளி இயக்கங்களின் நடவடிக்கைகள் அதிகளவில் இருந்தன.

சுபாஸ் விருந்தகத்தில் நாங்கள் தங்கியிருந்தபோது அங்கு வந்த ஒரு போராளிக்குழு, எங்களின் கண்களைக் கட்டி, விசாரணைக்காக அழைத்துச் சென்றது.

சுமார் 6 மணித்தியால விசாரணையின் பின்னர், எங்களை மீண்டும் சுபாஸ் விருந்தகத்துக்குச் செல்ல அனுமதித்த குறித்த குழுவினர், மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறவேண்டாம் என்று உத்தரவிட்டனர்.

அதற்கமைய நாங்களும் விருந்தகத்திலேயே தங்கியிருந்தோம். இந்தநிலையில் நாங்கள் உண்மையான செய்தியாளர்கள் என்பதையும் இலங்கை அரசாங்கத்தின் உளவாளிகள் அல்லர் என்றும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் எங்களை குறித்த போராளிக்குழு யாழ்ப்பாணத்தில் இருந்து செல்ல அனுமதித்தது.

எனவே, இவ்வாறான சம்பவங்களை எதிர்கொண்டு செய்திகளைச் சேகரித்து அவை செய் தித்தாள்களில் பிரசுரமாகும்போது அதிலுள்ள திருப்தியைப் பணக்கொடுப்பனவுகளால் ஈடு செய்யமுடியாது.

**குற்றம் மற்றும் நீதிமன்ற செய்தி சேகரிப்பின் நான்கு படிமுறைகள்:**

குற்றம்
கைதுகள்
விசாரணை அல்லது விசாரணைகள்
தீர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றம்**

ஒருவர் குற்றம் சுமத்தப்பட்டுக் கைதுசெய்யப்படும்வரை குற்றம் தொடர்பான செய்தி சேகரிப்புக்கு நீதி வரையறை இல்லை.

இந்தச் செய்தியின்போது தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்கள், உவமானங்கள், தேவையில்லை.

முக்கியமாக காவல்துறையினரின் அறிக்கையை இந்தச் செய்திகளில் பயன்படுத்துவது சாலப்பொருத்தமாகும்.

ஏனெனில், குற்றம் எனும்போது நேயர்களை தெரிவுசெய்து செய்தியைப் பிரசுரிக்க ஒலி, ஒளிபரப்பு செய்யமுடியாது. அது முழுச் சமூகமும் கேட்கக்கூடிய ஒன்றாகும்.

**கைது**

கைதுசெய்யப்பட்டவர் மீது விசாரணையின்போது குற்றம் சுமத்தப்படும்வரை குற்றவாளி என்று கோடிட்டு செய்தியை வெளியிடமுடியாது. அத்துடன் அவரின் பெயரையும் வெளியிடக் கூடாது.

இதன்போதும் காவல்துறையினரின் அறிக்கையை கோடிட்டுக் காட்டமுடியும்.

**விசாரணை**

விசாரணை நடைபெறும்போது மாத்திரம் கைதுசெய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டவரின் பெயர் உட்பட்ட விபரங்களை குறிப்பிடமுடியும்.

**நீதிமன்ற செய்தி வெளிப்பாடு**



நீதிமன்ற செய்தி வெளியிடுகையின்போது செய்திகள் தெளிவான தகவல்களை கொண்டிருக்கவேண்டும்.

அதாவது, நீதிமன்றம் எதனைக் கூறுகிறதோ அதனையே செய்தியாக வெளியிடமுடியும்.

நீதிமன்றச் செய்தியுடன் நீதிமன்றத்துக்கு வெளியில் கிடைத்த செய்தியையும் இணைக்கக்கூடாது. அது மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

**தீர்ப்பு**

மேன்முறையீடு செய்யப்படாதுபோனால் தீர்ப்பு வழங்கப்படும்போது அது இறுதியான பொறுப்பாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனினும் மேன்முறையீடு செய்யப்படுமானால் ஊடகவியலாளர் என்ற ரீதியில் மேன்முறையீட்டுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

இதேவேளை தீர்ப்பு வழங்கப்பட்டபின்னர் அது தொடர்பாக விமர்சிக்க ஊடகவியலாளருக்கு முடியாது.

**நீதிமன்றக் கட்டமைப்பு**

நீதிமன்ற கட்டமைப்பில் நீதிமன்றங்களின் நீதிபதிகள் வெவ்வேறு பெயர்களை கொண்டு அழைக்கப்பகிறார்கள்.

குறிப்பாக நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி, நீதவான் என அழைக்கப்படுகிறார்.

மாவட்ட நீதிமன்றங்களில் மற்றும் மேல் நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரணை செய்பவர்களை நீதிபதி என்று அழைக்கின்றோம்.



மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரிப்பவர்கள் நீதியரசர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

நீதவான் நீதி மன்றத்தில் பராமரிப்பு மற்றும் குற்றவியல் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

மாவட்ட நீதிமன்றத்தில் மற்றும் மேல்நீதிமன்றத்தில் குடியியல் மற்றும் குற்றம் சம்பந்தமான விசாரணைகள் இடம்பெறுகின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனைய நீதிமன்றங்களின் தீர்ப்புகள் தொடர்பிலான மேன்முறையீடுகள் விசாரிக்கப்படுகின்றன.

உயர்நீதிமன்றத்தில் சட்டவியாக்கியானம் மற்றும் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன.

**நீதிமன்ற அவமதிப்பு**

நீதிமன்றசெய்திகள் தொடர்பான அடிப்படை சட்டவிதிகள் குறித்து ஊடகவியலாளர்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

இல்லையேல் நீதிமன்றச் செய்திகளுக்காக அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பதில் சொல்லவேண்டியேற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் - பெண் ஒருவரின் கொலை தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்பது செய்தியாக வெளியிடப்படுகிறது.



எனினும் இதில் நீதிமன்றமே பெண் கொலை செய்யப்பட்டாரா? இல்லையா? என்பதை தீர்மானிக்கவேண்டும். எனவே, செய்தியில் வெளியிடப்பட்ட விடயம் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும்.

## நாடாளுமன்ற செய்தி சேகரிப்பு

நீதிமன்ற செய்தி சேகரிப்புப்போன்றே நாடாளுமன்றச் செய்திசேகரிப்பும் முக்கியமான ஒன்றாகும். .

இலங்கையை பொறுத்தவரை நாடாளுமன்றமே சட்டவாக்க உயர்ச்சபையாக கருதப்படுகிறது. எனவே அங்குள்ள செய்திகள் பெரும்பாலும் நாடாளுமன்ற ஹன்சாட் என்ற பதிவுப்புத்தகத்தில் பதிவுசெய்யக்கூடிய செயதிகளாகவே இருக்கும்



ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படும் செய்திகள் பிரசுரிக்க மற்றும் ஒலி, ஒளிபரப்பமுடியாதவை என்று வரையறுக்கப்பட்டுள்ளன.

**அனுபவப் பகிர்வு:**

**பாலசுப்பிரமணியம் கிருபாகரன்,**

*நாடாளுமன்றச் செய்தியாளர், உதவி ஆசிரியர், தினக்குரல்.*

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக அரசாங்கம், நாடாளுமன்றம், நீதித்துறை மற்றும் ஊடகம் என்பன திகழ்கின்றன. இதில் நாடாளுமன்றத்துக்கும் ஊடகங்களுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் நெருங்கியது.

ஊடகத்துறையைப் பொறுத்தவரை ஊடகவியலாளர் களுக்கு செய்திகளைச் சேகரிக்க முதல் இரு சிறந்த வழிகளாக யுத்தகளமும் நாடாளுமன்றமுமே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்றமாகவும் உள்ளது. இலங்கை நாடாளுமன்றம் பொது வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படும் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இந்த உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் 225 உறுப்பினர்களில் 196 பேர் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் மிகுதி 29 பேர் தேசிய அளவில் கட்சிகள் பெறும் வாக்கு எண்ணிக்கைகளுக்கேற்ப கட்சிகளின் தேசியப்பட்டியலில் இருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் விடயங்கள், வாதப் பிரதிவாதங்கள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும்.

இந்தப் பணியை ஊடகவியலாளர்கள் தத்தமது ஊடகங்கள் மூலம் நாடாளுமன்றத்துக்கு வெளியே கொண்டுசெல்லவேண்டும். ஊடகங்களுக்கும் நாடாளுமன்றத்துக்குமிடையே இரு வழித்தொடர்புகள் உள்ளன.

அதாவது நாடாளுமன்ற விவாதங்களுக்கான விடயங்களை ஊடகங்களே வழங்குகின்றன.

அதேசமயம் ஊடகங்களுக்கான செய்திகளை பாராளுமன்ற வாதப்பிரதிவாதங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் நாட்டின் அரசியல் தலைமைத்துவங்களில் கூட பாரிய மாற்றங்களைக் கொண்டுவரமுடியும்.

நாடாளுமன்றச் செய்தியாளர்கள் அங்கு நடைபெறும் அனைத்து விடயங்கள் மற்றும் வாதப் பிரதிவாதங்களையும் செய்தியாக்க முடியாது.

ஊடகவியலாளர்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் விடயங்களுள் முக்கியமானவற்றை, எவை மக்களின் கவனத்தை ஈர்ப்பவை என்பதைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு அதனை வழங்கவேண்டும்.

நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தைப் பார்த்தால் அதில் செய்தியறிக்கைகளுக்குத் தேவையற்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

ஆனால் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வாய்மூல விடைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்கள் எனும் கேள்வி நேரம் செய்தியாளர்களுக்கு மிக மிக முக்கியமானதாகும்.

இது பரபரப்பானதும் மக்களின் கவனத்தை ஈர்ப்பதுமான விடயமாகும்.

நாடாளுமன்றச் செய்தியாளர்கள் நாடாளுமன்ற உரிமைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் வாதப்பிரதிவாதங்களை பிரசுரிக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினரால் ஆற்றப்பட்ட உரையோ அல்லது வாதமோ கருத் துப் பிழையாக அமையக்கூடாது.

அத்துடன் ஏதாவது தவறான கருத்துகளுடன் செய்தி வெளியிடப்பட்டால் அதற்கான தண்டனையும் உண்டென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் உரைகள் அல்லது வாதப் பிரதிவாதங்களை சபாநாயகரோ அல்லது சபாபீடத்திற்குத் தலைமை தாங்குபவரோ தடை செய்திருந்தால் அதனைப் பிரசுரிக்கவோ வெளியிடவோகூடாது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னைப்பற்றி தவறான செய்தி எதுவும் வெளியிடப்பட்டிருந்தால் அதனைப் பற்றி சபாநாயகருக்கு எழுத்துமூலமான முறைப்பாட்டைத் தெரிவிக்கவேண்டும்.

நாடாளுமன்ற உரிமைகளின் பிரகாரம் நாடாளுமன்றக் குழுவானது பிரதமரின் தலைமையின் கீழ் இயங்கும். இக்குழு நாடாளுமன்றச் செய்தியாளர்களின் பிழைகளை பாரபட்சமின்றி விசாரிக்கும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

எனவே சரியான செய்திகளை வெளியிடவும் எதனை வெளியிடக்கூடாது என்பதனைத் தெரிந்துகொள்ளவும், நாடாளுமன்றச் செய்தியாளர்கள் நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் பற்றி அறிந்தி ருத்தல் அவசியம். இது செய்தியாளர்களின் திறன் விருத்திக்கும் சிறந்த செய்திகளை வழங்குவதற்கும் உதவியாக இருக்கும்.

நாடாளுமன்றச் செய்தியாளர் என்பது சாதாரண விடயமல்ல. அதற்கென சில சிறப்புத் தகுதிகள் வேண்டும். மொழியறிவு, விடயங்களைக் கிரகிக்கும் ஆற்றல், வேகமான எழுத்தாற்றல் மற்றும் அரசியல் தொடர்புபட்ட அறிவாற்றல்கள் அவசியம். இன்று எமது நாட்டிலுள்ள தமிழ் அச்சு ஊடகங்களான தினக்குரலின் தலைமை ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், பிரதம ஆசிரியர் கே.ஆர்.பி.ஹரன், வீரகேசரி வாரஇதழின் ஆசிரியர் ஆர்.பிரபாகரன், தினசரி ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரொளி ஆசிரியர் ஆர்.சிவராஜா, தினகரன் பிரதம ஆசிரியர் தில்லைநாதன் போன்றோர் நாடாளுமன்ற செய்தியாளர்களாகவிருந்து பின்னர் பதவியுயர்வு நிலைகளுக்கு வந்துள்ளனர்.



நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்கு அரசியல்வாதிகளிடையே ஒரு தனி மரியாதையுண்டு.

ஓர் அரசியல்வாதி வெளியில் ஒரு கூட்டத்தை நடத்தினாலோ அல்லது உரையொன்றை நிகழ்த்தினாலோ அதனை மக்கள் கேட்க சந்தர்ப்பம் உண்டு.

ஆனால், தமது பிரதிநிதி நாடாளுமன்றத்தில் என்ன பேசுகின்றார் என்பதனை மக்களால் தெரிந்துகொள்ள முடியாது.

ஏனெனில் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வரமுடியாது. அதேபோன்று தனது மக்களுக்காக அந்த அரசியல்வாதி நாடாளுமன்றத்தில் பேசும் பேச்சை அவரால் ஊடகத்தைத்தவிர வேறு வழிகளால் தமது மக்களிடம் சேர்ப்பிக்கவும் முடியாது.

அதனால்தான் நாடாளுமன்றச் செய்தியாளர்கள்மீது அரசியல்வாதிகளுக்கு தனிப்பாசம் உண்டு. அதனால்தான் தமக்கு வேண்டிய செய்திகள், தகவல்களை அரசியல்வாதிகளிடம் இருந்து நாடாளுமன்றச் செய்தியாளர்களால் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நாடாளுமன்றச் செய்தியாளராகவிருக்கும் எனக்கு நாடாளுமன்றமூடாகக் கிடைத்த அனுபவங்கள் பல்வகைப்பட்டன. இந்தக்காலப் பகுதியில் தான் நாடாளுமன்றத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்வுகள் நடந்தேறின. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது கொண்டுவந்த தமிழீழ விடுதலைப்புலிகளுடனான ஆழிப்பேரலை நிவாரணப் பொதுக்கட்டமைப்பு, அதன் விளைவாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல்கள், நாடாளுமன்றக் கலைப்பு, நாடாளுமன்றத்தில் யுத்த வெற்றி அறிவிப்பு மற்றும் அதன் வெற்றிக்களியாட்டங்கள், அவசரகாலச் சட்ட நீக்கம், 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், திவிநெகும சட்டமூலம், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை போன்றவற்றை இதற்கு உதாரணங்களாக குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று 24 இற்கும் மேற்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கட்சி தாவியமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கட்சி தாவியமை, அதே போன்று அரச தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்குப் பல உறுப்பினர்கள் வந்தமை, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா எம்.பி.யானமை, பின்னர் அவர் நாடாளுமன்ற. பதவியை இழந்தமை, அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர். ஒருவர் தமது பதவியை இழந்தமை, தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியாகவிருந்த கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன் அமைச்சரானமை, நாடாளுமன்றம் முதற்தடவையாக வெள்ளத்தால் மூழ்கியமை போன்ற விடயங்களையும் கூறலாம்.

இதுமட்டுமன்றி இந்த 10 வருட காலப்பகுதிக்குள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், சிவனேசன், ஐ.தே.க.ட்சியின் மகேஸ்வரன், அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, தசநாயக்க போன்றோர் படுகொலைசெய்யப்பட்டனர்.

இவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் நடந்தபோது நான் நாடாளுமன்றச் செய்தியாளராகவிருந்தது எனக்குப் பல்வேறுபட்ட அனுபவங்களைத் தந்ததுடன், என்னைப் புடம்போடவும் வழி வகுத்தது. அதேபோல் அரசியல் தொடர்பான பட்டறிவையும் தந்துள்ளது.

இன்று கொழும்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் இதழியல் பயிற்சிபெறும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நாடாளுமன்றம் தொடர்பான விசேட வகுப்புகளை நடத்துவதற்கு நாடாளுமன்றச் செய்தியாளர் என்ற அனுபவம் எனக்கு கை கொடுத்துள்ளது.

நாடாளுமன்றச் செய்தியாளர் என்ற அனுபவம் என்னை வளர்த்துக்கொள்ள உதவிய போதும் அங்கு இடம்பெறும் பல விடயங்கள் நாடாளுமன்றச் செய்தியாளராகாது இருந்திருக்கலாம் என்ற எண்ணத்தையும் பல வேளைகளில் ஏற்படுத்தியதுண்டு.

மக்களால் அதீத நம்பிக்கை வைத்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்படும் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் வந்து நடந்துகொள்ளும் முறை, இனவாத, மதவாத ரீதியிலான உறுப்பி னர்களின் செயற்பாடுகள், ரவுடித்தனங்கள், அநாகரீகப் பேச்சுகள், கோமாளித்தனங்கள், காட்டிக்கொடுப்புகள், பக்கச்சார்பான செயற்பாடுகள் போன்றவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து மனம் வெதும்பிய அனுபவங்கள் உண்டு. ஆனால் செய்தியாளர் என்ற வகையில் கடமை தவறியதில்லை.

நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்கு நாடாளுமன்றத்தில் சில சலுகைகள் இருக்கின்றதைப்போன்றே பல கட்டுப்பாடுகளும் உள்ளன. அதில் முக்கியமானது சபைக்குள் செய்தி சேகரிக்கும்போது நடந்துகொள்ளும் முறை.

பெரிதாகச் சிரிக்கமுடியாது, சத்தமிட்டு தும்மவோ, இருமவோ முடியாது, கைத்தொலைபேசிகள், பதிவுக்கருவிகளை உள்ளுக்குள் வைத்திருக்க முடியாது. அத்துடன் நாம் மேலே இருக்கும் இடத்திலிருந்து செய்தி எழுதும் தாளோ அல்லது பேனா மூடியோகூட கீழே விழுந்தால் கூட காவல்துறையினரால் கைதுசெய்யப்பட நேரிடும்.

இந்தநிலையில் இதுதொடர்பில் ஒரு சுவையான அனுபவமும் எனக்கு ஏற்பட்டது.

ஒவ்வொரு ஊடகங்களில் இருந்தும் இரண்டு செய்தியாளர்களுக்கு மட்டுமே நாடாளுமன்றத்தில் செய்திகளைச் சேகரிக்க அனுமதியுண்டு. ஒரு தடவை நாம் செய்தியாளர் பகுதியில் இருந்து செய்தி எழுதிக்கொண்டிருந்தபோது சபை உறுப்பினர்களிடையே சிறு குழப்பம் ஏற்பட்டது. அப்போது எம்முடன் அருகிலிருந்து செய்தி எழுதிக்கொண்டிருந்த தமிழ் ஊடகமொன்றின் செய்தியாளர் கீழே என்ன நடக்கிறதென்பதனை எட்டிப்பார்த்தபோது அவர் வாய்க்குள் வைத்திருந்த நெல்லிக்காயின் விதை தவறுதலாக கீழே விழுந்துவிட்டது. அவரின் கஷ்டகாலமாக கீழே அமர்ந்திருந்த நாடாளுமன்றச் செயலாளரின் தலைமீது அந்த நெல்லி விதை விழுந்துவிட்டது.

உடனடியாக மேலே வந்த நாடாளுமன்ற காவல்துறையினர் அந்தச் செய்தியாளரை விசாரணைக்கென அழைத்துச்சென்றுவிட்டனர். காலையில் அழைத்துச்செல்லப்பட்ட அவர் கடும் எச்சரிக்கைக்குப் பின்னர் மாலையே விடுவிக்கப்பட்டார்.

நெல்லி விதையைப் போட்டது திட்டமிட்ட செயலா அல்லது தவறுதலாக இடம்பெற்றதா என்பதைக் கண்டுபிடிக்கவே அந்தச் செய்தியாளர் முழுநாளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இதேபோன்று நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரின் உரையை நாம் செய்தியாக வெளியிட்டமை தொடர்பில் எமது பிரதம ஆசிரியர் நான்காம் மாடிக்கு அழைக்கப்பட்டு 6 மணி நேரத்திற்கும் மேலாக விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அவ்வாறு உரையாற்றவில்லை என்று அந்தத் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினரிடம் தாம் மேற்கொண்ட விசாரணைகளின்போது அவர் தெரிவித்ததாகக் கூறியே எமது பிரதம ஆசிரியர் காவல்துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

எனினும் நாம் எழுதிய செய்தியில் எந்தத் தவறும் இல்லை, நாம் சரியான அறிக்கையிடலையே செய்தோம் என்பதனை உறுதிப்படுத்த அந்த உறுப்பினரின் உரையின் ஹன்சாட் அறிக்கையைப் பெற்று, அவரின் உரைக்கும் எமது செய்திக்கும் எந்த வேறுபாடும் இல்லை, அவர் பேசியதையே நாம் எழுதினோம் என்பதனை உறுதிப்படுத்தினோம்.

தற்போது நாடாளுமன்றச் செய்தியாளர்களாக இருப்போரிடம் போதிய அனுபவம், நாடாளுமன்ற நிலையியற் கட்டளை தொடர்பான அறிவு, செய்திகளைக் கையாளும் முறை தொடர்பில் திருப்திப்படமுடியாதுள்ளது. குறிப்பாக, இலத்திரனியல் ஊடகச் செய்தியாளர்கள் பரபரப்புக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

இதற்கு அவர்களிடமுள்ள ஊடகப் போட்டித்தன்மை காரணமாக இருந்தாலும் நாடாளுமன்றச் செய்தி அறிக்கையிடலின்போது சில வேளைகளில் அது தவறானதாக அமைந்துவிடும்.

உதாரணமாக, மிகப்பாரதூரமானதொரு வாதப்பிரதிவாதம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், அதில் சூடான விடயங்கள் அல்லது முக்கிய கருத்துக்கள் வெளிவரும்.

இவ்வாறான வாதப்பிரதிவாதம் சில வேளைகளில் அரைமணி நேரம் ஒரு மணிநேரம்கூட இடம் பெறும். இறுதியில்தான் சபாநாயகரோ அல்லது சபைக்குத் தலைமை தாங்குபவரோ அந்த வாதப்பிரதிவாதங்களில் இடம்பெற்ற அத்தனை விடயங்களும் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்படுவதாகவும் அவை ஊடகங்களில் வெளிவரக்கூடாதெனவும் அறிவிப்பார்.

ஆனால், அந்த அரைமணி நேர, ஒருமணி நேர இடைவெளிக்குள் அந்த விவாதம் தொடர்பிலான சில முக்கிய தகவல்களை 'விசேட செய்திகளாக' இலத்திரனியல் ஊடகங்கள் வெளியிட்டுவிடும்.

ஆகவே அங்கே ஊடகங்களில் வெளியிடக்கூடாதென்ற சபாநாயகரின் உத்தரவு புறக்கணிக்கப்பட்டதாகவே அமைகின்றது.

இவ்வாறான பரபரப்புச் செய்திகளை வெளியிடுவதில் இலத்திரனியல் ஊடகங்களில் இருந்து வரும் மிகவும் சிறுவயதான அனுபவ முதிர்ச்சியற்ற, நாடாளுமன்றச் சட்டதிட்டங்கள் தொடர்பில் அனுபவமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியாளர்களே ஆர்வம் காட்டுகின்றனர். இது அவர்கள் அறியாமல் செய்யும் தவறாகவே உள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றச் செய்திகளைவிட 'நாடாளுமன்ற லொபி' என்றழைக்கப்படும் நாடாளுமன்றத்தில் ஒருநாள் இடம்பெறும் நிகழ்வுகளின் தொகுப்புக்கே அதிக முக்கியத்துவம் உண்டு. நாடாளுமன்றச் செய்திகளாக எழுதமுடியாதவற்றையெல்லாம் இந்த நாடாளுமன்ற லொபியில் செய்யமுடியும். முன்னைய அச்சு ஊடக ஆசிரியர்கள் நாடாளுமன்ற லொபிக்கான முக்கியத்துவத்தைக் கொடுத்துப் பிரசுரித்துவந்தனர். அது அரசியல்வாதிகள் மட்டத்தில்கூட வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஆனால் இன்று அச்சு ஊடகங்களின் ஆசிரியர்களோ, செய்தியாளர்களோ இந்த 'லொபி'யில் அக்கறைகாட்டாத நிலையே உள்ளது. இதனால் இன்று நாடாளுமன்ற செய்தியாளர்களில் பலருக்கு 'லொபி' என்றால் என்னவென்றே தெரியாத நிலைதான் காணப்படுகிறது.

இதுவரை காலமும் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தினால் அது தொடர்புபட்ட செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துவரப்பட்டது. தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளதனால் ஊடகவியலாளர்களுக்குச் செய்திகளைச் சேகரிக்கக்கூடிய முதல் இடமாக நாடாளுமன்றமேயுள்ளது.

ஆனால், நாடாளுமன்றச் செய்தி சேகரிப்பின் முக்கியத்துவம் தெரியாத இன்றைய பரபரப்பான செய்திகளை மட்டுமே விரும்பும் இளம் செய்தியாளர்கள், நாடாளுமன்றச் செய்தி சேகரிப்புப் பணியை ஒரு தண்டனையாகவே நோக்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தநிலையில் ஒரு பூரணத்துவமான ஊடகவியலாளராகப் பரிணமிக்கவேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றச் செய்தி சேகரிப்பு அனுபவம் இன்றியமையாததாகவுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலனாய்வுச் செய்தி




பெருமளவான தகவல்களை திரட்டும் பயிற்சியாக இது இருக்கும். கோரிக்கைகள் மற்றும் தேடல்கள் மூலம் இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியாத விடயங்களை தேடி அதனை வெளிப்படுத்தும் செய்தியியல் புலனாய்வுச் செய்தியாகும்.

செய்தி நிகழ்வு ஒன்றின் பின்னால் இரகசியங்கள் இருப்பதாக உணரும் போது அது சமூகத்துக்கு, அல்லது செய்திக்கு வலுவூட்டும் என்ற அடிப்படையில் விசாரணைப்பாணியில் இரகசியமாக தேடப்படும் செய்தியைப் புலனாய்வுச் செய்தி என்று கூறலாம்.

சிலவேளைகளில், இந்த செய்தித் தேடல் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். எனினும் ஊடகப்பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு உரியமுறையில் இரகசியமாக மேற்கொள்ளப்படும் செய்தியாக புலனாய்வுச் செய்தி அமைகிறது.

### புலனாய்வு ஊடகவியல் முறைகள்

**மறைந்தநிலை ஊடகவியல்** - (Undercover journalism)

மக்களுடன் ஒருவராக இருந்து, செய்திகளை அல்லது குறிப்பிட்ட ஒரு விடயப்பரப்பு தொடர்பிலான தகவல்களைத் திரட்டும் முறையைக் குறிக்கும்.

**அநாமதேய தகவல் கூறுநர்** - (Whistleblowers)



அரசாங்க நிறுவனங்கள் உள்ளடங்களாக பொது மற்றும் தனியார் அமைப்புகளில் இடம் பெறுகின்ற மோசடிகள், முறைகேடுகள், சட்ட மீறல்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்த குற்றச்சாட்டுகளை, அநாமதேயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அல்லது பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும் ஒருவர்.

**தனிப்பட்ட புலனாய்வாளர்கள்** - (Private detectives)

அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் அல்லது அங்கீகாரம் இல்லாமல் இரகசியமாக உளவு நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளவு** - (Spying)

அரசாங்கத்தினால் உருவாக்கப்பப்பட்டுள்ள உளவு அமைப்புகள்.

இவ்வாறான பிரிவினரிடம் இருந்து புலனாய்வுச் செய்திகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அல்லது செய்தி ஊடகங்களே சில சமயங்களில் இவ்வாறான பிரிவினர்களாக செயற்படுகின்றன.

இதில் அநாநாமதேயமான தகவல்கள் குறித்து முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான தகவல்கள் இரண்டு தன்மைகளைக் கொண்டதாக இருக்கும்.

ஒன்று உண்மையாக இருக்கலாம், அல்லது ஏதோ ஒரு விடயம் கருதி புனையப்பட்டதாகவோ அல்லது கட்டுக்கதைகளை நம்பி வெளிப்படுத்தப்படுகின்றதாகவோ இருக்கலாம்.

அண்மைக்காலமாக அமெரிக்காவின் வொஷிங்டன் பிரஸ் மீது, அதிக அளவிலான அநாமதேய தகவல்களை வெளியிடுகின்றமை தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக சர்வதேச செய்திகள் கூறுகின்றன.

வொஷிங்டன் பிரஸ் அநாமதேயமாக வெளியிட்ட பல தகவல்கள் பின்னர் பொய்யானவை என்று நிருபிக்கப்பட்டுள்ளன என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்று கூகுல் தேடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**முரண்பாட்டுச் செய்திகளை அறிக்கையிடல்**

இனங்களுக்கிடையிலான முரண்பாடு மற்றும் தேசத்துக்கு இடையிலான முரண்பாடு போன்றவை தொடர்பாகவும் சமூக முரண்பாடு தொடர்பாகவும் அறிக்கையிடும்போதும் கவனமான கையாளல் தேவைப்படுகிறது.

முரண்பாடுகளை பெரிதுபடுத்தி செய்திகளை வெளியிடும்போது அது ஊடகத்தால் சமூக முரண்பாடுகள் தீவிரமாகும் நிலையை ஏற்படுத்தும்.

முரண்பாடுகளைக் களையும் முகமாக செய்தியிடலுக்கான ஓர் உதாரணமாக, மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட நேரம் இந்திய அரச ஊடகம் செயற்பட்ட விதத்தைக் கோடிட்டுக்காட்டலாம். இதன்போது, மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற விடயத்தை மாத்திரம் அந்த ஊடகம் வெளியிடாமல், அவர் இந்து ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற விடயத்தை நேரடிச் செய்தியாக அறிவித்தது.

இதன்காரணமாக இந்தியாவில் ஏற்படவிருந்த இந்து - முஸ்லிம் கலவரநிலை உடனடியாகவே தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம்கள் குற்றம் சுமத்தப்படும்போது அவர்களின் இனத்தை அடையாளப்படுத்திக் காட்டும் ஊடக வெளிப்பாட்டுமுறை இன்னும் பெரும்பாலான சிங்கள ஊடகங்களால் கைக்கொள்ளப்படுகிறது. இது, முரண்பாடுகளை தீவிரப்படுத்தும் முறையென்பதை கோடிட்டுக்காட்டலாம்.

இதேபோன்று வன்முறை, கொலை மற்றும் தற்கொலை போன்ற விடயங்களிலும் சமூக நலன் கருதி செயற்படவேண்டியது ஊடகங்களின் பொறுப்பாகக் கருத்தப்படுகிறது.

**கேலிச்சித்திரச் செய்தி**





எழுத்தினால் கூறமுடியாத செய்திகளை சுவைபட வாசகர்களுக்கு, பார்வையாளர் களுக்கு கொண்டுசெல்ல கேலிச் சித்திரம் உதவு கிறது.

**புகைப்படச் செய்தி**

புகைப்படத்தை வைத்துக்கொண்டு அதனுடாக செய்தியைக் கூறுவது புகைப்படச் செய்தி எனப்படுகிறது.

இவற்றைத் தவிர நாடகப்பாணி, தாளலயம் மற்றும் குறுந்திரைப்படம் என்பனவும் செய்தியைக் கொண்டுசெல்லும் ஊடகங்களாகக் கருதப்படுகின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுபவப் பகிர்வு: புகைப்பட ஊடகவியல்** (Photo Journalism)

**வி.எஸ்.சிகாமணி**

*சூரியன் எப்.எம். செய்தியாசிரியர்*

ஊடகவியலில் தனிப்பட்ட முக்கிய பகுதியாக புகைப்பட ஊடகவியல் விளங்குகின்றது. செய்திகளை மிக தெளிவாகவும் சகல தரப்பினராலும் இலகுவாக விளங்கிக் கொள்வதில் இது பெரும் பங்களிப்பை வழங்குகின்றது.

புகைப்படங்களுடனான செய்திகள் மூலம் அந்த செய்திகளின் உண்மைத் தன்மை உறுதியாகின்றன.

புகைப்படங்களுடனான செய்திகள் மக்களின் பார்வைக்கு பிரசுரமாகும் தருணத்தில் அதன் கட்டமைப்பு நேர்மையானதாகவும், நடுநிலையா கவும் ஊடகவியலாளர்களின் கோட்பாட்டிற்கு அமையவும் இருப்பது அவசியமாகிறது.

செய்தியின் தாற்பரியத்தை மேம்படுத்துவதில் புகைப்பட ஊடகவியலாளரின் செயற்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றது.





இதற்கு அமைய எந்த செய்தியானாலும், அவை புகைப்படத்துடன் வெளியாகும் பொழுது அவை மக்களின் கவனத்தை உடனடியாக ஈர்க்கின்றது. சலனப்படங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், புகைப்படங்கள் மிகவும் பிரபலமாகவிருந்தன.

குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் புகைப்படத்துடனான செய்திகள், தொடர் கட்டுரைகள் மற்றும் சமகால நிகழ்வுகள் என்பவற்றுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது.

முதலாவது மற்றும் இரண்டாவது உலக மகா யுத்தங்கள், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் தாக்கங்கள் என்பனவற்றை சர்வதேசம் நேரடியாகவும் உண்மைத்தனத்துடனும் அறிவதற்கு புகைப்பட ஊடகம் பெரிதும் துணைபுரிந்தன.

உதாரணமாக, இரண்டாவது உலக மகாயுத்தத்தை நிறைவிற்கு பலவந்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டு செல்வதற்காக அமெரிக்காவினால் பிரயோகிக்கப்பட்ட முதலாவது அணுகுண்டு தாக்கம் காரணமாக ஏற்பட்ட மனித அலவங்கள் துல்லியமாக புகைப்படங்களின் மூலம் படம் போட்டுக்காட்டப்பட்டன.

அவற்றால் ஏற்பட்ட மக்களின் அவலங்கள், உணர்வுகள் அந்த கால கட்டத்தில் தொழில் நுட்பம் மிகவும் குறைந்த அளவில் இருந்தபொழுதிலும், புகைப்படத்துடனான உண்மைச் செய்திகளை வெளியிட்ட புகைப்பட ஊடகவியலாளர்கள் பாராட்டப்பட்டனர்.

அவர்களால் பிரசுரிக்கப்பட்ட படங்கள் காலத்தால் அழியாத பொக்கிஷங்களாக பேணப்படுகின்றன.

அது போல உள்நாடு, உலக நடப்புக்களை படிப்பறிவு கொண்டவர்களால் மாத்திரமே அறிந்து கொள்ளமுடியும் என்ற நிலையில், புகைப்படச் செய்திகள் அதனைப் பொய்யாக்கின.

ஒரு புகைப்படத்தினால் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குக்கூட செய்தியை கூறக்கூடியதாக இருக்கின்றது. இது ஊடகத்துறையில் புகைப்படத்தின் காத்திரத்தையும் வலிமையையும் தெளிவுபடுத்துகின்றது.

ஒரு செய்தியை விரைவாக புரிந்து கொள்வதற்கும் புகைப்படம் துணை புரிகின்றது.

"ைை ர்ழடந ஊயஅயசய என்ற முதலில் உருவான புகைப்படக் கருவி முதல், இன்று அதிநவீன வசதிகளையும், பல்வேறு நுட்பமான செயல்பாடுகளைக் கொண்டுள்ள புகைப்படக்கருவிகள் உள்ள நிலையில், புகைப்பட ஊடகமும் பல்வேறு தரத்துடன் முன்னேறிவருகின்றது.

எனது ஊடகத்துறை பிரவேசம், புகைப்படத்துடன் செய்திகளை வெளியிடும் புகைப்பட ஊடகவியலாளராகவே ஆரம்பமானது.

வுசயனெ யுளயை நேறள ழநசளைஉந என்ற செய்தி ஸ்தாபனத்தில் பணியாற்றிய காலப்பகுதியில், அந்த நிறுவனத்துக்காக பல்வேறு புகைப்படங்களுடனான செய்திகளை பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து வெளியாகும் சஞ்சிகைகளுக்கும், செய்தித்தாள்களுக்கும் அனுப்பியுள்ளேன்.

எமது நாட்டைப்போல அல்லாது வெளிநாடுகளில் வெளியாகும் பெரும்பாலான செய்தித் தாள்கள் அல்லது சஞ்சிகைகள் ஒரு குறிப்பிட்ட வரைபடுத்தலைக் கொண்டிருக்கும்.

உதாரணமாக, ஜப்பானில் இருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாடுகளின் 'வர்த்தகம் மற்றும் கப்பல்துறை' தொடர்பான செய்திகளையும் புகைப்படங்களையுமே பிரசுரிக்கும்.

அதேபோன்று ஊழுளஅநவளைஉளஇ ஞிளைஉநளஇ குழுழன நுபெளைநெநசளைபெஇ "ழுரடவசலஇ ஊளாழஉழுடயவந உட்பட பல வரைபடுத்தல்களைக்கொண்டதாக இருக்கும்.

அவை வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் தமது பிரசுரங்களை மேற்கொள்கின்றன.

அப்படியான பிரசுரங்களில் உங்கள் ஆக்கம் புகைப்படங்களுடன் வெளியாகும்போது அதற்கு ஏற்ற சன்மானங்கள் கிடைப்பதுடன், புகழையும் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

தற்போது முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ புகைப்பட ஊடகவியலாளர்களாக இணைய முற்படுவோர், கடந்த காலங்களைப்போல புகைப்படக் கலையைக் கற்க வேண்டிய அவசியம் இல்லை என்பது எனது கருத்து.

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக எவராலும், எந்த நேரத்திலும் சிறந்த புகைப்படங்களை எடுக்கமுடியும்.

இந்தநிலையில் எடுக்கப்போகும் பிம்பத்தின் கோணம், நிகழ்வின் தாற்பரியம், தயார் நிலையில் துரிதகதியில் செயல்படுவது போன்றவற்றில் மட்டும் கவனம் செலுத்தினால் சிறந்த புகைப்பட ஊடகவியலாளராக விளங்கமுடியும்.

சமூக பொது விழாக்களில் செயற்படும் புகைப்பட ஊடகவியலாளர்கள் எடுக்கப்படும் படங்கள் இயற்கையானதாக அமைவதில் கவனம் செலுத்தவேண்டும். செயற்கையான முறையில் புகைப்படத்திற்காக சம்பந்தப்பட்டவர்களை தயார்படுத்தி படத்தை எடுப்பது தத்துரூபமான புகைப்படமாக அமையாது.

முழுநேர புகைப்பட ஊடகவியலாளராக செயல்பட்ட காலப்பகுதியில், எனக்கு பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரபலங்களின் படங்களை எடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்ததுடன் அவை பாராட்டுதலுக்கும் உள்ளாகின.

10ஆவது சார்க் மாநாடு இலங்கையில் கடந்த 1998ஆம் ஆண்டு இடம்பெற்ற போது, சாக் உறுப்பு நாடுகளின் தலைவர்களை புகைப்படம் பிடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

குறிப்பாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் அட்டல் பிகாரி வாஜ்பாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பாக்கிஸ்தானிய முன்னாள் பிரதமர் நவாப் ஷெரிப் ஆகியோரைப் புகைப்படம் எடுத்ததுடன், அவர்களிடம் சில கேள்விகள் கேட்பதற்கான சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

கேள்விகளுக்கு (சிலவேளைகளில் அவர்களுக்கு தர்மசங்கடமான கேள்விகளாக இருந்திருக்கலாம்) அவர்கள் சிந்தித்து பதில் கூறிய நிலையிலான காட்சிகளை மிககிட்டிய தூரத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டு பாராட்டப்பட்டபோது, தொழில் திருப்தி ஏற்பட்டது.

ஒருசில சந்தர்ப்பங்களில் நகைச்சுவையான படங்களை எடுக்கும் அபூர்வ வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் ஒன்றாக பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்றது.

அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கமானவிருந்தன. கட்டுநாயக்க விமான நிலையத்தில், இளவரசரின் வருகையை ஒட்டி பாதுகாப்பு இரட்டிப்பாக்கப்பட்டிருந்தது.

ஊடகவியலாளர்களின் நடமாட்டங்கள் பெருமளவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

கம்பியினால் ஆன குறுகிய பிரதேசத்தினுள் ஊடகவியலாளர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.

புகைப்படம் எடுப்பவர்கள் உட்பட அனைவரும் அந்தக் கம்பியினால் ஆன தற்காலிக அறையினுள் இருந்தே தமது கடமையை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இந்தநிலையில் விமானத்தில் இருந்து செங்கம்பளத்தின் ஊடாக இளவரசர் சார்ள்ஸ் உயர் மட்ட முக்கியஸ்தர்களுடன் வருகைதந்துகொண்டிருந்தார்.

அந்தவேளை கட்டாக்காலியான நாய் ஒன்று எங்கிருந்தோ வந்து இளவரசர் நடந்துவந்த செங்கம்பளத்தின் ஊடாக ஓடியது.

இதனை அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை காரணமாக அச்சங் கொண்ட நாய் பிரபலங்கள் உள்ள பகுதிகளில் அங்கும் இங்குமாக ஓடியது. அந்த நிலையில், தர்மசங்கட நிலையை அரசியல்வாதிகள், உயர்மட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எதிர்கொண்டனர்.

ஆனால்,இளவரசர் சார்ள்ஸ் புன்முறுவல் பூத்த வண்ணம் சம்பவத்தை சாதாரணமாக எதிர்கொண்டதுடன், ஊடகவியலாளர் இருந்த கம்பி அறையை நோக்கி தனது இரு புருவங்களையும் உயர்த்தி நகைச்சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தன்மையை வெளிப்படுத்தியதுடன் எம்மை நோக்கி கையசைசைத்து விட்டுச்சென்றார்.

அந்த நகைச்சுவையான காட்சிகள் புகைப்பட ஊடகவியலாளினால் பதிவு செய்யப்பட்டது. நான் எடுத்த படங்களில், புருவம் உயர்ந்த புன்முறுவல் நிலையில் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் கட்டாக்காலி நாய் என்பன பதிவு செய்யப்பட்டிருந்தன.

பொதுவாக நான் முழு நேர புகைப்பட ஊடகவியலாளராகப் பணியாற்றிய காலப்பகுதியில், அது தொழில் போல எனக்குத் தோன்றவில்லை. ஒவ்வொரு நிகழ்வும் எனக்கு பொழுதைப்போக்கும் மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளாகவே அமைந்தன.

எதிர்வரும் காலங்களில் தற்போதைய தொழில்நுட்பத்தைவிட தொழில் நுட்பங்கள் மேம்படும்போது புகைப்படத்துறை ஊடகவியலில் மேலும் பல புதுமைகளைக் காணமுடியும் என்பதில் ஐயமில்லை.

**செய்திப் பிரதிகள் எழுதும் பொது முறை**



செய்தி எழுதும் பிரதியின் இடது மேல் மூலையில் செய்தியாளரின் பெயர், திகதி, செய்தியின் முக்கிய அம்சம் என்பவற்றைக் குறிப்பிடுதல் அவசியம்.

வரிக்கு வரி இரட்டை இடைவெளி இருப்பது சிறந்தது.

பிரதியின் இடதுபக்கத்தில் சிறிய இடத்தை ஒதுக்குதல்.

ஒரு பக்கத்தில் செய்தி எழுதிய பின்னர் அதன் தொடர்ச்சி அடுத்த பக்கத்துக்கு செல்லுமானால் தொடர்ச்சி... என்று பிரதியின் கீழ் வலது பக்கத்தில் குறிப்பது அவசியம். செய்தி கிடைத்த மூலத்தைக் குறிப்பிடல் அவசியம்.

ஒவ்வொரு வசனத்துக்கும் புதிய பந்தியை ஆரம்பிக்கவும்.

பழக்கமில்லாத சொற்களைக் குறித்துக்காட்டுங்கள்.

பெயர்களுக்கு முன்னால் குறித்தவர்களின் முதலெழுத்துக்களைக் குறிப்பிடுக.

செய்தியின் பிரதி முடிவடைந்தபின்னர் முடிவு என்பதைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியின் பிரதி எழுதி முடிந்தபின்னர் அது முடிவடைந்த நேரத்தைக் குறிப்பிடுவது சிறந்தது.

செய்தி எழுதி முடிந்தபின்னர், செய்தியை முழுமையாக வாசிக்கவேண்டும். எழுத்துப் பிழைகள், வசனப்பிழைகள் கருத்துப்பிழைகள், என்பவற்றைப் பரீட்சிக்கவேண்டியது அவசியம்.

இதன்போது செய்தி முழுமையாக முடியும்வரை அது தொடர்பான தொடர்பு இலக்கங்கள், மூலங்கள் போன்றவற்றைப் பாதுகாத்துவைப்பது அவசியம்.

**செய்தி எழுதும் முறை**


செய்திக் கதைகளை இரண்டு பிரிவுகளாக நோக்கலாம்.

கடும் மற்றும் மென்மை என்ற அளவில் அவை வகைப்படுத்தப்படும்.

இதன் அடிப்படையில் இரண்டு செய்திக்கதைகளை எழுதும்போது பிரதான (Lead) அல்லது முகப்பு (Intro) என்ற அடிப்படையில் முதல் வசனம் அமையவேண்டும். இரண்டாவதாக செய்தியின் உடல் (டீழனல) அமையவேண்டும்.

**தலைகீழ் திருப்பிய கூம்புவடிவம் முறை** (Inverted pyramid)

தலைகீழ் திருப்பிய கூம்புவடிவ செய்தி எழுதும் முறை என்பது முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.




இதன்போது தலைப்புகளும் அம்சங்களும் முதன்மைப்படுத்தப்பட்டு செய்தியை நிறைவுறுத்தும்போது சிறிய தகவல்கள் சேர்க்கப்படும்.

இந்த முறையானது, நேயர்களும் வாசகர்களும் தலைப்புச்செய்தியிலேயே தமக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

செய்தியின் இறுதிப்பகுதியில் சேர்க்கப்படும் தகவல்களைச் செய்தி ஆசிரியர்கள் குறைத்துக்கொள்ளமுடியும் என்ற அடிப்படையில் குறித்த முறை செயற்படுத்தப்பட்டது.

**இன்றைய முறை**

பெரும்பாலும் இன்று செய்தி ஆசிரியர்கள், தமது செய்தியாளர்களிடம் 5W H என்ற (சந்தர்ப்பம் கூறல்) வினாக்களுக்கு விடைதேடும் முறையை செய்தியின் ஆரம்பத்திலேயே கையாளுமாறு கோருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்தி எழுதும் பிரதி - பொதுவான நடைமுறை**

**செய்தித் தலைப்பு**




செய்தியை எழுதும் முன்னர் நீங்கள் உங்களையே இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். என்ன செய்தி? எவ்வாறு அதனை சமர்ப்பிப்பது? செய்தியை எழுதும் முன்னர், எதனை நீங்கள் கூறவிரும்புகிறீர்கள் என்பதை தெளிவுபடுத் திக்கொள்ளவேண்டும். எது தலைப்புக்குப் பொருத்தமான அம்சம் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

இதனையடுத்து 5W H என்ற அடிப்படையில் யார்? தலைப்பு, என்ன? தலைப்பு, எப்போது? தலைப்பு, எங்கே? தலைப்பு, ஏன்? தலைப்பு, எப்படி? தலைப்பு என்ற அடிப்படையில் தலைப்புக்களை இனங்காணமுடியும்.

இந்தத் தலைப்புக்கள் நேயர்களை, வாசகர்களைக் கவரக்கூடியதாகவும் தொடர்ந்து செய்தியை வாசிக்க, கேட்கக்கூடியதாகவும் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

தலைப்புக்களை 9 வகைகளாக வகுக்கமுடியும் என்று The News Machine என்ற ஊடகவியல் கைநூல் கூறுகிறது இதன்படி,

| | |
|---|---|
| Summary Intro | - சுருக்க முகப்பு |
| Figurative or Color Intro | - வர்ணப்படுத்தப்பட்ட தலைப்பு சுட்டிக்காட்டப்பட்ட |
| Oddity Intro | - நகைச்சுவையான |
| Ouotation Intro | - கேள்விப்பத்திர |
| Questions Intro | - கேள்வி தலைப்பு |
| Dialouge Intro | - கலந்துரையாடல் தலைப்பு |
| Descriptive Intro | - விபரிக்கப்பட்ட அல்லது மிகைப்ப டுத்தப்பட்ட |
| Bullet Intro | - நேரடித் தலைப்பு |
| Staccato Intro | - தொக்கு நிற்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரல் பதிவு












இலத்திரனியல் ஊடகங்களில் மிக முக்கிய செய்தி ஆதாரமாக குரல் பதிவுகளும், காணொளிகளும் திகழ்கின்றன.

எந்தவொரு செய்தியையும் உறுதியாக வெளியிடுவதற்கு அந்தத் தகவலைக் குறிப்பிட்ட ஒருவர்தான் தெரிவித்தார் என்பதற்கு சாட்சியாக குரல் பதிவுகள் பெறப்படுகின்றன.

இது செய்தியொன்றின் சமநிலையைப் பேணுவதற்கும் பெரும்பாலும் வழிவகுக்கின்றது.

உதாரணமாக, இரண்டு தரப்பினருக்கு இடையிலான விவாதம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

அவ்வாறான குரல் பதிவுகள் மற்றும் காணொளிகளை சீர்செய்துகொள்வதற்கு சில மென் பொருள்கள் எமக்கு உதவுகின்றன.

கூல் எடிட் புரோ, அடொப் ஓடிஷன், சவுட் பூத், சவுண்ட் ஃபோர்ஜ் - போன்ற மென்பொருட் கள் குரல் பதிவுகள் மற்றும் ஒலி வடிவங்களை சீரமைப்பதற்கு தற்போது மேம்படுத்தப்பட்ட பல ஒப்ஷன்ஸ் மற்றும் ப்ளக் - இன்களுடன் (குரலைத் தெளிவாகச் சீரமைக்க உதவும் தெரிவுகள்) வெளிவந்துள்ளன.

வேகாஸ், ஆப்ஃடர் எபெஃக்ட்ஸ், பிரிமியர், எவிட், அடியூஸ், அப்பிள் பைஃனல் கட் புரோ - உள்ளிட்ட மென்பொருட்கள் காணொளிகளை ஒழுங்குபடுத்தி முறையான ஒளிப்படத்தை அல்லது பிரசன்டேஷனை வெளியிடுவதற்கு பெரிதும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை செயற்படுத்துவதற்கு அடிப்படை கணிணி அறிவும், புத்தாக்க திறனும் அவசியம்.

பல்ஊடக சீராக்கி (மல்டிமீடியா எடிட்) மென்பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் இயலுமாயின் அதனை ஏற்கனவே உபயோகிப்போர், தொழில் ரீதியான நிபுணர்கள், கணிணிக் கல்வி நிலையங்களின் ஊடாகப் போதுமான தெளிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

அடிப்படைக் குரல் பதிவுச் சீராக்கியான கூல் எடிட் பற்றி சில குறிப்புகள்.

புதிய அலை (Wav) கோப்பு ஒன்றை மெனு பாரில் பைல் நியு வை கிளிக் செய்வதன் ஊடாகத் திறந்து கொள்ளமுடியும்.

அதன்போது நாம் ஒரு குரலை எந்த போமேட்டில் பதிவு செய்யப்போகிறோம் என்பதை தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

.mp3, அல்லது .wav ஆகிய இரண்டு அலைவரிசைத் தெரிவுகளைப் பிரதானமாக கூல் எடிட் நமக்கு வழங்கும்.

நாம் .mp3 செனல் போமேட்டை தெரிவு செய்து கொண்டால் 44100 ஹெட்ஸ் சாம்பிள் ரேட் - ஸ்டீரியோ - 16 பைட்-டை ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியும்.

வானொலியில் குரல் பதிவை வெளியிடுவதற்கு இந்த அளவிலான தரம் கட்டாயமாக இருக்கவேண்டும். இணைய வானொலி, இணையத்தள பக்க செய்திகளின் குரல்கள் போன்றவற்றிற்கு இதனை விட அளவில் குறைந்த தரத்திலான .mp3 கட்டமைப்புகளை வெளியிடலாம்.

இணைய வானொலி, இணையத்தளச் செய்திகளின் குரல்கள் போன்றவற்றிற்கு இதனை விட அளவில் குறைந்த தரத்திலான .mp3 கட்டமைப்புகளை வெளியிடலாம்.

அதேபோன்று, வேவ் போமேட்டில் குரல் பதிவை மேற்கொள்வதானால் mono – மொனோ அலைவரிசையை இலகுவாக தெரிவுசெய்துகொள்ள முடியும்.

வானொலியில் எழுத்துருச் செய்திகளை வாசித்த பின்னர் குரல் பதிவுகளை ஒலிக்க விடும் தருணங்களில் அந்தக் குரல் பதிவு பெரும்பாலும் .wav – வேவ் போமேட்டில் இருப்பது சிறந்தது.

குரல் பதிவுகளை சீராக்கி, தேவையற்ற பாகங்களை அகற்றுவதற்கு அலையை ணழழஅ செய்துகொண்டு னுநடநவந செய்துவிடலாம்.

அதனை மேலும் சீராக்குவதற்கும், பின்னணி இரைச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை அகற்றுவதற்கும் Effect Menuவைப் பயன் படுத்தலாம்.

அதில் Noise reduction option ஐத் தெரிவு செய்து தேவையான அளவு சீராக்கலாம்.

பல குரல் பதிவுகளை ஒரே அலைவரிசையில் கொண்டு சென்று இசைக் கலவையுடன் package ஆக வெளியிடுவதற்கு மெனுபாரின் கீழாக உள்ள மல்டி ட்ரக் வியூ ஒப்ஷனைப் பயன்படுத்தலாம்.

இதேபோன்று, காணொளிகளை சீராக்குவதற்கு ஒவ்வொரு மென்பொருளுக்கும் அடிப்படை ஒப்ஷன்களும், மேலதிக எபெ·.க்ட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையாகக் கணிணிக் கல்வி நிலையங்களில் பயில்வதே சிறந்தது.

பிரிமியர் போன்ற அடிப்படை காணொளி சீராக்கிகளில் விரைவாகப் பணிகளை மேற்கொள்ளலாம்.

புதிய பக்கம் ஒன்றைத் திறந்து நமக்குத் தேவையான காணொளியை இம்போட் செய்து அதற்கான குரல் பதிவுடன் சேர்த்து சீராக்க முடியும்.

செய்திக்கு அவசியமான காணொளியை இதன்மூலம் விரைவாகத் தயாரித்துக்கொள்ள முடியும்.

தெளிவற்ற சில காணொளிகள் இருப்பின் அவற்றின் துல்லியத்தை (Contrast) அதிகரிக்கலாம்.

அதுமட்டுமன்றி Brightness, Darkness, Density உள்ளிட்ட தெரிவுகளையும் நாம் தேவையான வகையில் கூட்டிக்குறைத்துக் கொள்ள முடியும்.

ஏனைய பல்தொழிற்பாட்டு மென்பொருட்கள் குறும்படங்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள் என்பவற்றைத் தயாரிக்கக்கூடிய கூறுகளையும் கொண்டுள்ளன. அவற்றை முறையாகப் பயின்றால் பல்ஊடக வரைஞராகக் (Multimedia Designer) கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் செய்தித்துறை

இலங்கையில், பிரித்தானிய ஆளுநராக வில்லியம் ஹோல்புருக் 1829 ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி நியமிக்கப்பட்ட பின்னர், அவர் இலங்கையில் சுயாதீன பத்திரிகைகள் வெளியாகவேண்டும் என்பதை ஊக்குவித்தார்.

சுயாதீன பத்திரிகைகள் வெளியாகாமையே இலங்கையின் ஆளுனர்கள் அதிகப்படியான அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது என்றும் அவர் நம்பினார்.



இதன் அடிப்படையில் ஹோல்புருக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 1831 ஒக்டோபர் மாதம் 23ம் திகதி இலங்கை வந்த புதிய ஆளுனர் வில்மோட் ஹாட்டன், புதிய பத்திரிகையை வெளியிடுவது தொடர்பில் அக்கறை செலுத்தினார்.

1839ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைக்கு வந்த சட்டத்தின்படி, வெளியாகின்ற பத்திரிகைகளின் பிரதிகள் குடியிருப்புகாலச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும் என்ற கட்டாயம் காணப்பட்டது.

எனினும் இது 1951ம் ஆண்டு சீர்த்திருத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் 'த கொலம்போ ஜேர்னல்' பத்திரிகை 1832ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வெளியிடப்பட்டது.



Colombo Journal.

Colombo Journal - 1832

இது அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

இதன் தலைவராக ஜோர்ஜ் லீ நியமிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும், 'த கொலம்போ ஜேர்னல்' ஆரம்பித்த அதே ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியுடன் மூடப்பட்டது.

பத்திரிகைத்துறை தனியார் துறைக்கு வழங்கப்படவேண்டும் என்பதற்காக இந்த பத்திரிகை மூடப்பட்டதாக காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கப்பட்டபோதிலும், இந்தப் பத்திரிகை, குடியிருப்பு ஆங்கில அரசாங்கத்தை அதிகம் விமர்சித்தமைக்காகவே மூடப்பட்டதாகவும் கருதப்படுகிறது.



அதன் பின்னர் கொழும்பு வணிகர்களான ஜீ.ஓக்லேண்ட் மற்றும் ஈ.ஜே.டார்லி ஆகியோர், 'த ஒப்சேவர்' மற்றும் 'கொமர்சியல் அட்வைசர்' என்ற பத்திரிகையை 1834ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி வெளியிட்டனர்.

இதுவே இலங்கையில் தற்போதும் வெளியாகும், த ஒப்சேர்வர் பத்திரிகையின் முதலாவது வெளியீடாகும்.

இதன் முதலாவது ஆசிரியர் ஜோர்ஜ் வின்டர்.

இந்தக்காலப்பகுதியில் காவல் துறை அதிகாரி ஒருவரை விமர்சித்தமைக்காக மேலும் ஒரு செய்தியாளருடன் கைதுசெய்யப்பட்டு, 1834ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் 1835ஆம் ஆண்டு பதுளை பிராந்தியத்தியத்தில் இருந்து வைத்தியரான கிறிஸ்தொபர் எலைட், இந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நியமனம் பெற்றார்.

அவர் இதன் பெயரை 'கொழும்போ ஒப்சேர்வர்' என்று மாற்றினார். அத்துடன் அவர் இந்தப் பத்திரிகைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

இவரின் கீழ் 1848ம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்போ ஒப்சேவர் பத்திரிகை குடியிருப்பு அரசாங்கத்தை பெரிதும் விமர்சித்ததுடன், இந்த காலப்பகுதியில் இலங்கை மக்களை பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிராக திருப்பும் வகையிலும் இருந்தது.

குறிப்பாக புத்தரின் தந்ததாதுக்களை பிரித்தானிய அரசாங்கம் அழித்தமை போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விமர்சனங்களை இந்த பத்திரிகை நேரடியாக வெளியிட்டது. இந்தப் பத்திரிகைக்குப் போட்டியாக வெளியாக 1837ம் ஆண்டு 'த சிலோன் க்ரோனிக்கல்' என்ற பத்திரிகை வெளியாகியது.

இதற்கு பிரித்தானிய அரசாங்கத்தின் உதவி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1845ஆம் ஆண்டு 23ம் திகதி செப்டம்பர் மாதம் 'சிலோன் அட்வர்டைசர் அன்ட் ஜெனரல் இன்டலிஜென்ஸ்' என்ற பத்திரிகையும் பின்னர், சிலோன் டைம்ஸ் மற்றும் எக்சாமினெர் என்பனவும் வெளியாகின.

1862 இல் ஜப்னா ப்ரீடம் என்ற பத்திரிகையும், 1864ஆம் ஆண்டு கண்டி ஹெராட் பத்திரிகையும், 1869ஆம் ஆண்டு கத்தலிக் மெசன்ஜர் என்ற பத்திரிகையும் வெளியாகின.

1888ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் திகதி சிலோன் இன்டிபென்டன் பத்திரிகை வெளியானது.

அதன் பின்னர் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஜப்னா கத்தலிக் கார்டியன், ஹிந்து ஓர்கன், சிலோன் நேடிவ் ஒப்பீனியன் போன்ற பத்திரிகைகள் வெளியாகின.

எனினும் அவை குறுங்காலத்தில் மூடப்பட்டன.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் த ஐலேண்ட் பத்திரிகை வெளியாகியது. பின்னர் சிலோன் மொஹன்டம், சிலோன் ஸ்டேன்டர்ட், மோர்னிங் லீடர் போன்ற பத்திரிகைகள் வெளியாகின.

இலங்கையில் வெளியான முதலாவது சிங்களப் பத்திரிகையாக லங்கா லொக்கா என்ற பத்திரிகை காணப்படுகிறது.

இது 1860ம் ஆண்டு ஜான் மாதம் காலியில் வைத்து வெளியிடப்பட்டது.

மாதம் இரண்டு தடவைகள் இது வெளியாகியது. எனினும் இந்தப் பத்திரிகை 1839ஆம் ஆண்டு ஐந்தாம் இலக்கப் பத்திரிகைகள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் இலங்கையில் வெளியான முதலாவது பதிவுசெய்யப்பட்ட சிங்களப் பத்திரிகையாக 'லக்மினி பஹன' காணப்படுகிறது. இது 1862ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் திகதி வெளியானது.

பின்னர் 1863ம் அண்டு லக்கிரி விக்கிரன பத்திரிகை வெளியாகியது.

அதன் பின்னர் தினபதி பிரவுர்தி, ஞானரத பிரதீபய, லங்கா பிரதீபய, கவட கதிகய, சரசவி சந்ரேச, ஷ்வராஜய, சட்பச போன்ற பத்திரிகைகள் தொடர்ச்சியாக வெளியாகின.

அதன் பின்னர் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், லக்மின, தினகர பிரகாச, சின்ஹல சமய, சின்ஹல ஜாதிய, சின்ஹல பௌத்தய, தினமின, ஸ்வதேச மித்ரய, சிலுமின போன்ற பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் செய்த்தித்தாள்கள்

இலங்கையில் வெளியான முதலாவது தமிழ்ப் பத்திரிகையாக 'உதயதாரகை' அமைகிறது.

இது 1841ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெளியானது.

இந்தக் காலப்பகுதியில் மேலும் பல பத்திரிகைகள் வெளியாகின.

அவை மொழி, மதம் சம்பந்தப்பட்டதாக அமைந்தன.

பின்னர் 1865ஆம் ஆண்டு பள்ளியர் நேசன், 1868ஆம் ஆண்டு இலங்கைப் பாதுகாவலன் ஆகிய பத்திரிகைகள் வெளியாகின.

1869ஆம் ஆண்டு அலமட் லங்காபுரி, 1882ஆம் ஆண்டு முஸ்லிம் நேசன்,

1882இல் சிவபிமனி, 1900ஆம் ஆண்டு சத்தியவேத பாதுகாவலன், 1905இல் இஸ்லாம் மித்ரன், போன்றன வெளியாகின.

அதன்பின்னர் ஈழகேசரி வார இதழ் 1931ஆம் ஆண்டு வெளியானது.

இது இந்தியா, மலேசியா, தென்னாபிரிக்கா, பிஜி மற்றும் மொரிசீயஸ் போன்ற நாடுகளிலும் வெளியாகியது.

1930ம் ஆண்டு வீரகேசரி வெளியானது. 1932ஆம் ஆண்டு தினகரன் வெளியானது.

தினகரன் வாரமஞ்சரி 1940ஆம் ஆண்டு வெளியானது.

1956ம் ஆண்டு ஈழ நாடு என்ற பத்திரிகை வெளியானது.

1966ம் ஆண்டு தினபதி பத்திரிகை வெளியானது. பின்னர் 1966ஆம் ஆண்டு சிந்தாமணி பத்திரிகை வெளியாகியது.




இந்த காலப்பகுதியில் வெளியான தீப்பொறி என்ற பத்திரிகை வெளியான அதே ஆண்டு, அரசாங்கத்தையும், கத்தோலிக்க பள்ளிகளையும் விமர்சித்தமைக்காக தடைசெய்யப்பட்டது.

இந்தநிலையில் உலகில் தற்போது 6580 நாளாந்த செய்தித்தாள்கள் வெளியாவதாக தகவல்கள் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத்தின் செய்தித்தாள்கள்

இலங்கையின் செய்திதாள் வரலாற்றில் மலையகம் என்று கூறப்படும் இந்திய வம்சாவளி தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பல செய்தித்தாள்கள் வெளியாகின.

இந்த செய்திதாள்கள், மலையக மக்களின் பிரச்சினைகளை, கலைக் கலாசாரங்களை வெளிக்கொணர்வதில் காத்திரமான பங்கை வகித்தன.

எனினும் பல்வேறு புறக்காரணிகளால்,அந்த செய்திதாள்கள் தமது வெளியீடுகளை நிறுத்திக்கொண்டன

இந்தநிலையில் மலையகத்தில் இருந்து 1930 ஆம் வருடத்தில் இருந்து வெளியான பதிவுச்செய்யப்பட்ட, செய்யப்படாமல் வெளியான செய்திதாள்களின் பட்டிலை தெரிந்த வரையில் எம்மால் பதிவுசெய்ய முடிந்தது.

இதன்படி,

| | | |
|---|---|---|
| தேசபக்தன் | காங்கிரஸ் | குறிஞ்சி |
| தேசநேசன் | புதிய காற்று | செந்தாமரை |
| மலைமுரசு | புதிய மலையகம் | தாகம் |
| சாரல் | முழக்கம் | பிரியா |
| முத்தமிழ் முழக்கம் | தாக்கம் | மலைக்குருவி |
| மலையகம் | தாயகம் | பாரதி |
| அன்னை | அலைகள் | கலைக்குயில் |
| நதி, | விழிப்பு | விடிவு |
| தீர்த்தக்கரை | தொடர்பு | கலைமலர் |
| கொழுந்து | தொழிலாளி | தோழன் |
| இதயகீதம் | ஜனநாயக தொழிலாளி | பிரியநிலா |
| கொந்தளிப்பு | பார்வை | சூரியகாந்தி - *தற்போது வெளியாகிறது* |
| தீப்பொறி | மின்னல் | உதயசூரியன் - *தற்போது வெளியாகிறது* |
| ஒரு தீப்பொறி | அல்லி | போர்வாள் |
| தீ | அலையோசை | |
| செங்கொடி | முரசு | |
| மாவலி | ஆக்கம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில் செய்திதாள்கள் வெளியானமையை போன்று தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை கொண்டுள்ள கிழக்கு மாகாணத்திலும் செய்திதாள்கள் வெளியாகின. இதன்படி:

கொண்டல்
கிழக்கு தபால்
தினக்கதிர்
ஈழநாதம்
தமிழ்அலை
வார உரைகள்
கிழக்கு மண் - தற்போதும் வெளியாகிறது

## இந்தியாவில் தமிழ்ச் செய்தித்தாள்

இந்தியாவில் முதன்முதலாக வெளியான தமிழ்ச் செய்தித்தாளாக 1882ஆம் ஆண்டு சென்னையில் இருந்து Swadesamitran என்ற செய்தித்தாள் அமைகிறது.

ஊடகவியலாளர் மற்றும் அரசியல்வாதியான G. Subramania Iyer என்பவரால் இந்தச் செய்தித்தாள் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் செய்தித்தாள், இந்தியாவில் குடியிருப்பு ஆட்சிக்கு எதிரான கருத்துக்களை முன்கொண்டுசென்றது.

இதில், பாரதியார் என்ற சுப்பிரமணியபாரதி போன்றோரின் கட்டுரைகளும் வெளியாகின. இந்தச் செய்தித்தாளில் சுப்பிமணியபாரதியார் 1904ஆம் ஆண்டுமுதல் 1906ஆம் ஆண்டு வரை இணை ஆசிரியராகவும் பணியாற்றினார்.

**அனுபவப் பகிர்வு: பத்தி எழுத்து**

**த. மனோகரன்**

*பத்தி எழுத்தாளர்*

“பத்தி எழுத்தாளன் சமூகத்தின் கண்களாக காதுகளாக சிந்தனையாளனாக விளங்குகின்றான்”

ஊடகத்துறையில் அச்சு ஊடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

நாட்டு நடப்புக்களை உலக நடப்புக்களை மக்கள் மத்தியிலே கொண்டு செல்லும் பாரிய பொறுப்பை ஊடகங்கள் சுமக்கின்றன.

செய்திகள், கட்டுரைகள் அறிக்கைகள் என்று அவை பல்வகைப்படுகின்றன. அவற்றிலே பத்தி எழுத்து துறை முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றது.

பத்தி எழுத்து என்றால் என்ன? பத்தி எழுத்து என்பது கட்டுரை வடிவானதுடன் அது ஒரு விடயத்தை தெளிவாக விளங்கிக்கொள்ளுமாறு விரிவாக விபரிப்பதாக அமைகின்றது.

கற்பனை கலக்காத உண்மையை வெளிப்படுத்தும் போது பத்து எழுத்து சிறப்படைகின்றது- வரவேற்கப்படுகின்றது.

பத்தி எழுத்து பல்துறை சார்ந்ததாகவும் அமைகின்றது.

அதன்முலம் குறிப்பிட்ட துறை தொடர்பில் உண்மை நிலை நன்மை தீமைகள் சமுகரீதி யில் எதிர்கொள்ளவேண்டியவை, எதிர்கொள்ளத் தேவையானவற்றை அறிந்துகொள்ள முடி கின்றது.

அரசியல் சமயம் சமூகம் கல்வி மொழி உரிமைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை பத்தி எழுத்தின் மூலம் வெளிப்படுத்தமுடிவதுடன் சமூகத்தின் பார்வையை அவற்றின்மீது பதியச்செய்து தீர்வுகளை எட்டும் வழியைக் காணத்தூண்டவும் முடிகின்றது.

பத்தி எழுத்தாளர்கள் ஒரு பிரச்சினையை அலசி ஆராய்ந்து வெளிப்படுத்துவதுடன் நிற்காது, வாசிப்போர் மனதில் பிரச்சினைகளை, நிலைமைகளை தெளிவாகப் பதிவு செய்யும் ஆற்றல் கொண்டவர்களாக இருப்பதும் அவசியமாகின்றது.

தனது எழுத்தில் தவறுகள் இல்லாத முறையில், தர்க்கரீதியாக ஆதாரங்களை விமர்சிக்க முடியாத முறையில், எவரும் புறந்தள்ளமுடியாதபடி பத்தி எழுத்துக்கள் அமைய வேண்டும்.

அதாவது, விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் பக்கச்சார்பற்ற நிலையைக்கொண்ட பத்தி எழுத்துக்கள் வரலாற்றுச் சான்றுகளாகவும் எடுத்தாளக்கூடிய விளக்கங்களாகவும் அமைய வேண்டும். எதிர்காலத்திலும் பயன்படுபவையாக இருத்தல் வேண்டும்.

பத்தி எழுத்து என்பது மக்கள் மத்தியிலே நேரடியாக உடனடியாகச் சென்றடையும் ஆற்றல் கொண்டது.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த துறையில் ஈடுபட்டவன் என்ற ரீதியில் மன நிறைவு தந்த நிகழ்வுகள் பெருமளவானவற்றைச் சந்தித்த அதேவேளை வழிதவறியோரது மறைமுக எதிர்ப்புக்களுக்கும் உள்ளாகியுள்ள அனுபவமும் எனக்கு உண்டு.

கூறப்போகும் விடயத்தில் தெளிவு உள்ளபோது அந்த விடயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சிக்க முற்படும் எவருக்கும் உரிய பதிலை வழங்கித் தனது கருத்து சரியானது, உறுதியானது என்பதை நிரூபிப்பதற்கான ஆற்றலும் அறிவும் உள்ளபோது ஒரு பத்தி எழுத்தாளன் துணிந்து அச்சமின்றி எழுதமுடியும் என்பது எனது கருத்து.

கடந்தகாலங்களில் வெளியான எனது பத்தி எழுத்துக்கள் மூலம் தமிழர் கல்வி நிலை தமிழ் மொழியுரிமை, வாக்குரிமை தொடர்பான விபரங்கள் மக்களுக்கு அவசியமான ஊழி யர் சேமலாபநிதி தேசிய அடையாள அட்டை உட்பட்ட விடயங்கள் மக்களுக்கும் பெரும் பயன்கொடுத்துள்ளன என்பது மனத்திருப்தியை தருகின்றது.

எழுத்துத்துறை பல்வேறுவகைப்பட்டவையாக பல்வேறு முறைக்ளில் மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டதாக உள்ளது.

இந்தநிலையில் பத்தி எழுத்தானது தரமாக அமையும்போது மக்கள் மத்தியிலே எதிர்பார்ப்பையும் ஆர்வத்தையும் பிரச்சினைகளை விளங்கவும் அவற்றுக்கான தீர்வுக்கான வழியையும் ஏற்படுத்துகின்றது. சிந்தனையை தூண்டுகின்றது.

இவ்வாறான நிலையில் பத்தி எழுத்தாளன் சமூகத்தின் கண்களாக காதுகளாக சிந்தனையாக அமைந்துவிடுகின்றான் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபரப்பு ஊடகவியல்



ஒலிபரப்பு ஊடகவியல் என்ற அம்சம், அச்சு ஊடகத்துக்கு- அதாவது பழைய முறைக்கு பதிலாக மின்னியல் முறையால் பிரசுரப்படுத்தப்படும் ஊடகவியல் என்று கொள்ளலாம்.

வானொலி, தொலைக்காட்சி, மற்றும் இணையங்கள் என்பன இந்த ஒலிபரப்பு ஊடகவியலில் முக்கியத்துவம் பெறுகின்றன.



Video Broadcast Applications

ஒலி அலை, கேபிள் மற்றும் இணையத்தின் ஊடாக இந்த ஊடகவியல் முறை மக்களை சென்றடைகிறது.


இந்த ஊடகமுறை நகரும் படங்கள், நேரடி அம்சங்கள் மற்றும் ஒலி என்பன பொதுவான அம்சங்களாக அமைந்துள்ளன.

பேசுவதற்கான வசன அமைப்புக்கள் ஒலிபரப்பாக அமையும்.

பொதுமக்கள், வசனங்களின் உள்ளடக்கத்தை வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளும் முறைமைக்கு மாறாக, ஒலிபரப்பு செய்வதற்காக தயாரிக்கப்படும் முறையானது, வானொலிப்பேச்சுடன் வித்தியாசமாகப் பிரதிசெய்யப்படுகின்றது.

நாளாந்த அல்லது வாராந்த செய்தித்தாள்கள் ஆகியவற்றைவிட வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன விரைவாகவும் அதிக அளவிலும் கேட்கக்கூடிய முறையில் வடிவமைக்கப்படுகின்றன.


ஒலிபரப்புக் கதைகள் (கட்டுரைகள்) பெட்டகங்களாக, வாசிப்பாளர்களின் குரல்படுத்தலாக, ஒலிப்பதிவுகளாக எழுப்படலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானொலி**



ஒலிபரப்பு ஊடகவியல் துறையில் முதன்மை ஊடகமாக வானொலி கருதப்படுகிறது. முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட வானொலிகள் சமூக வானொலிகளாகக் காணப்பட்டன. இவை இலாபநோக்கில் இயங்கவில்லை.

எனினும் தொடர்ந்து லாபநோக்கிலான வானொலிகள், தொலைக்காட்சி சேவைகள் மற்றும் பத்திரிகைகள் ஆரம்ப மாகின.



மக்கள் தகவல்களையும், இசையையும் கேட்பதற்காக வானொலிகளை நாட ஆரம்பித்தபோது, வானொலியில் பல்சுவை நிகழ்சிகள் ஆரம்பமாகின.

வானொலியானது, சப்தம், (இசை,குரல்) ஒலிகளின் அதிர்வுகளை ஒலி அலைகளாக (இலத்திரனியல் அலைகள்) மாற்றி, வளியுடன் அல்லது வான்வெளியில் பயணித்து, அது தெரிபடவேண்டிய இலத்திரனியல் சாதனத்தின் கட்டுப்பாட்டகத்தில் மோதி, மீண்டும் அதிர்வுகளாகும், ஒலியாகும் அதன் இயல்பு நிலைக்கு மாற்றப்படும் செயற்பாட்டின் அடிப்படையில் இயங்குகிறது.



தந்தியற்ற வானொலியைக் கண்டுபிடிப்பதற்கான படிமுறைகளை உருவாக்குவதில் பலர் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

1800களின் பிற்பகுதி தொடக்கம் இந்த ஆராய்ச்சி மும்முரமடைந்தது. 1878ஆம் ஆண்டு டேவிட் ஈ ஹக்ஸினால் தந்தி இல்லாத வானொலி குறித்து தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.



குறுந்தூர இடைவெளியில் ஒலி அலைகள் பரிமாற்றிக்கொள்ளும் ஆராய்ச்சிகளை அவர் மேற்கொண்டார்.

எனினும் இந்த முயற்சிகளை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்டதன் பின்னர், புகழ்பெற்ற விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசன் இதனை 1880ஆம் ஆண்டு கையேற்றார்.

அவர் ஏற்படுத்திய இலத்திரனியல் தொடர்புக் கட்டமைப்பை, 1891ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 29ஆம் திகதி அமெரிக்க அரசாங்கம் அங்கீகரித்தது.

இந்தக் கட்டமைப்பின் உரிமையை மார்க்கோனி நிறுவனம் 1891இல் பெற்றுக்கொண்டு, அதனை மேலும் வலுப்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக வளர்ச்சிபெற்றது.

**ஒலிரப்புத்துறையில் அன்றும் இன்றும் - அனுபவப் பகிர்வு**

**சி.நடராஜசிவம்**
*ஆலோசகர் - சூரியன் எப் எம் நிகழ்ச்சிப்பிரிவு*

பொதுவாக ஒலிபரப்பு என்பதன் அடிப்படை நாதமாக தகவல், கல்வி மற்றும் பொழுது போக்கு என்பன கருதப்படுகின்றன.

உலகலாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக இவை இருக்கின்றன. இவை வானொலிகளின் மூன்று முக்கிய கடமைகளாகவும் இருக்கின்றன.

செய்தி அறிக்கையை அடிப்படையாகவைத்தே ஓர் ஒலிபரப்பு நிலையத்தின் தராதரம் அடையாளம் காணப்படுகிறது.

செய்திகளின் தரம், அதன் தன்மை போன்றவை இதன்போது கருத்தில் கொள்ளப்படுகிறன.

அடுத்ததாக, அதன் நாடக, நிகழ்ச்சிகளை வைத்து ஒலிபரப்பு நிலையம் மக்கள் மத்தியில் பிரபலம் அடைகிறது.

நாடகம் என்பது பொழுதுபோக்கு அம்சத்துக்குள் அடங்கும். அதேநேரம், இசை மற்றும் கேளிக்கை நிகழ்சிகளும், பொழுதுபோக்கு அம்சத்துக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

கல்வி நிகழ்ச்சிகள் என்பது, தகவலில் இருந்து மாறுபட்டதாக அமைகிறது. இது கல்வியைப் புகட்டும் நோக்கில் அமைகின்றது.

மூன்றாம் உலக நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற விடயமாக இது இருக்கிறது. பொறுப்பாக இயங்கும் ஒரு வானொலியின் முக்கிய கடமைகளாக இவை அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய ஒலிபரப்புத்துறையின் பரிணாம வளர்ச்சியில், பல்வேறு தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தற்போது இலங்கையில் முற்றிலும் மாறுபட்டவகையில், நவீனமயமாக்கப்பட்ட வானொலி சேவைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக தனியார் வானொலிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், இசைக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்கப்பட்டு, இலாபநோக்கில் இயங்குவதால், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மாத்திரமே மையப்படுத்தியதாக தற்போதைய வானொலிகள் அமைந்துள்ளன.

அதேநேரம், இன்று தொழில்நுட்ப ரீதியாக மிகமிக முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் காணமுடிகிறது. உதாரணமாக, ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து, கடந்த 45 வருடங்கள்வரை நாடகங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் நேரடி ஒலிபரப்புக்களாகவே அமைந்திருந்தன.

எவ்வாறான பாரிய நிகழ்சிகளாக இருந்தாலும், அவை நேரடியாக ஒலிபரப்பப்பட்டு வந்தன. ஆனால் தற்போது கிரிக்கட் நேரடி வர்ணனை இந்த அம்சத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

எவ்வாறான பாரிய நிகழ்சிகளாக இருந்தாலும், அவை நேரடியாக ஒலிபரப்பப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது கிரிக்கட் நேரடி வர்ணனை மாத்திரம் இந்த அம்சத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அத்துடன் கோவில் திருவிழா போன்ற சில சிறப்பு நிகழ்ச்சிகள் மாத்திரமே வானொலிகளில் நேரடியாக வர்ணனை செய்யப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன. மற்றைய பெரும்பாலான நிகழ்ச்சிகள் ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன.

நவீன தொழில்நுட்பம் என்பது தற்போதைய நவீன வானொலியில் மிகவும் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. இதனால், தற்போது ஒலிபரப்பு சார்ந்த பணிகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஒலிபரப்பாளர்களைப் பார்க்கும்போது, அன்றைய ஒலிபரப்பாளர்களின் நிகழ்ச்சி வழங்கும் முறைகள் மிகவும் கட்டுக்கோப்புடன், வரையறைக்கு உட்பட்டதாக அமைந்திருந்தன.

அல்லது முதிர்ச்சியான நிலையில் காணப்பட்டன. இன்று ஒலிபரப்பாளர்கள் இலகுவான முறைகளில் நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி கடந்த காலத்தில் காணப்பட்ட வரைமுறைகள், கட்டுக்கோப்புகள் தற்போது படிப்படியாகத் தகர்க்கப்பட்டுள்ளன.

அவை தற்போது மிகவும் இலகுபடுத்தப்பட்டு, கூடிய அளவு வினோத நிகழ்சிகளும் பொழுதுபோக்குத் தன்மையும் நிறைந்ததாக, ஜனரஞ்சக முறைப்படி தமது நிகழ்சிகளை வழங்கிவருகின்றமை பலராலும் வரவேற்கப்பட்டுள்ளது.

இதனால், அறிவிப்பாளர்களின் தனித்தன்மை இலகுவாக மக்கள் மத்தியில் வெளிப்படுத்தக்கூடியதான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வானொலி நிகழ்ச்சிகள் தற்போதும் நிலைத்து நிற்கக்கூடியதாக இருக்கின்றன.

அந்தக்காலத்தில் அறிவிப்பாளர்கள் மத்தியில் சொற்தெளிவு, குரல்வளம், சொற்சரளம் போன்ற விடயங்களில் ஆழமான கவனம் செலுத்தப்பட்டது.

ஆனால் தற்போது அந்த அளவுக்கு அறிவிப்பாளர் தெரிவில் கவனம் செலுத்தப்படாவிட்டாலும், அறிவிப்பாளர்களின் தனித்துவமான திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவர்களுக்கு ஒலிபரப்புத் துறையில் பல்வேறு விடயங்களை அறியச்செய்து, அவர்களை செம்மைப்படுத்துகிறோம்.

அந்தவகையில் பல வானொலிகள் இன்று முன்னிலை வகித்து, உலகளாவிய ரீதியாகவும் சிறப்பான இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

தற்போதைய பண்பலை வானொலிகள் குறுகிய காலத்தினுள் சிறந்த முன்னேற்றத்தை பெற்றுள்ளன.

தற்போது சூரியன் எப் எம் வானொலிகூட ஆரம்ப காலத்திலேயே செய்திகளுக்கு மிகவும் பிரபலமாக இருந்த வானொலி. தற்போதும் அதன் தரம் பேணப்படுகிறது. ஆரம்பத்தில் இருந்தே காசிநவரட்ணம், இந்திரஜித் போன்றவர்கள் செய்திகளைச் சிறப்பாக கொண்டுவந்துள்ளனர்.

அத்துடன் நிகழ்ச்சிகளும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, புதுமையான நிகழ்சிகளை தொடர்ந்து வழங்கிவந்து, மக்கள் மத்தியிலே நல்ல பெயரைப் பெற்றுள்ளமை மகிழ்ச்சி தரக்கூடியவிடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் வானொலி

இலங்கையின் ஒலிபரப்புத்துறை ஐரோப்பிய மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஒலிபரப்புத்துறைக்கு நிகரான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

காரணம், ஐரோப்பாவில் ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருடங்களிலேயே இலங்கையின் ஒலிபரப்புத்துறை குறித்து பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் தொலைத்தொடர்பு திணைக்களத்தின் தலைவராக 1921ஆம் ஆண்டு நியமனம் பெற்ற எட்வர்ட் ஹாப்பர் ஒரு சிறந்த படைப்புத்திறன் மிக்க பொறியிலாளராவார்.

அவர் 1923ஆம் ஆண்டு தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் இருந்த சிறிய அறை ஒன்றில், இத்தாலியின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் இருந்து பெறப்பட்ட ட்ரான்ஸ்மீற்றர் ஒன்றைப் பயன்படுத்தி, இலங்கையில் ஒலிபரப்புப் பரிசோதனையை மேற்கொண்டார்.


Edward Harper

இதில் கிரமோபோனின் உதவியுடன் இசைக்கோர்புகள் ஒலிபரப்பப்பட்டன. அதன் பின்னர் இதுவே 1925ஆம் ஆண்டு முதலாவது வானொலியை இலங்கைக்கு அறிமுகப்படுத்த உதவியது.

இலங்கையில் கொழும்பு வானொலி 1925ஆம் ஆண்டு எட்வேர்ட் ஹாப்பர் (Edward Harper) இனால் ஆரம்பிக்கப்பட்டது.

எனவே Edward Harper இலங்கையின் ஒலிபரப்புத்துறையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

இந்த வானொலி, கைப்பற்றப்பட்ட ஜெர்மனின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றின் வானொலிச் சாதனத்தில் இருந்து ஒலிபரப்பட்டது.

இந்த வானொலி ஒலிபரப்பின்போது 1925ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி உரை யாற்றிய அப்போதைய பிரித்தானிய ஆளுநர் ஞசை ர்ரபா ஊடகைகழசனஇ அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் ஒலிபரப்புத் துறையுடன் இலங்கையும் இணைந்துகொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருடங்களில் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஐரோப்பாவுக்கான சேவை நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது.



இது முன்னர், ரேடியோ சிலோன் (Radio Ceylon), சிலோன் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் (Ceylon Broadcasting Corporation) என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின்போது பிரித்தானிய கூட்டுப்படைகள் இலங்கையின் வானொலி ஒலிபரப்பைக் கைப்பற்றிக்கொண்டன. இதன்போது Radio Seac உருவாக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தபின்னர் Radio Seac இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது குறித்த வானொலி இலங்கை வானொலி Radio Ceylon என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் 1967 ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதியன்று ரேடியோ சிலோன், சிலோன் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு அன்றைய பிரதம மந்திரி, டட்லி சேனாநாயக்கவினால் திறந்துவைக்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கை குடியரசாக்கப்பட்டபோது 1972 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் Sri Lanka Broadcasting Corporation என்று பெயர் மாற்றப்பட்டது.

இலங்கையில் 1970 இன் பிற்பகுதி மற்றும் 1980ஆம் ஆண்டுகளில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் வானொலிகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது இலங்கையின் அரசாங்க ஒலிப்பரப்புத்துறை நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், ஐடிஎன் சுயாதீன தொலைக்காட்சி சேவை, இதன் வானொலி சேவையான லக் ஹன்ட ஆகியன தனியார் வானொலி தொலைக்காட்சிகளுடன் போட்டியைச் சந்தித்தன.

தனியார் வானொலி நிலையங்களாக டெலிஷான் வலையமைப்பின் டிஎன்எல், மஹாராஜா நிறுவனத்தின் சிரச வானொலி, தொலைக்காட்சி, சக்தி வானொலி, தொலைக்காட்சி, ஈஏபி நிறுவனத்தின் சுவர்ணவாஹினி வானொலி மற்றும் வானொலி என்பன உருவாக்கம் பெற்றன.

இதனையடுத்து 1998 ஆம் ஆண்டு புதிய தலைமுறையினருக்காக என்ற அடிப்படையில் ஹிரு, சூரியன், சண், கோல்ட், ஷா எப்.எம் போன்ற தனியார் வானொலிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது இலங்கையில் 40க்கும் மேற்பட்ட தனியார் வானொலி நிலையங்கள் செயற்படுகின்றன.

இலங்கையில் சக்தி, சூரியன், வசந்தம், வெற்றி, அலை, சிஆர்ஐ ஸ்ரீலங்கா லங்கா, இலங்கை ஒலி பரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவை, தமிழ் வர்த்தக சேவை, றுகுன, ரஜரட்டை, கந்துரட்டை, ஊவா,. விதுல, விளையாட்டு மற்றும் டைம்ஸ் வானொலி, கொத்மலை எப்.எம், பிறை எப்.எம், என்பன தமிழ் வானொலி சேவைகளாக உள்ளன.

**அனுபவப் பகிர்வு: ஒலி, ஒளி அறிவிப்பு**

**ஏ.ஆர்.வீ.லோஷன்**

*ஒலி, ஒளிபரப்பாளர்*

எத்தனை நவீன தொடர்பூடகங்களும், சமூக வலைத்தளங்களும் நாளுக்கு நாள் எங்கள் மத்தியில் அறிமுகமானாலும்கூட, வானொலி, தொலைக்காட்சிகளுக்கு இன்னமுமே உலகளாவிய ரீதியில் இருக்கும் முக்கியத்துவமும், அவை பற்றிய தேவையும் எங்கள் மக்கள் மத்தியில் இருந்துகொண்டே இருக்கின்றன.

அதிலும் வானொலி என்பது எம்மக்கள் மத்தியில் என்றுமே ஒரு பிரிக்கமுடியாத பிணைப்புடைய தொடர்பூடகமாக இருந்து வந்திருக்கிறது.

நாகரீகம், நவீன விஞ்ஞான வளர்ச்சி, வசதிகளின் பெருக்கம், சினிமாவின் தாக்கம், மேலைத்தேய பழக்கவழக்கங்கள் என்று பல புறக்காரணிகளின் தாக்கங்களின் காரணமாக நவீன ஒலி, ஒளிபரப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று/முற்றுமுழுதாக மாறுபட்டு பயணித்துக்கொண்டிருந்தாலும், இவற்றின் அத்தியாவசியமான தேவைகள் மக்களால், மிக அபிவிருத்தியடைந்த நாடுகளிலும்கூட உணரப்படுகின்றன.

இலங்கையில் தமிழ் வானொலி, தொலைக்காட்சிகளும் 1990களின் பிற்பகுதியில் இடம்பெற்ற மிக முக்கியமான மாற்றமான தனியார் ஒலி, ஒளிபரப்புக்களின் வருகைக்குப் பிறகு சடுதியான மாற்றங்களைக் கண்டன.

மிகமுக்கியமாக நிகழ்ச்சிக் கட்டமைப்புக்கள், அறிவிப்புப்பாணி, நேயர்களுடனான தொடர்புகள் ஆகியனதான் மிகப்பெரியளவில் மாறிப்போயின.

இவற்றுள் "அறிவிப்பு" என்பது இன்றுவரை வானொலிக்கும் நேயர்களுக்கும் இடையிலான தொடர்புப் பாலமாகவும், தீர்மானிக்கும் சக்தியாகவும் இருந்துவருகின்றது.

ஆரம்பகாலத்தில் பாரம்பரிய அறிவிப்பாக இருந்துவந்த வானொலி அறிவிப்புப் பாணியானது, 90களின் தனியார் ஒலிபரப்புக்களின் ஆரம்பத்துடன் இலகு தமிழ், பேச்சுத் தமிழ் என்று மாறின.

இன்றும் செய்தி அறிக்கைகள், சில நிகழ்ச்சிகள் இலக்கணத் தமிழில் இருந்தாலும் கூட, வானொலி அறிவிப்புக்கள் என்னவோ சாதாரணமாக நாம் பேசுகின்ற மாதிரியாகவே அமைந்து இருக்கின்றன.

தொலைக்காட்சி அறிவிப்புக்களும் கண்ட மாற்றங்கள் மிக சடுதியானவையும், பாரியதுமாகும். தென்னிந்தியத் தொலைக்காட்சியின் தாக்கங்கள் மிக அதிகமாகவே இலங்கைத் தொலைக்காட்சிகளின் அறிவிப்பில் இன்றுவரை செல்வாக்குச் செலுத்துகின்றன.

தொலைக்காட்சி அறிவிப்பில் மொழிவழக்கு, உடல் அசைவுகளில் மாற்றங்கள் வந்தாலும்கூட, அறிவிப்பாளர்களோ, தொகுப்பாளர்களோ தங்கள் பணிகளில் பெரிதாக மாற்றங்களை உணர்ந்திருக்கமாட்டார்கள்.

ஆனால் வானொலியின் பாரம்பரிய அறிவிப்புப் பாணி முற்றுமுழுதாக மாறியதன் பின்னர், எழுதிய பிரதிகளை வாசிக்கின்ற பாணியிலான "அறிவிப்பு" மாறி, தகவலை வழங்கி, வாசிக்கின்ற அறிவிப்பு முறை மாற்றம்பெற்று, அறிவிப்பாளர்கள் தொகுப்பாளர்களாக மாறிய காலத்தை இப்போது காண்கிறோம்.

இப்போதைய கால வானொலி அறிவிப்பாளர்களுக்கு மேலதிக கடமைகளும், பொறுப்புக்களும் சேர்ந்து அவர்களை ஒரு சகலதுறையாளர்கள் ஆக்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்புக்களை செய்யும் முன்னர் தாங்கள் சொல்கின்ற விடயங்களைத் தயார்படுத்துவதும் அவர்கள் நேர முகாமைத்துவம் செய்கிறார்கள் ஒலிபரப்புக் கலையகத்திலிருந்து கருவிகளை இயக்கி, நேயர்களுடன் நேரடியாகப் பேசி, வருகின்ற உடனடிப் பதில்கள், நிகழ்ச்சி பற்றிய கருத்துக்களைக் கேட்டு, அறிந்து, அடுத்தடுத்த பாடல்களை ஒலிபரப்புக் குத் தயார் செய்து, இப்படியே பல விடயங்களை சிந்தித்து செயற்படுத்தவேண்டி இருக்கிறது.

ஒரு விடயத்தில் சிறப்புத் தேர்ச்சி என்பது இயல்பான விடயம். ஆனால் இத்தனை விடயங்களிலும் ஒருவர் தேர்ச்சி பெற்று, அதனை அழுத்தங்களின் மத்தியில் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் அவதானிக்காத வண்ணம் சரியாக செயற்படுத்துவதேன்பது ஒரு நேர்த்தியான கலை தானே?

இதனால்தான் அறிவிப்பாளர்களாக வர ஆசைப்படுவோர் பலவிதமான பயிற்சிகளில் பல காலம் ஈடுபடவேண்டி இருக்கிறது.

இதுமட்டுமல்லாமல் மேலும் செய்திவாசிப்பு, விளம்பர அறிவிப்பு, பிரதி எழுதல், நிகழ்ச்சித் தயாரிப்பு, விளம்பர, நிலையக்குறியிசை போன்றவற்றை உருவாக்குதல், விளையாட்டு நிகழ்ச்சி அறிவிப்புக்கள், நேரடிக் கள நிலவரத் தகவல்கள், திட்டமிடல் விரிவாக்கல் போன்ற பணிகளிலும் தங்களை ஈடுபடுத்தி முறையாகப் பயின்றாலே இந்தக் கால கட்டத்தில் ஒரு பூரணமான, முழுமை பெற்ற ஒலிபரப்பாளர் அறிவிப்பாளர் ஆகலாம்.

போட்டி நிறைந்த இந்தக்கால ஒலிபரப்புத் துறையிலே முந்திக்கொள்ளவும், தங்களை நிலைநிறுத்தவும், நின்றுபிடிக்கவும் இத்தனை விடயங்களையும் சந்தேகமின்றி சரியாகக் கற்கவும், அதன் பின் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் செயற்படுத்தவும் வேண்டியிருக்கிறது.

இந்தக் காலத்திலே அறிவிப்பாளர்களுக்கான பயிற்சிநெறிகளைப் பலரும் ஒரு வியாபாரமாக மாற்றி 'விற்று' வருவதனால் அறிவிப்பாளராகும் ஆர்வத்துடன் வரும் பலரும் முறையான கல்வியைப் பெறுவதில்லை. அவர்களது காலமும் பணமும் வீணாவதுடன் எதிர்காலமும் நல்ல அறிவிப்பாளர்களை இழந்துவிடும் துரதிர்ஷ்டமும் இருக்கிறது.

அறிவிப்பாளராக விரும்பும் ஒருவர் மிக அடிப்படையாக தனது தமிழ் மொழிவளம், உச்சரிப்பில் இருந்து ஆரம்பிக்கவேண்டியது அவசியமானது.

சுய தேடல், வாசிப்புப் பழக்கம், ஞாபக சக்தி, பொது அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் ஆர்வம், அரசியல், விளையாட்டு, சினிமா, வரலாறு, தொழில்நுட்பம் போன்ற விடயங்களில் போதிய அறிவு என்பனவும் மேலதிக தகைமைகளும் சேர்ந்துகொள்ளும்போது ஒருவருக்கான அறிவிப்பாளர் என்ற இலட்சியப் பாதையின் பயணம் இலகுவாகிவிடுகிறது.

எனவே, புதிய அறிவிப்பாளர்களும் ஒரு வட்டத்துக்குள் கட்டுண்டுபோகாமல் பரந்த ஆற்றலுடன் செயற்பட்டு புகழ்பெறவேண்டும் என்பதே எனது ஆசை!

## இந்தியாவில் வானொலிகள்

இந்தியாவில் வானொலி தோற்றத்தை எடுத்துக்கொண்டால், யுடட ஐனெயை சுயனழை மற்றும் Public broadcaster Prasar Bharti நிறுவனங்களைத் தவிர தற்போது 245 தனியார் எப்.எம் வானொலி சேவைகள் இயங்குகின்றன.

பிரித்தானியாவின் கீழ் இந்தியா இருந்தபோது Radio Club of Bombay மற்றும் Radio clubs 1923 ஆம் ஆண்டு ஒலிபரப்புகளை ஆரம்பித்தன.

1927 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் தனியாருக்குச் சொந்தமான இந்திய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இரண்டு வானொலி சேவைகளை நடத்த அனுமதியை பெற்றுக்கொண்டது.

இதன்படி மும்பாய் வானொலி நிலையம் 1927 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதியும் கல்கத்தா நிலையம் 1927ஆகஸ்ட் 26 ஆம் திகதியும் தமது ஒலிபரப்புகளை ஆரம்பித்தன.

1930 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதலாம் திகதி, இந்திய அரசாங்கத்தின் ஒலிபரப்பு சேவை (ISBS) ஆரம்பிக்கப்பட்டது .

இதனையடுத்து 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றபின்னர், யுஐசு நெவறழசம வலையமைப்பு புதுடில்லி, மும்பாய், கல்கத்தா, சென்னை, லக்னோவ், திருச்சி ஆகிய இடங்களில் 6 ஒலிபரப்பு நிலையங்களைக் கொண்டிருந்தது.

இதனையடுத்து 1957 ஆம் ஆண்டு ஒக்டோபர் 3ஆம் திகதி ஏளைனொ டீாயசயவை நிறுவனம், இலங்கை வானொலிக்குப் போட்டியாக தமது சேவையை ஆரம்பித்தது. இந்தநிலையில் 1959 ஆம் ஆண்டு, புதுடில்லியில் தொலைக்காட்சி சேவையையும் AIR network ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையடுத்து குறித்த வானொலி வலையமைப்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தூரதர்சன் (Doordarshan) வலையமைப்பு 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதனையடுத்து தூரதர்சன், 1977 ஆம் ஆண்டு ஜுலை 23 ஆம் திகதியன்று எப்.எம் சேவையை சென்னையில் ஆரம்பித்தது.

'AIR' என்ற All india Radio 1956 ஆம் ஆண்டு முதல் ஆகாஷ்வாணி (வான்குரல்) என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

இந்தநிலையில் உலகின் பெரிய வானொலி ஒலிபரப்புகளில் ஒன்றாக யுஐசு கருதப்படுகிறது.

AIR நாள்தோறும் 27 மொழிகளில் 72 மணித்தியால சேவையை 108 நாடுகளுக்கு நடத்துகிறது. இதில் 15 வெளிநாட்டு சேவைகளும் 12 உள்ளூர் சேவைகளும் அடங்குகின்றன.

உலகின் பல பாகங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ் வானொலிகள் இந்தியா - தமிழ் நாடு அனைத்திந்திய வானொலி - தமிழ்நாடு பல பண்பலைகளும், மத்திய அலைக ளும், சிற்றலைவரிசைகளையும் கொண்டுள்ளது. இலங்கையிலும் செவிமடுக்கலாம்.

**உலகின் பல பாகங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ் வானொலிகள்**

**இந்தியா - தமிழ் நாடு**

அனைத்திந்திய வானொலி - தமிழ்நாடு பல பண்பலைகளும், மத்திய அலைகளும், சிற்றலைவரிசைகளையும் கொண்டுள்ளது. இலங்கையிலும் செவிமடுக்கலாம்.

**ஏனைய தனியார் வானொலிகள்**

ஆஹா எப்.எம்.
அண்ணா எப்.எம்
பிக் எப்.எம்.
சென்னை லைவ் வானொலி
கியான் வாணி
ஹலோ எப்.எம். (தமிழ்)
லொயொலா எப்.எம். (தமிழ்)
லிக்கெஸா எப்.எம். (தமிழ்)
மொப் எப்.எம். (தமிழ்)
ரேடியோ சிற்றி (தமிழ்)
ரேடியோ மிர்ச்சி (சன் டி.வி. குழுமம்)
ரேடியோ வன் (தமிழ்)
சூரியன் எப்.எம்.

**இந்தியா - புதுச்சேரி**

அனைத்திந்திய வானொலி - புதுச்சேரி நிலையம்
ஹலோ எப்.எம். (தமிழ்)
சூரியன் எப்.எம்.

**பிரித்தானியா**

தமிழோசை - பிபிசி உலக சேவை
ரி.பி.சி. லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனடா**
தமிழ் ஸ்டார் வானொலி
கனேடியன் தமிழ் வானொலி
கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
சி.எம்.ஆர் தமிழ் எப்.எம். - கனேடிய பல்கலாசார வானொலி
வணக்கம் எப்.எம்.
கலசம் வானொலி
வெளிச்சம் எப்.எம்.
கீதவாணி

**அவுஸ்திரேலியா**
அஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத் தாபனம் - (ATBC)
அவுஸ்திரேலிய விசேட ஒலிபரப்பு கூட்டுத் தாபனம் (SBS)

**மலேசியா**
மின்னல் எப்.எம்
ரி.எச்.ஆர் எப்.எம்.

**சிங்கப்பூர்**
ஒலி எப்.எம். - அல்லது எஸ்.பி.சி.
பிரான்ஸ்
தமிழ்ஒலி வானொலி
தமிழ் ஹிப்.ஹொப். வானொலி
மொரீஸியஸ்
ஒனெக்ஸ் எப்.எம் வானொலி

**சுவிட்சர்லாந்து**
சிவன் கோவிலின்-பக்தி மலர்கள் வானொலி

**பாகிஸ்தான்**
பாக்கிஸ்தான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தமிழ் சேவை - ஹிந்து மக்கள் இனத்தவர்களுக்காக தொழிற்படுகிறது.

### ஒலி - ஒளிபரப்பில் செய்தி வாசிப்பு ஒரு உயரிய கலை

செய்தி சேகரிப்பு, செய்தி எழுதுதல், செம்மைப்படுத்தல் என்பவற்றிற்கு அப்பால் செய்தியை ஒலி-ஒளி ஊடகங்களின்மூலம் நேயர்களைச் சென்றடையச் செய்யும் முக்கிய பாத்திரம் செய்தி வாசிப்பாளரைச் சார்ந்திருக்கிறது. அவரின் வாசிப்புத் திறமையே செய்திக்கான வெற்றியை உறுதிப்படுத்துகிறது.

**செய்தி வாசிப்பு தொடர்பில் அனுபவப்பகிர்வு -**
**ஷியானா ஜுனைடீன்**
*ஒலிபரப்பாளர்*

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற, ஆன்றோர் வாக்கை நம்புபவள் நான். அந்த அடிப்படையில் செய்தி வாசிப்பின்போது என் உணர்வுகள் எனும் தலைப்பில் அவ்வேளையிலிருந்த என் எண்ணங்களை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனும் ரீதியில் உங்களோடு சற்றுப் பகிர்ந்துகொள்ள விழைகின்றேன்.

திடீரென்று ஒரு நாள் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதிலிருந்து ஒரு குரல். எங்கோ கேட்ட அந்த நன்கு பரிச்சயமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலுக்குரியவர் இந்திரஜித். அவரின் நட்புடன் கலந்த அன்பான வேண்டுகோளுக்கமைய, என் ஊடக வாழ்க்கைப் புத்தகத்தின் சுமார் 13 வருடங்கள் பின்னோக்கிச் சென்று, அப்பக்கங்களைப் புரட்டிப் பார்த்து, அதிலிருந்து சில துளிகளை உங்களுக்காய் மீள்பதிப்புச் செய்கின்றேன்.

என்னைப்பொறுத்தவரை நேரசூசிக்கமைய செய்தி வாசிக்கும் ஒவ்வொரு முறையும், அது தான் எனது முதலாவது செய்தி வாசிப்பு எனும் எண்ணமும், ஆர்வமும் இருந்தன என்றுதான் சொல்லவேண்டும்.

இன்று சிந்திக்கும்போது அது ஓர் ஆரோக்கியமான விடயம் என்றே தோன்றுகின்றது.

ஏனெனில் எந்தவொரு விடயத்தினையும் முதன்முதலில் செய்யும் போது அதிற் செலுத்தும் கவனம் தனித்துவமானது என்றே கருதுகின்றேன்.

செய்தி வாசிப்பில் 'டென்சன்' இல்லாமலிருக்க மட்டுமட்டான நேரத்தில் செய்தித் தொகுப்பாசிரியரிடம் போய் அவற்றைப் பெற்றுக்கொள்ளாமல், குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்னராவது அதனைப் பொறுப்பேற்பேன்.

அவற்றை வாசித்து நான் நிறுத்த வேண்டிய இடங்களில் (வசனங்களைப் பொருத்தமாகத் துண்டாடி), எனக்குப் புரியும் விதத்தில் அடையாளங்களை இட்டு, புரியாத சொற்களை, சொற்பிரயோகங்களை தொகுப்பாசிரியரிடம் கேட்டுப்புரிந்துகொள்வேன். அப்பொழுதுதான் அந்தச் செய்தியறிக்கை முழுமை பெறும் என்பது எனது எண்ணம்.

ஆனாலும் திடீரென்று அவசரச் செய்திகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பதற்றமின்றி நிதானமாக வாசிக்கக் கூடிய அறிவும், ஆற்றலும், பக்குவமும் ஒரு செய்தி வாசிப்பாளருக்கு இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

அதற்கமைய செய்தி வாசிப்பவருக்கும், செய்தித் தொகுப்பாசிரியருக்குமிடையே நல்லதொரு தோழமை நிலவவேண்டும். அது என்வரையில் சரியாகவே அமைந்திருந்தது என்றே கூறவேண்டும்.

எல்லாச் சொற்களும் எல்லோருக்கும் இலகுவானதல்ல. சில சொற்களை சிலர் இலகு வாக உச்சரிக்கும் அதேவேளை ஒருசிலருக்குக் கஷ்டமாகவிருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தொகுப்பாசிரியரும், செய்தி வாசிப்பாளரும் இணைந்து அந்தச் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களாக அவற்றை மாற்றலாம். அந்தவகையில் என்னைத் தடுமாற வைக்கும் ஒரு சிறு சொல் 'இளைஞர்' ஆகும். அவற்றைக் காலப்போக்கில் தொடர் பயிற்சி மூலம் சரியாக்க முயற்சி செய்யவேண்டும்.

சேர்த்து எழுதப்பட்ட சில நீண்ட சொற்களை வாசிப்பதில் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்களில் சறுக்கல் ஏற்பட வாய்ப்புண்டு.

அப்படியான வசனங்களைப் பிரித்து, கருத்துக்கள் மாறுபடாதவகையில் கூறலாம். பிரிக்கமுடியாத சொற்களைச் சற்று நிதானமாகச் சொல்லலாம்.

செய்தியறிக்கை ஒன்றை வாசிக்கும்போது ஒரு செய்தியை முடித்து மறுசெய்தியைத் தொடங்குவதில் ஒரு நயமிருத்தல் வேண்டும்.

இத்தனை முன்னேற்பாடுகளுடன் செய்தியை வாசிக்க ஆரம்பிக்கும்போது மனம் நிதானமான நிலையிலிருக்கவேண்டும்.

சந்தர்ப்பவசத்தால் செய்தி வாசிக்கும்போது ஒரு சொல்லில் தடுமாற்றம் ஏற்பட்டால் நம்மையும் மீறி மீண்டும் மீண்டும் தடுமாற வாய்ப்புண்டு. அதனை எமது மனத்திடத்தினால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும்.

வேற்று மொழிச் சொற்கள், பெயர்கள் போன்றவை அவ்வவ் மொழிகளின், அவரவர்களின் (பெயர்களுக்குரியவர்களின்) உச்சரிப்பில் அமைவது சிறந்த விடயம் என்பது எங்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின்போது கூறப்பட்ட ஒரு விடயமாகும்.

அதனை நானும் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். ஏனெனில், என் பெயரை நான் எதிர்பார்க்கும் விதத்தில் யாராவது உச்சரிக்கும்போது அவர்கள் எனக்கு நெருக்கமானவர்கள், வேண்டப்பட்டவர்கள் என்ற உணர்வு எனக்குள் ஏற்படும். அதுபோன்றே செய்தி வாசிப்பவருக்கும், நேயர்களுக்குமிடையே நெருக்கம் ஏற்பட இந்த மொழி உச்சரிப்பு ஒரு பாலமாக அமையும்.

செய்தியறிக்கை என்பதை பாமர மக்களும் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் செய்தி வாசிப்பவர் வாசிக்கவேண்டும். நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தி, அழுத் தம் கொடுக்கவேண்டிய இடங்களில் அழுத்தம் கொடுத்து, ஏற்ற, இறக்கங்களோடு வாசிப்ப தில் உச்ச கவனம் செலுத்தவேண்டும்.

இத்தனை கவனங்களுடன் செய்தியை வாசித்து முடிக்கும்போது இது சரியாக மக்களிடம் சென்றடைந்ததா? என்ற ஒரு அங்கலாய்ப்பு என்னுள் இருந்துகொண்டே இருக்கும்.


வெளியில் வந்து அன்றைய செய்தித் தொகுப்பாசிரியரோ அல்லது வேறு யாராவதோ "இன்று செய்தி சரியாக அமைந்துவிட்டது ஷியானா" என்று சொல்லும்போது அந்த அங்கலாய்ப்புக் குறைந்து மறுமுறை இதைவிட நன்றாக வாசிக்கவேண்டும் என்ற உணர்வும், தெம்பும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் மாறலாம். கோலங்களும் மாறலாம். ஆனால் ஒரு செய்தியறிக்கையின் வாசித்தளித்தல், மக்களிடம் சென்றடையும் முறையில் அதிக மாற்றங்கள் இல்லையென்றே கருதுகின்றேன்.

## தொலைக்காட்சி



செய்திகள் மற்றும் தகவல்களை மக்களுக்குக் கொண்டுசெல்லும் மிகமுக்கியமான ஊடகமாக தொலைக்காட்சி விளங்குகின்றது.

கட்புலன் செவிப்புலன் ஆகியவற்றுக்கு நேரடியான பங்களிப்பை இந்த தொலைக்காட்சி செய்கின்றது.

ஒரு தொலைக்காட்சியானது தொடர்ச்சியான தரமான நிகழ்ச்சிகளை செவ்வனே வழங்குவதன் மூலமே ரசிகர்களை தன்வசம் எப்போதும் வைத்துக்கொள்ளமுடியும்.

**அனுபவப் பகிர்வு:**

**ஏ. ஆர். இர்ஃபான்**

*வசந்தம் தொலைக்காட்சி நிறைவேற்று நிகழ்ச்சித் தயாரிப்பாளர்*

பொதுவாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சமூக நோக்கம், வியாபார நோக்கம் போன்ற வற்றைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படுவது வழக்கம். எனினும் தற்போது இவை இரண் டையும் சமமாகக் கருத்தில்கொண்டே நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. இப்படியான நிகழ்ச்சிகளே பெரும்பாலும் வெற்றிபெறுகின்றன.

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் கலையகத்தயாரிப்பு (Studio Production) வெளிக்களத் தயாரிப்பு (Outside Brodcasting) என்று நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. பொதுவாக கலையகத் தயாரிப்புக்கள் நேரலையாகவே அமைகின்றன. தவிர ஒளிப்பதிவு செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகளும் உள்ளடங்குகின்றன.

கலையகத் தயாரிப்பு (Studio Production)

செய்திகள் உட்பட காலை நேர மாலை நேர நிகழ்ச்சிகளை கலையகத் தயாரிப்பாக குறிப்பிடலாம்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே இந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையகத்திற்கு வருகை தருகிறார்.

அன்றைய நாளையும் அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியின் பல விடயங்களையும் அடிப்படையாக வைத்து தயாரிப்பாளர் ஒருவரினால் நிகழ்ச்சி தொகுத்து வழங்கப்படுகிறது.

தயாரிப்பாளரின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப (line up) நிகழ்ச்சிகள் நேரலையாக வழங்கப்படுகின்றன.

அந்த நிகழ்சிக்கான கருத்திட்டங்கள், பாடல்கள் உட்பட்ட தகவல்கள் அத்தனையையும் தயாரிப்பாளரே தீர்மானிக்கின்றார்.

ஒரு குறிப்பிட்ட நேரலை நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாவதற்கு முன்னர் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் ஒப்பனையிட்டுக்கொள்கின்ற குறித்த நேரத்துக்கு முன்னதாகவே அவர்கள் கலையகம் வருகிறார்கள்.

காத்திருக்கும் தயாரிப்பாளர் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் தங்களது பணிகளை தொடர்கின்றனர்.

கலையகத்துக்குள் Lighting Director அந்த நிகழ்ச்சிக்குச் தேவையான ஒளியமைப்பை செய்கிறார்கள். அரங்க அமைப்பாளர்கள் அரங்க வேலைகளைக் கவனிக்கின்றனர் (set).

அதனைத்தொடர்ந்து உபகட்டுப்பாட்டறையில் (Sub Countrol Room) வீடியோக்களும் (காணொளிகள்) ஓடியோக்களும் (ஒலி) பரீட்சிக்கப்படுகின்றன.

வீடியோ காட்சிகளை கட்டுப்படுத்த விசன் மிக்சரும் (காட்சிக் கலவை) ஓடியோவை கட்டுப்படுத்த ஓடியோ மிக்சரும் (ஒலிக்கலவை) தயாரிப்புக்கு உதவுகின்றன. Sub control Room இல் இருக்கும் தயாரிப்பாளர் சரியான நேரத்துக்கு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தித் தொகுத்து வழங்குகிறார்.

அதுவே பிரதான கட்டுப்பாட்டறையின் ஊடாக ஒளிபரப்பு கோபுரங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

Sub control Room இல் இருக்கும் தயாரிப்பாளர் சரியான நேரத்துக்கு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தித் தொகுத்து வழங்குகிறார்.

அதுவே பிரதான கட்டுப்பாட்டறையின் ஊடாக ஒளிபரப்பு கோபுரங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

**நேரலை** (OB - Outside Broadcast)

இங்கே களத்தெரிவுக்கு பிரதானமாக தேவைப்படுவது OB BUS என்ற வாகனமாகும். பிரதான கலையகத்திலே பார்த்த உப கட்டுப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையின் வேலைகளை செய்யும் ஒரு நடமாடும் கலையகமே இந்த OB BUS ஆகும்.

இங்கே கலையகம் தேவையில்லை. களம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. பகல் வேளை யில் லைட்டிங் தேவைப்படாது. காரணம், நமக்குப் போதுமான சூரிய ஒளி கிடைக்கப் பெறும். இதுவே இரவு நேர நிகழ்ச்சியாக இருந்தால் லைட்டிங் (ஒளி அமைப்பு) தேவைப்படும்.

கலையகத்தில் இடம்பெறுவதுபோல் நிகழ்சிகளை நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் தொகுக்க ஔட மருளு மூலம் பிரதான கட்டுப்பாட்டு அறை (MCR) க்கு நிகழ்ச்சிகள் நேரலையாக செய்மதி மூலம் கொண்டுசெல்லப்படுகின்றன.

அதன் பின்னர் ஒளிபரப்புக் கோபுரத்தின் ஊடாக ரசிகர்களுக்கு நிகழ்சிகளை ரசிக்கும்படியாக ஒளிபரப்பப்படுகிறது.

**ஒளிப்படக்கருவி** (Camera)



படப்பிடிப்புக் கருவிகளைப் பொறுத்தவரையில் ஆரம்பகாலந்தொட்டு பல Cameraக்கள் பாவிக்கப்பட்டுவருகின்றன. அதிலும் அண்மைக்காலமாக Beeta Cameraக்களே பயன்படுத்தப்பட்டுவந்தன. தற்போது HD Cameraக்கள் அதிகளவு பாவனையில் உள்ளன.

**ஒலிவாங்கி** (Mic)

பொதுவாக Studio தயாரிப்புக்களுக்காக Clip on mic வகைதான் பயன்பாட்டில் உள்ளது. இதுவே தொகுப்பாளர் பேசுவதை நாம் கேட்பதற்கு உதவுகிறது.

**செவி வாங்கி** (Earpiece)

தயாரிப்பாளருக்கும் நிகழ்ச்சித் தொகுப்பாளருக்கும் இடையில் இது பயன்படுத்தப்படுகிறது.

இதுவே அவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள பிரதான தொடர்பாடல் கருவியாக இருக்கிறது.

நிகழ்ச்சியில் என்ன பேசவேண்டும், அடுத்து என்னென்ன செய்யப்போகிறோம் என்ற அறிவுறுத்தல்களை தயாரிப்பாளர், தொகுப்பாளருக்கு இதன்மூலம் வழங்குகிறார்.

உப கட்டுப்பாட்டு அறையில் (Sub control Room) தயாராகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழ்சிகள் பிரதான கட்டுப்பாட்டு அறையை (Main Control Room) சென்றடைகின்றன.

அதன் பின்னர் பிரதான கட்டுப்பாட்டு அறையிலிருந்து பிரதான கட்டுப்பாட்டாளரின் உதவியுடன் ஒளிபரப்புக் கோபுரத்துக்கு கடத்தப்படும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பி Transmitter மூலமாக ரசிகர்களை சென்றடைகின்றன.

**தயாரிப்பாளர்கள்**

ஒரு நிகழ்ச்சியைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுகின்றவராக இவர் விளங்குகிறார்.

முதலில் நிகழ்ச்சிகளின் தேவையை உணர்ந்து தயாரிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

யாரை வைத்து நிகழ்ச்சியைத் தயாரிக்கலாம் என்று மேலதிகாரியுடன் கலந்துரையாடியதன் பின்னர் நிகழ்ச்சிக்கான களம் அமைகிறது.

பின்னர் சந்தைப்படுத்தல், அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்படுகிறது.

அதன் பின்னரே தயாரிப்பாளர் தயாரிப்புக் கடமைகளை ஆரம்பிக்கிறார்.

தயாரிப்புக்கு ஆரம்பித்ததும் அதற்கான வளங்களை, தகவல்களை தயாரிப்பாளர் சேகரிக்க அனுகப்படுகிறார்.

அதேநேரம், தயாரிப்புப் பணியின்போது, தயாரிப்பாளர் தனக்கும் தெரியாத பல விடயங்களையும் சேகரிக்கிறார்.

இதன்மூலம் காட்சி அமைப்பு திறம்பட நடைபெறுகிறது. காட்சி விரிவடைகிறது. இதனால் தயாரிப்பாளரையும் தாண்டி தகவல்கள் வெளிவரும்.

**எனது தயாரிப்பு**

எனது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு முதலில் களம் தெரிவுசெய்யப்படுகிறது. பின்னர் பொருத்தமான கலைஞர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

கலைஞர்களுக்கான ஒப்பனை (Make up) ஒளிநாடா, அரங்க அமைப்பு, போக்குவரத்து வசதிகள் போன்றனவும் குறித்த நிகழ்சிக்காக தயார்படுத்தப்படுகிறது.

அதன்பின்னர் தயாரிக்கப்போகும் நிகழ்ச்சிக்கான நிகழ்ச்சி மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு (Story board) உருவாக்கப்படுகிறது.

நிகழ்ச்சி மாதிரி அமைப்பு (Story board)

காட்சியமைப்புகள் எவ்வாறு ஒளிப்பதிவு செய்யப்படவேண்டும் என்ற கட்டளைகளை சுருக்கமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

எப்போதுமே தயாரிப்பாளராக நான் கடமையில் இருக்கும் தருணத்தில் எல்லோருடனும் இயல்பாகப் பழகுகின்றேன்.

இது ஒவ்வொரு தயாரிப்பாளருக்கும் இருக்கவேண்டிய மிக முக்கியமான பண்பு என்று சொல்லலாம்.


அப்போதுதான் நாம் எதிர்பார்த்ததைவிட தயாரிப்பு மிகச்சிறப்பாக அமையும்.

தயாரிப்புக் கடமையில் இருக்கும் ஒளிப்பதிவாளர்கள், ஒளி-ஒலி அமைப்பாளர்கள், ஒப்பனையாளர்கள், மற்றும் குழுவினரின் (Crew) மனோநிலையை ஒரே நிலைக்குக் கொண்டு வரும் பொறுப்பு எப்போதுமே தயாரிப்பாளர்கள் சார்ந்ததாக அமைகிறது.

தவிர, களத்திலே நாம் ஒளிப்பதிவு செய்யும் காட்சிகளுக்கு மேலதிகமான விடயங்களும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

ஒளிப்பதிவாளர், நிகழ்ச்சித்தொகுப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடி ஒரு முழுத் தயாரிப்பாக நிகழ்ச்சி தொகுக்கப்படுகின்றது.

தயாரிப்புக்குப் பொருத்தமான வரைகலையும் (Graphic) சேர்க்கப்பட்டு நிகழ்ச்சித் தொகுப்பாளரின் உதவியுடன் நிகழ்ச்சி திறம்பட தரமாக வழங்கப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கையில் தொலைக்காட்சி

இலங்கையில் தொலைக்காட்சி வலையமைப்பு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி ITN சுயாதீன தொலைக்காட்சி சேவை இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி சேவையாக ஆரம்பிக்கப்பட்டது.

இது 1979 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதியன்று அரசாங்க உடமையாக கொண்டு வரப்பட்டது.

பின்னர் இது 1982 ஆம் ஆண்டின் சட்டப்படி புதிதாக உருவாக்கப்பட்ட இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1992 ஆம் ஆண்டு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களை அமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் மஹாராஜா தொலைக்காட்சி வலையமைப்பு (MTV) சிங்கப்பூர் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் (SingTel) இணைந்து தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.

இலங்கையில் 2012 டிசம்பர் வரை எனலொக் எல்லைப்படுத்தப்பட்ட வலையமைப்புகள் (Analog Terrestrial Networks):

சுயாதீன தொலைக்காட்சி (ITN), ரூபவாஹினி கூட்டுத்தாபனம், எம் டி வி ஸ்போர்ட்ஸ், டி.என்.எல், ஈடிவி, சக்தி டிவி, செனல் ஐ.டிவி லங்கா, ஆர்ட் டெலிவிஷன், டிவி தெரன, மெக்ஸ் டிவி, நேத்ரா டிவி, வசந்தம் டிவி, சீயத்த டிவி, வர்ணம் டிவி, பிரைம் டிவி, என்டிவி, டான் டிவி, சிசிடிவி, கார்ல்டன் ஸ்போட்ஸ் நெற்வேக், தெ புத்திஸ்ட் டிவி, ஹிரு டிவி.

செய்மதி மற்றும் கேபிள் வலையமைப்புகளில் உள்ளூர் தொலைக்காட்சி சேவை

யங் ஏசியா, ஶ்ரீலக்வாஹினி, ஶ்ரீடிவி, தர்மவாஹினி, தெ புத்திஸ்ட், சிட்டி ஹிட்ஸ், கொஸ்பெல் விஷன், செனல் சி, லக்று, இன்போ டிவி, ஹெரிடேஜ் டிவி, டிவி நெத், வன் ஶ்ரீலங்கா, நொலேஜ் டிவி, டிவி ட்ரீம் மியூசிக், நெசாஸா டிவி, வன் சிக்ஸ் செனல்,சுவர்கா டிவி, ரிதீ டிவி, சராடா டிவி.

கொடுப்பனவு தொலைக்காட்சி வலைமைப்பு
Pay Television Networks (Sri Lankan Owned)
பியோ டிவி PEO TV (SLT Visioncom),
லங்கா புரொட்பேண்ட் (Lanka Broadband Networks (LBN)
டயலொக் டிவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொலைக்காட்சியும் உபதலைப்பும் (Sub title)**

**அனுபவப்பகிர்வு : பீஷ்ருல் ஹாபி காசீம் -**

*உபதலைப்புக் கலைஞர்*

தொலைக்காட்சி, இன்று உலகம் பூராகவும் மிகவும் பிரபல்ய ஊடகமாக மாறியிருப்பது ரசிகர்களுக்கு ஒலி, ஒளி ஊடாக இரசனையை ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய அதற்கேயுரிய ஓர் இயல்பினால் ஆகும்.

1970ஆம் தசாப்தத்தின் இறுதிப்பகுதியில் இலங்கை ஊடகத்துறைக்குள் பிரவேசித்த தொலைக்காட்சி, இல்லாத வீடே இன்று இல்லையென்று கூறலாம்.

இதன் ரசிகர்களிடையே மிகவும் விரும்பத்தக்க நிகழ்ச்சிகளில் தொலைக்காட்சி நாடகங்களையும் (டெலி) திரைப்படங்களையும் குறிப்பிடலாம்.

தொலைக்காட்சி நாடகத்துறையில் இலங்கை முன்னிலையில் இருந்தபோதிலும் இலங்கையில் இன்னும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் அநேக திரைப்படங்கள் (சிங்களத் திரைப்படங்கள் தவிர்ந்த) வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டவையாகும்.

இவற்றில் தமிழ், ஹிந்தித் திரைப்படங்கள் மீது இலங்கை ரசிகர்களுக்கு இருக்கும் அளவுமீறிய மோகம் காரணமாக, இவ்வாறான திரைப்படங்கள் இன்று இலங்கையில் உப தலைப்புகளுடன் ஒலி ஒளிபரப்பும் வகையில் பிரபல்யம் பெற்றுள்ளன.

இதனூடாக தாம் அறியாத மொழியைக்கூட புரிந்துகொண்டு, அதனை ரசிக்கும் சந்தர்ப்பம் ரசிகர்களுக்குக் கிடைத்துள்ளது.

கணினித் தொழிநுட்பம், தொலைக்காட்சி ஆகிய இரண்டினதும் ஒத்துழைப்புடன் உருவாகும் இந்த உபதலைப்புக் கலையைப்பற்றி, ஓர் உபதலைப்புக் கலைஞர் என்ற ரீதியில் சில விடயங்களை உங்களுடன் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் முதன்முதலாக 1994 ஆம் ஆண்டு இந்த உபதலைப்பு மொழிபெயர்ப்பில் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் கால்பதித்தபோது அதாவது 19 ஆண்டுகளுக்கு முன்னர் தற்போதைய தொழிநுட்ப வசதிகள் உபதலைப்புகளுக்காக இருக்கவில்லை.

எனவே, ஒரு திரைப்படத்தை உபதலைப்புக்காக மொழிபெயர்ப்பதைவிட அதிக காலம் அதைக் கணிணியில் தட்டச்சு செய்து உபதலைப்பிடுவதற்குச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, தட்டச்சு செய்தபின் அதிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் சரியான முறையில் ஒழுங்குசெய்து வசனங்களைத் தயாரிப்பதற்கு கிட்டத்தட்ட இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரையான 3 இரவுகள் செல்லும்.

பின்னர் அதை ஒளிப்பதிவு செய்வதற்கு 3 தொடக்கம் 4 மணித்தியாலங்கள் செல்லும். அப்போது சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் இந்த உபதலைப்புக்கான கணினிகள் (CG) 2 மட்டுமே இருந்தன.

அந்த இரண்டு கணிணிகளை ஏனைய நிகழ்ச்சிகளின் பெயர்த் தலைப்புகள் (Titles) தயாரிப்பதற்கு உபயோகித்ததாலும், உபதலைப்பு நடவடிக்கைகளுக்கு அதிக நேரம் சென்றதாலும் எமக்குக் கலையக வசதிகள் இரவு நேரத்தில் மட்டுமே கிடைத்தன.

இதனையடுத்து, நான் வீட்டில் VHS ஒளிநாடாவிலிருந்து மொழிபெயர்த்த பிரதியை, தட்டச்சு செய்தபின் அதில் சரி, பிழை பார்ப்பதற்கும், வசனங்களைச் சீர்செய்வதற்குமே 3 இரவுகள் தேவைப்பட்டன.

இவ்வாறாக ஒரு தமிழ்த் திரைப்படத்தை மொழிபெயர்த்த (சிங்களத்துக்கு) பிரதியில் இருக்கும் வசனங்களின் எண்ணிக்கை சுமார் 2000 அளவிலிருக்கும்.

அந்தக்காலத்தில் இந்த உபதலைப்பிற்காக உபயோகித்தது Quanta என்ற வகையைச் சேர்ந்த கணினியாகும். இதில் தட்டச்சு செய்யும் ஒவ்வொரு வசனமும், அதாவது ஒரு வரியில் 5 சொற்களைக் கொண்ட 2 வரிகள் கணினியில் ஒரு Page ஆகக் கருதப்படும். இவ்வாறு ஒரு திரைப்படத்திற்கு சுமார் 2000 Page களை Type செய்யவேண்டி வரும்.

இப்பிரதியை Type செய்பவரின் வேலை அத்தோடு முடிந்துவிடும். ஆனால் அந்தக் கணினி மென்பொருளுக்கு அமைய அதிலொரு சொல்லை Type செய்யும்பொழுது (சிங்கள, தமிழ்ச்சொல்லை) அதில் ஒவ்வொரு எழுத்துக்களும், ஒவ்வொரு குறிகளும் தனித் தனி எழுத்தாகவே (Character) பதியப்படும். அதாவது 'கிறிஸ்தவம்' என்ற சொல்லை Type செய்தால் அது கீழ்வருமாறு பதியும்.

க ி ற ி ஸ ் த வ ம ்

பின்னர் அதனை Cursor Keys உபயோகித்து இழுத்து, சொற்களை அமைக்க வேண்டும். இவ்வாறு எல்லாச் சொற்களையும் சரிசெய்து 2000 Page களைத் தயாரிக்க 3 இரவுகள் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியில் ஒளிபரப்பத் தேவையான விதத்தில் ஒளிப்பதிவு செய்வது அதன் பின்னரே. இது மிகவும் சிரமமான காரியமாக இருந்தபோதிலும் இந்தத்துறையில் எனக்கிருந்த ஆர்வம் காரணமாகவே அதையொரு சவாலாகக் கருதிச் செயற்பட்டேன்.

ஆனால், தொழினுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக இந்தநிலை தற்போது மாறியுள்ளது.

திரைப்படங்கள், டெலிநாடகங்களை உபதலைப்புடன் பார்த்து ரசிப்போர் இந்தச் செயற்பாட்டிற்காகப்படும் கஷ்டத்தை அறியாதிருக்கலாம்.

அதனால் அவர்கள் இதனை மிகவும் இலகுவான விடயமாக நினைக்கவும், விமர்சிக்கவும் கூடும். ஆனால் உபதலைப்புப் பிரதியொன்றை எழுத (2 மணிநேர ஒளிபரப்பு) சுமார் 15 தொடக்கம் 20 மணிநேரம் தேவைப்படும்.

இதன்போது மொழிபெயர்ப்பது இலகுவான விடயமாக இருந்தபோதிலும், அதன் தொநுட்பப் பகுதியான ஒவ்வொரு Pageகளுக்குமுரிய Time Code இடுவது சற்றுச் சிரமான விடயமே.

உபதலைப்பிடுவதில் மிகவும் முக்கிய அங்கமாக இருப்பதும் இந்த Time Code தான். இது ஒழுங்காக இல்லாவிடின் உபதலைப்புகள் உரிய நேரத்திற்கு தொலைக்காட்சியில் வராமையினால் நிகழ்ச்சியை ரசிப்போருக்கு இடைஞ்சல் ஏற்படும். இந்த உபதலைப்புகளைக் கொண்டு மேலதிக மொழியொன்றைக் கற்க முயற்சிக்கும் ஒரு பிரிவினரும் இருக்கின்றனர். Time Code பிழைத்தால் அவர்கள் கற்பதிலும் சிரமம் ஏற்படும்.

ஒவ்வொரு உபதலைப்பையும் எழுதும்போது அதை மொழிபெயர்த்தபின் மீண்டும் Replay செய்து அதற்கான In Time, Out Time என்பவற்றைக் குறிப்பிடவேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு Page இற்கும் Time Code உடன் உபதலைப்புகள் எழுதப்பட வேண்டும். இவ்விதமாக 20 நிமிட ஒளிபரப்பு நேரத்தைக் கொண்ட தொலைக்காட்சி நாடக அங்கமொன்றை மொழிபெயர்த்து Time Code இடுவதற்கு சுமார் 2 மணிநேரம் செல்லும்.

இந்த Time Code இல் 4 பிரிவுகள் உள்ளன.

அவை: Hour, Minute, Second, Frame என்பனவாகும்.

In Time இடும்போது கடைசி Frameவரை அதைக் குறிப்பிடவேண்டும். 2 Page களுக் கிடையில் குறைந்தது 10 Frameகளாவது இடைவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் இருக்கவேண்டும். 4 தொடக்கம் 5 சொற்களைக்கொண்ட 2 வரிகளை வாசிப்பதற்கு குறைந்தது 4 செக்கனாவது வழங்கப்படவேண்டும்.

ஆகவே உபதலைப்பு மொழிபெயர்ப்பின்போது மிகவும் கடினமானதும், முக்கியமானது மான விடயம் சரியான Time Code இடுவதாகும். அது அனுபவத்தையும், தொழிநுட்பத்தையும் பொறுத்ததாகும்.

நாம் முகங்கொடுக்கும் பிரச்சினைதான் தமிழ்த் திரைப்படத்தை சிங்கள மொழிக்கு உப தலைப்பிற்காக மொழிபெயர்க்கும்போது சிங்கள மொழியைவிட வேகமாகவும், சொற்கள் கூடியதாகவும் தமிழ் கதைப்பதால் அந்த முழுக் கருத்தையும் குறித்த நேரத்திற்குள் உப தலைப்பாக எழுதுவதில் சிரமம் ஏற்படுதலாகும் (4 - 5 செக்கனுக்குள் அம்முழுக் கருத்தையும் எழுத்துவடிவில் வழங்க முடியாமை).

அதேபோன்று சிங்கள வசனமொன்றைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது சிங்களத்தைவிட அதிக சொற்களில் அதை எழுதவேண்டிய நிலை ஏற்படும். ஒரு Page இல் 4, 5 சொற்களைக்கொண்ட இரு வரிகளுக்கு மேல் இருப்பது பொருத்தமில்லாத விடயம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் அர்த்தம் பாரியளவு மாறாதவாறு அதன் கருத்தைச் சுருக்கி வழங்குவோம்.

நகைச்சுவை வசனங்கள், பழமொழிகள் போன்றன ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்க்கப்படும்போது அது சரியான கருத்தை அல்லது ரசனையைக் கொடுக்காதிருக்கலாம்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் உபதலைப்புக் கலைஞர்கள் என்ற ரீதியில் நாம் செய்வது, மற்ற மொழியிலுள்ள அதற்குப் பொருத்தமான பதங்களை இடுவதாகும். அத்தோடு சில சொற்கள் கேட்பதற்கு ஹாஸ்யமாக இருந்தாலும், அதனை எழுத்து வடிவில் வாசிக்கும்போது கூச்சத்தை ஏற்படுத்தக்கூடும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றை எழுதுவதை நாம் தவிர்த்துவிடுவோம். மேற்குறிப்பிட்டவாறெல்லாம் நாம் செயற்படும்போது நாம் நிகழ்ச்சியில் வந்ததை சரியாக எழுதவில்லையென்று சிலர் விமர்சிப்பதுமுண்டு.

இதுவரை உபதலைப்புக் கலையில் நாம் கடைப்பிடிக்கும் நடைமுறைகளையே குறிப்பிட்டேன். இதனூடாக உபதலைப்பு மொழிபெயர்ப்பிலுள்ள கஷ்டநஷ்டம் புரிந்திருக்குமென்று நம்புகிறேன்.

இவ்வாறு சிரமப்பட்டுச் செய்யும் இந்தச் செயற்பாட்டிற்காக நான் பெறும் கொடுப்பனவை விட, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரைப்படங்கள்**

கே டி வி, எச்டி, தமிழ்சினிமா கிளப்,
ராஜ் டிஜிடல், பிளஸ் ஜே, மூவி மெகா 24,
அக்ஷன் திரைப்படங்கள்,
சண் அக்ஷன்,

**இசை**

சண் மியூசிக், மியூசின் எச்டி, சண் மெக்ஸ்- 80's Songs, இசை அருவி, ஜெயா மெக்ஸ், கப்டன் மியூசிக், ஜி7 எஸ்பிவி சேனல், யூஎப்எக்ஸ் மெகா மியூசிக், ராஜ் மியூசிக், எஸ்எஸ் டிவி, சுப்பர்,யெஸ் ஜே டிவி, 75 மியூசிக், சீ மியூசிக், பிக் இசை, எம் டியூன்ஸ் தமிழ் சொனி இசை, 9 எக்ஸ் இசை கிளசிக்கல், மியூசிக்கல் சண் லைப், முரசு,

நகைச்சுவை
ஆதித்யா டிவி சிரிப்பொலி
சிறுவர் தொலைக்காட்சி
சுட்டி டிவி சித்திரம்,
தகவல் தொலைக்காட்சி,
டிஸ்கவரி சனல் - தமிழ்

**செய்திகள்**

சண் நியூஸ் செய்திகள் (கலைஞர்) ராஜ் நியூஸ் 24*7. ஜெயா பிளஸ். கப்டன் நியூஸ், ஜடிவி, எஸ்பிவி, சத்யம் டிவி, லோட்டஸ் நியூஸ், தந்தி டிவி, புதிய தலைமுறை, என்டிடிவி, ஹிந்து நியூஸ் பிளஸ், டிவி ஜாய்,தமிழ் டிவி

**வர்த்தக தொலைக்காட்சி**

(Shopping Channels) மெக்ஸ் விஷன், ஹோம் சொப் 18, சொப்பிங் சோன் 24,

ஹிந்து ஆன்மீக தொலைக்காட்சி

கிருஸ்ணா டிவி, ஓம் டிவி (முர்ஆ வுஏ வயஅடை), ஸ்ரீ சங்காரா டிவி, எஸ்விபிசி ரிரிடி தரிசனா

கிறிஸ்தவ ஆன்மீக தொலைக்காட்சி

ஏஞ்சல் டிவி,பிளஸிங் டிவி, பிளஸிங் கிட்ஸ் ஆசிர்வாதம் டிவி ஜேஸுஸ் டிவி

தகவல் தொலைக்காட்சியின் பகுதி தமிழ் ஒளிபரப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள் (யல ஊாயமெநெடளள) அடங்குகின்றன.

இந்த நிலையில் சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடுத்தப்படியாக இந்தியாவிலேயே அதிக பெறுமதிமிக்க கேபிள் துறை காணப்படுகிறது அதன் பெறுமதி 4.91 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

**இந்திய தொலைக்காட்சி சேவைகளும் வலையமைப்புகளும்**

1991 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த நரசிம்மராவ், பொருளாதார மற்றும் சமூக மீளமைப்பின் கீழ் தனியார் மற்றும் வெளிநாட்டு ஒளிபரப்பாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட சேவைகளை மேற்கொள்ள இந்தியாவில் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி சீஎன்என், ஸ்டார் டிவி, மற்றும் உள்ளூர் சேவைகளான சீ டிவி, ஈ டிவி, சண் டிவி, செய்மதி ஊடான சேவைகளை ஆரம்பித்தன.

இதன்படி சீடிவி இந்தியாவில் முதன்முலாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் தொலைக்காட்சியாக சேவையாக அமைகிறது.

தென்னிந்தியாவை பொறுத்தவரையில் முதல் தனியார் தொலைக்காட்சி சேவையாக 1992 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட சண் டிவி தொலைக்காட்சி சேவை அமைந்துள்ளது.

இந்தநிலையில் இந்தியாவில் India: broadcast or "over-the-air","free-to-air", Direct-to-Home (DTH), cable television, IPTV ஆகிய ஐந்து வகையிலான தொலைக்காட்சி சேவைகள் அடிப்படையில் இயங்குகின்றன.

இப்போது இந்தியாவில் 500 தொலைக்காட்சி சேவைகள் இயங்கிவருகின்றன. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தின் தமிழ் தொலைக்காட்சி சேவைகளை பெயரிடலாம்

**அரச உரிமை சேவைகள்**

பொதிகை, டிடி சென்னை, டிடி கோயம்புத்துார், டிடி மதுரை, டிடி புதுச்சேரி

**கேளிக்கை சேவைகள்**

சண் டிவி, சண் டிவி எச்டி, ஸ்டார்விஜய், கலைஞர் டிவி, ராஜ் டிவி,ஜெயா டிவி, கப்டன் டிவி, பொலிமர் டிவி, மக்கள் டிவி,மெகா டிவி,சீ டிவி,வசந்த் டிவி, மூன் டிவி, பெபர்ஸ் டிவி, இமயம் டிவி,வின் டிவி,தமிழன் டிவி, தென்றல் டிவி, தீரன் டிவி, ஆரா டிவி,சுப்பர் டிவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரைப்படங்கள்**

கே டி வி, எச்டி, தமிழ்சினிமா கிளப்,
ராஜ் டிஜிடல், பிளஸ் ஜே, மூவி மெகா 24,
அக்ஷன் திரைப்படங்கள்,
சண் அக்ஷன்,

**இசை**

சண் மியூசிக், மியூசின் எச்டி, சண் மெக்ஸ்- 80's Songs, இசை அருவி, ஜெயா மெக்ஸ், கப்டன் மியூசிக், ஜி7 எஸ்பிவி சேனல், யூஎப்எக்ஸ் மெகா மியூசிக், ராஜ் மியூசிக், எஸ்எஸ் டிவி, சுப்பர்,யெஸ் ஜே டிவி, 75 மியூசிக், சீ மியூசிக், பிக் இசை, எம் டியூன்ஸ் தமிழ் சொனி இசை, 9 எக்ஸ் இசை கிளசிக்கல், மியூசிக்கல் சண் லைப், முரசு,

நகைச்சுவை
ஆதித்யா டிவி சிரிப்பொலி
சிறுவர் தொலைக்காட்சி
சுட்டி டிவி சித்திரம்,
தகவல் தொலைக்காட்சி,
டிஸ்கவரி சனல் - தமிழ்

**செய்திகள்**

சண் நியூஸ் செய்திகள் (கலைஞர்) ராஜ் நியூஸ் 24*7. ஜெயா பிளஸ். கப்டன் நியூஸ், ஜடிவி, எஸ்பிவி, சத்யம் டிவி, லோட்டஸ் நியூஸ், தந்தி டிவி, புதிய தலைமுறை, என்டிடிவி, ஹிந்து நியூஸ் பிளஸ், டிவி ஜாய்,தமிழ் டிவி

**வர்த்தக தொலைக்காட்சி**

(Shopping Channels) மெக்ஸ் விஷன், ஹோம் சொப் 18, சொப்பிங் சோன் 24,

ஹிந்து ஆன்மீக தொலைக்காட்சி

கிருஸ்ணா டிவி, ஓம் டிவி (ழுர்ஆ வுஏ வயஅடை), ஸ்ரீ சங்காரா டிவி, எஸ்விபிசி ரிரிடி தரிசனா

கிறிஸ்தவ ஆன்மீக தொலைக்காட்சி

ஏஞ்சல் டிவி,பிளஸிங் டிவி, பிளஸிங் கிட்ஸ் ஆசிர்வாதம் டிவி ஜேஸுஸ் டிவி

தகவல் தொலைக்காட்சியின் பகுதி தமிழ் ஒளிபரப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீஎல்சி, பொக்ஸ் ட்ரவலர், ஹிஸ்ரி டிவி 18, நேசனல் ஜோக்ரபிக் செனல், நட் ஜியோ வைல்ட், எனிமல் பிளானட் டிஸ்கவரி டோபோ டிஸ்கவரி சயன்ஸ் ட்ரவல் ட்ரெண்டஸ் டிவி பகுதியளவான சிறுவர் தொலைக்காட்சி காட்டுன் நெட்வேக் டிஸ்னி செனல் டிஸ்னி ஜூனியர் டிஸ்னி எக்ஸ்டி ஹுன்கம டிவி நிக்கெல்லொடியோன் டிவி போகோ

மலேசியாவில் தமிழ் தொலைக்காட்சி

Astro Mudhalthirai

Astro Thangathirai

Astro Vaanavil - cultural and lifestyle related

Astro Vellithirai - movies

Astro Box Office Movie Thanggathirai - pay-per view

Galaxy Nakshatra - movies

சிங்கப்பூரில் தமிழ் தொலைக்காட்சி

MediaCorp TV12 Vasantham - part of government owned MediaCorp, TV12 Vannathirai – மீடியா கோப் டிவி12 வசந்தம்

கனடாவில் தமிழ் தொலைக்காட்சி

ATN Jaya TV,

cable TV –

Vbd;vd; n[ah btp>

Balamurugan TV - maha TV – பாலமுருகன் டிவி - மஹா டிவி

Tamil Entertainment Television (TET)- தமிழ் என்டர்டையன்மென்ட் டெலிவிஷன்

Tamil One - cable TV, previously known as Tamil TV – தமிழ்வன்

Tamil Vision International - cable TV- தமிழ்விஷன் இன்டர்நெசனல்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தமிழ்த் தொலைக்காட்சி

Sangamam TV



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சா்வதேச தமிழ் தொலைக்காட்சிகள்

Ayngaran TV - Kalaignar TV programmes Iq;fud; btp

Cee(I)TV - general entertainment, telecasting mainly Jaya TV programmes –சீ(1) டிவி

Deepam TV - general entertainment; UK basedm தீபம் டிவி

Discovery Tamil - infotainment channel from Discovery Network டிஸ்கவரி தமிழ்

Global Tamil Vision - general entertainment; pro-Tamil; previously known as Thendral TV and Tharisanam TV – Fnshgy தமிழ் விஷன்

Holy God TV - christian; France based – ஹொலி கோட் டிவி

சா்வதேச நீதியமைப்பின் தொலைக்காட்சி (Internet Protocol Television)

Brimming TV –பிரிம்மிங் டிவி

BSNL IPTV- பிஎஸ்என்எல் ஐபி டிவி

Tamil24 TV- தமிழ்24 டிவி Tamil IPTV – தமிழ் ஐபிடிவி

TVI On Demand – டிவிI ஒன் டிமான்ட்

## இணையம் - Internet

தனித்தனியாக உள்ள இரண்டு கணனிகளுக்கு இடையில் வலையமைப்பினுடைய இணைப்புக் கொள்கைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள், நவீன எண்மானங்களுக்கு ஏற்ப, முன்னேற்றங்கள் விரிவடைந்தன.

1982 இல் அதிகாரபூர்வமாக நடைமுறைபடுத்தப்பட்ட நிலையான நெறிமுறைகளை அடிப்படையாகக்கொண்டு பரவ ஆரம்பித்த இணைய வலையமைப்பானது, உலக வலையமைப்பினை ஏற்படுத்துவதற்கான யோசனையை உருவாக்கிறது.

இந்த சிந்தனையே தற்போது இணையத்தளமாக பரிணமித்துள்ளது.

1950கள் மற்றும் 1960களின் முற்பகுதியில் பரந்து காணப்பட்ட கணனிகளுக்கு இடையிலான இணைத்தொடர் வலையமைப்புகளே இணையத்திற்கு வழிகாட்டியாக அமைந்தன.

1950 களில் இந்த்முறையானது ரெண்ட்டின் திட்டப்பணிகளிலும், அதன் துணை ஆராய்ச்சியாளர்களான, ஹர்பர்ட் சைமன், கார்னிஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிலான் பல்கலைக்கழகம், பிட்டஸ்பர்க், பென்சைல்வேனியா, சுலைவான், இலினாய்ஸ் உள்ளிட்ட ஆராய்சியாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக, இந்த முறைமை வளர்ச்சி பெற்றது.

உலக வலையமைப்பின் அடிப்படையின் முன்னோடியாக திகழ்ந்தவர் ஜெ.சி.ஆர். லிக்லைடர் ஆவார்.

அவர், 1962 அக்டோபரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புத்துறை தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர், நவீன ஆய்வு திட்ட நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் வகையில் அவர் நியமித்த குழுவின் மூலம், இணைத்தொடர்பு வலையமைப்புக்கான தேவையை, வீணாகும் வள ஆதாரங்கள் நிமித்தம் உருவாக்க முடியும் என்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

இதன் பின்னர், பால் பாரான் (ரெண்ட் கோப்ரேசன்) மேற்கொண்ட தொடர்சியான ஆராய்ச்சியும், அமெரிக்க இராணுவத்தின் தகவல் தொடர்புக் கட்டமைப்பு குறித்து ஆராய்ச்சியும் நவீன இணையத்தள வளர்ச்சிக்கு வழி செய்தது.

1978 இல் பன்னாட்டு பொதி நிலைமாற்ற சேவையகம் (IPSS) என்றழைக்கப்படும் முதல் பன்னாட்டு பொதி நிலைமாற்ற வலையமைப்பு உருவாக்கப்பட்டது.

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் வளர்ச்சியடைந்த இந்த வலையமைப்பு, 1981 இல் கனடா, ஹாங்காங் மற்றும் ஆஸ்திரேலியா முழுவதும் வளர்ச்சியடைந்தது. 1990 இல் இது உலகளாவிய வலையமைப்புக்கான உட்கட்டமைப்பை வழங்கியது.

1990 இன் துவக்கத்தில் ஆப்பிரிக்க நாடுகள் X.25 IPSS மற்றும் பன்னாடுகளுக்கான 2400 போட்டலகு இணக்கி UUCP இணைப்புகள் மற்றும் இணைவலையமைப்பு கணினி தகவல் தொடர்புகளை ஆதரித்தன.

1996 இல் USAID நிதியிலமைந்த பணித்திட்டமான, லிலேண்ட் இன்ஷியேட்டிவ் கண்டத்திற்கான முழுமையான இணைய இணைப்புகளை வளர்ப்பதற்கான பணிகளை துவக்கியது.

1997 இல் கினி, மோசாம்பிகியூ, மடகாஸ்கார் மற்றும் ராவண்டா ஆகிய செயற்கைக்கோள் புவி நிலையங்களை பெற்றது, 1998இல் இதனைத்தொடர்ந்து கோட்டெடி இவ்ாய்ரி மற்றும் பெனின் ஆகியவற்றையும் பெற்றது.

1998 இல் IANA மற்றும் InterNIC Mfpait ICANN கீழ் மறுசீரமைக்கப்பட்டது, கலி.ஃ.போர்னியாவின் ஓர் இலாப-நோக்கற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனம் சில இணையத்தொடர்பான பணிகளை நிர்வகிக்க அமெரிக்க வணிகத் துறையோடு ஒப்பந்தம் செய்துகொண்டது.

DNS இயக்க முறையானது தனியார் மயமாக்கப்பட்டு போட்டிக்கு திறந்துவிடப்பட்டது. இதனால் பெயர் ஒதுக்கீடு குறித்த மைய நிர்வாகம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலான ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்டது.

**மின்னஞ்சல்**

மின்னஞ்சல் 1965 இல் முதன்மை கணினியில் நேரத்தை பகிர்ந்து கொள்ளும் பல்வேறு பயனர்களிடையே தொடர்புகொள்வதற்காக துவக்கப்பெற்றது.

மின்னஞ்சல் கண்டுபிடிப்பில் அர்பாநெட் கணினி வலையமைப்பு பெரும்பங்கு வகிக்கிறது.

1971 இல் ரே டாம்லின்சன் என்பவர், பயனர் பெயரிலிருந்து வழங்கி பெயரை பிரித்தறியக்கூடிய குறியீடு பயன்படுத்துகின்ற, நிலையான இணைய மின்னஞ்சல் முகவரி முறையை உருவாக்கினார்.

**சமூக வலைத்தளங்கள்**

தற்கால இணையப் பயன்பாடு, சமூக ஒருங்கிணைப்பை இலகுபடுத்தியுள்ளது என்பதுடன் அதன் வரையறைகளையும் தகர்த்துள்ளது.

21ஆம் நூற்றாண்டின் சமூகம், இணையத்தை மையமாக வைத்து வளர்ச்சியடைந்து வருகிறது.

எனினும் இதன் கீழ் சுயவிருப்பம், சுய அடையாளம், இரகசியங்கள் என்பன தகர்த்தெறியப்படுகின்றன என்பதே தற்போதைய முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது.

எவ்வாறாயினும், சமூகவலைத்தளங்களின் ஊடான செய்திப் பரிமாற்றம், ஊடகத் துறையில் சுருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதுடன், இதில் பாரிய இலவச விளம்பர சந்தை ஒன்று காணப்படுவதால், இதனை செய்தி ஊடகங்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்திக்கொள்கின்றன.

சமூக வலைத்தங்களில் தற்போதை பிரதானமாக பேஸ்புக், மைஸ்பேஸ் மற்றும் ட்டுவிட்டர் ஆகியன காணப்படுகின்றன.




மக்கள் World Wide Web என்ற கட்டுச் சொல்லில் உலாவி செய்திகளையும் தகவல்களையும் திரட்டிய சந்தர்ப்பங்கள், பின்னர் மக்களுக்கு இடையில் நேரடி தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாற்றத்துக்காக "சட்டிங்" முறைகள் பயன்படுத்தப்பட்டன.

இதன் வளர்ச்சி பேஸ்புக், ட்டுவிட்டர், மைஸ்பேஸ் போன்ற சமூக வலைத்தளங்களை உருவாக்கியது.

இவ்வாறான தளங்களின் வளர்ச்சி மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையவே, நாளடை வில் இதில் காணப்படுகின்ற பாரிய விளம்பர சந்தையைப் பயன்படுத்திக்கொண்ட ஊடக நிறுவனங்கள் தமது செய்திகளின் சுருக்கத்தை இவ்வாறான சமூக வளைத்தளங்களில் பதிவுசெய்தன.

தற்போது ட்டுவிட்டர் வளைதளம் எவ்வித கணக்குகளும் இன்றி, நேரடியாக அப்போதான செய்திகளை கையடக்க தொலைபேசிகளுக்கு அனுப்பும் முறையை அமுலாக்கியுள்ளது. இலகுவான இந்த முறையின் கீழ், உலகச் செய்திகள் அனைத்தும் உள்ளங்கையின் கீழ் வந்துள்ளது.

இதுதவிர டுவிட்டர் கணக்கினை ஆரம்பித்து, அதில் உள்ள செய்தி நிறுவனங்களின் கணக்குகளை பொலோவ் செய்வதுடன், கையடக்க தெலைபேசிக்கான தொடர்பினை ஏற்படுத்துவதன் ஊடாக, செய்திகளை உடனடியாக பெறமுடியும். பேஸ்புக் தளத்திலும் இவ்வாறான ஒரு வசதி இருக்கின்ற போதும், அது இன்னும் விரிவுப்படுத்தப்படவில்லை.

பேஸ்புக் தளத்தில் செய்தி ஊடகத்தின் கணக்குடன் நண்பரான பின்னர், அதற்கு சப்ஸ்கிரைப் செய்யும்போது, தொலைபேசியில் செய்திகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

எனினும் செய்திகளின் விடயத்தில் பேஸ்புக் தளத்தை விட ட்டுவிட்டர் முன்னிலையில் உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் ட்டுவிட்டர் ஒரு சமூக வலைத்தளம் என்பதையும் தாண்டி, செய்தி ஊடக நோக்கில் இயக்கப்படுவதே ஆகும்.

இதேவேளை சமூக வலைத்தளங்கள், ஊடகவியல் கட்டுப்பாட்டில், அல்லது படிமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே தற்போது உண்மையாக இருக்கிறது.

ஊடகவியலில், ஒரு செய்தியை உருவாக்குபவரிடம், அல்லது செய்தி உருவாகும் தளத்தில் இருந்து (சோர்ஸ்) செய்தியாளர், அல்லது ஊடகம் அதனை பெற்று, பகுப்பாய்வு செய்து, தொகுத்து, இறுதி செய்தி நுகர்வோருக்கு, அல்லது வாசகர்களுக்கு வழங்கும் செயன்முறையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியமானது.

எனினும் புதிய சமூக வலைத்தளங்களானது, இறுதி செய்தி நுகர்வோரை, நேரடி சோர்ஸ்"டன் தொடர்பை ஏற்படுத்த வழி செய்துள்ளது.

இந்த நிலையில் செய்திகளின் மொத்த வியாபாரியாக அல்லது தரகராக உள்ள செய்தி ஊடகத்தின் பணி தேவையற்றவிடயமாக மாறுகிறது.

இவ்வாறான வளர்ச்சிப் பாதையில், சமூக வலைத்தளங்களின் வளர்ச்சியால், இன்னும் 10 வருடங்களின் பின்னர், செய்தி ஊடகங்கள் தேவை மக்கள் மத்தியில் குறைவடையும் என்பதுடன், செய்தி ஊடகங்களை நாடுபவர்களின் எண்ணிக்கை குறைவடையும் என்ற கருத்துக்களும் உள்ளன.

இந்த நிலையில் இந்த சவாலுக்கு முகம் கொடுக்கும் வகையில், செய்தி ஊடகங்கள் தமது வழங்கும் செயன்முறையை புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசிய மாகிறது. இதன் அடிப்படையில் தற்போது செய்தி ஊடகங்கள் வளர ஆரம்பித்துவிட்டன என்பதும், ஊடகவியலுக்கு ஏற்பட்ட ஒரு திருப்தி.

எஸ்.எம்.எஸ். என்ற குறுஞ்செய்தி இன்று கைத்தொலைபேசியின் ஊடாக அதிகளவில் பயன்படுத்தப்படும் செய்தி முறையாக மாறிவிட்டது.

தற்போது அப்ஸ் எனப்படும், செய்தி அப்ளிகேசன்களை செய்தி ஊடகங்கள் வழங்குகின்றன. இவற்றைக்கொண்டு ஸ்மார்ட் போன்கள் போன்றவற்றில், சமூகவலைத்தளத்தைப் போன்றே செய்திகளையும், பத்திரிகைகளையும் படிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதேபோன்ற பல்வேறு முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

சில ஊடக நிறுவனங்கள் சமூக வலைத்தளத்தை மாத்திரமே தமது தளமாகக் கொண்டும் இயங்குகின்றன.



எனவே காலப்போக்கில், ஊடக நிறுவனத்தின் உற்பத்திகள் முழுமையாக இலவசமாக வழங்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டாலும், அது ஆச்சரிப்படுவதற்கு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தணிக்கை

**சுய ஒழுங்கு** - Self-regulation



சாதாரண சட்ட நியதிகளுக்கு மேலாக, செய்தி நிறுவனங்கள் (Ombudsman) குறைகேள் அதிகாரிகளை நியமித்துக் கொள்கின்றன.

மக்களுக்கு நம்பத் தகுந்த சேவைகளை வழங்குவதற்காக, மக்களின் முறைபாடுகளையும், விமர்சனங்களை பெற்றுக்கொள்வதற்காக இந்தப் பதவி வழங்கப்படுகிறது.

அத்துடன் உள்ளக மற்றும் வெளியக முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளும் செயற்பாடுகளையும் இந்த குறைகேள் அதிகாரியே மேற்கொள்கிறார்.

இந்தமுறைமை எல்லா நாடுகளிலும் இல்லாத போதும், அதற்கு ஒப்பான பதவிகளை அல்லது பிரிவுகளை அந்தந்த நிறுவனங்கள் கொண்டுள்ளன.

செய்தி சபை அல்லது பத்திரிகை சபை, பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

**அரசாங்கத்தணிக்கை**

நாட்டின் அல்லது அரசாங்கத்தின் நலன்கருதி விமர்சனங்களை தவிர்க்கும் பொருட்டு அல்லது மக்களை தூண்டும் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்படும் தடையே தணிக்கை என்றுக்கொள்ளலாம்.

இலங்கையில் இது போர்க்காலத்தில் கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டது.

எனினும் தற்போது அதன் தாக்கத்தின் அடிப்படையில் செய்தியாளர்கள் அல்லது செய்தி ஆசிரியர்கள் தமக்குள்ளே சுயதணிக்கை கொள்கையை கடைபிடித்துவருகின்றனர்.




அதாவது சட்டத்தில் தமது பாதுகாப்புக்கு தொழிலுக்கு உத்தரவாதம் இல்லை என்ற அடிப்படையில் இந்த சுயதணிக்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகத்துறையும் மொழி அறிவும்

ஆங்கில ஊடகங்கள் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் ஊடகங்களைத் தவிர ஏனைய நாடுகளின் ஊடகங்களைப் பொறுத்தவரையில் அங்கு மொழிபெயர்ப்பு என்பது அத்தியாவசியம் மிக்கதாக உள்ளது.

இதன்போது பிரதான மொழிகளை தெரிந்துகொள்ளாமல் சிறுபான்மை அல்லது கீழைத்தேய மொழிகளிலுள்ள ஊடகங்கள் செயற்படுவது கடினமானது.

எனவே இலங்கை போன்ற நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் பரிச்சயம் கொண்டிருப்பது ஊடகத்துறையில் காலூன்ற வழிவகுக்கும்.

**அனுபவப் பகிர்வு:**

**வீ.பாலேந்திரன்,**

*இலங்கை நாடாளுமன்ற உரை பெயர்ப்பாளர்*

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்தகுடியில் பிறந்த மக்கள் என்பதில் எமக்குப் பெருமிதம்.

இன்று உலகளாவிய ரீதியில் தமிழர்கள் தடம்பதித்துள்ளனர், என்பது எமக்கு இதில் இரப்படிப்பு மகிழ்ச்சி.

ஏதோ துரதிஸ்டத்திற்காக இத்தனை பெருமை கொண்ட தமிழ்மொழி எந்த நாட்டையும் ஆளவில்லை, எல்லா இடங்களிலும் ஆளப்படுகிறோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியான உண்மை.

எமது இயல், இசை, நாடக திறன்கள் தேர்ச்சிகள் எல்லாம் பள்ளிக்கூடங்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இது இவ்வாறு இருக்கையில் இதற்கு அடுத்தபடியாக தமிழ் வளர்க்கும் பணியினை முழுமனே ஏற்றுக்கொள்வது ஊடகங்கள் என்றுக்கூறலாம்.

அந்த ஊடகங்களின் உயர்விற்கு உறுதுணையாய் அமைவது ஊடகவியலாளர்களின் ஊக்கமிக்க ஆக்கங்களும் அவர்களின் செய்தித் தகவல்களும் ஆகும்.

இந்த செயற்பாட்டை செவ்வனே செய்வதற்கு தமிழ்மொழித் தேர்ச்சி மட்டும் போதாது என்பது உணரப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஒரு தமிழ் அமைச்சரை செவ்விக்காண்பதற்காக எடுப்பதற்காக அந்த அமைச்சரின் அலுவலகத்துக்கு செல்லும்போது படலை முதல் செவ்வி முடியும்வரை வேற்றுமொழி சகோதரர்களை சந்திக்கவும் அவர்களிடம் தேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவும் உள்ளோம்.

எனவே இலங்கையைப் பொறுத்தளவில் ஊடகவியாளர்களுக்கு சிங்கள மற்றும் ஆங்கில மொழி அறிவுகள் இன்றியமையாதவையாகும்.

செய்தி என்றவுடனேயே எமக்கு முதலில் எமது எண்ணங்களில் தோன்றுவது இணையத் தளமாகும்.

செய்திகள், தகவல்கள், தரவுகள் போன்ற இன்னோரன்ன அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய இணையத்தளத்தின் முழுமையான பயன்பாடு ஆங்கில அறிவின் மூலமாகவே உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்தநிலையில் புவியியல் கற்ற ஒருவன் தன் நிறைக்கு நிகரான பொன்னின் பெறுமதியை கொண்டுள்ளான் என்பது போல ஆங்கிலம் கற்றவனுக்கும் அத்தகையதோர் சிறப்பு இருக்கின்றது.

ஏனென்றால் அது உலகை ஆளுகின்ற மொழியாகும்.

ஐந்து நட்சத்திர விருந்தகங்களிலோ வானூர்தி நிலையங்களிலோ வேறு அரச சார்பற்ற காரியாலயங்களிலோ வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுக்குழுக்கள், அரச சார்பற்ற அதிகாரிகள், சர்வதேச ரீதியிலான புத்திஜீவிகள் போன்றோரை சந்தித்து அவர்களிடமிருந்து பெற்ற தகவல்களை செய்திகளை நேயர்களுக்கும் படிப்பவர்களுக்கு நேர்த்தியாக வழங்கவேண்டுமாயின் நிச்சயமாக அதற்கு கைகொடுப்பது ஆங்கில அறிவாகும்.

இன்று இலங்கை ஊடகத்துறையை பொறுத்தவரையில் அதிகமான வானொலிச் சேவைகள், தொலைக்காட்சி சேவைகள், பத்திரிகைத்துறை சேவைகள் போன்றன இயங்கிவருகின்றன.

இவற்றின் ஊடகவியலாளர்கள் தங்களின் ஆக்கங்களை வெளிப்படுத்துவதற்காக பலதரப்பட்ட செய்தி மூலங்களையும் பயன்படுத்துகின்றனர்.

அவர்களிடமிருந்து சில பலன்தரக்கூடிய தகவல் பரிமாற்றத்திற்காக சிங்கள மொழியைக் கற்றிருப்பது சிறப்பானதாகும்.

ஒரு மொழி தெரிந்தவன் ஒரு மனிதனுக்கு சமனாவான்.

எனவே பல மொழிகளைக்கற்ற ஒருவன் பல மனிதர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமனாகின்றான். ஒருவன் தனித்து நின்று தனது சமூகத்திற்கு சேவையாற்றுவதைவிட பல மனிதனாக சேவையாற்றும்போது அந்தசேவையின் பயன்பாடும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே ஒரு மனிதனாய் நின்று பல மனிதனின் சேவைகளை வழங்குவதற்கு பலமொழிகளைக் கற்று தேர்வது அவசியமாகும் என்பது இதிலிருந்து புலனாகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இருவேறு மொழிகளை மட்டுமே கற்கவேண்டி இருப்பதனால் கஸ்டங்களை பாராது அதனை கற்று தேறுவோமாக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஊடக வாழ்க்கை தினக்குரல் மூலம் 1997 ஆம் ஆண்டு ஆரம்பமானது.

செய்திகளைக் கேட்பதில் செய்தித்தாள்களை வாசிப்பதில் எனது தந்தை காட்டிய ஆர்வம் காரணமாக எனக்கும் செய்தித்துறையில் புரியாத பற்று இருந்தது.

இந்தப் பற்று தினக்குரல் மூலம் வளர்ந்தது.

சுமார் 8 மாதங்கள் மாத்திரமே தினக்குரல் செய்தித்தாள் வாழ்க்கை நீடித்தது.

சூரியன் எப் எம் வானொலி ஆரம்பித்து 17 நாட்களில், 1998 ஆம் ஆண்டு அதில் செய்தியாளராக இணைந்து கொண்டேன்.

அன்றில் இருந்து செய்தித்துறையில் புதிய பல செயற்பாடுகளையும் செய்த பெருமை என்னைச் சார்ந்த செய்தியாளர்களுக்கு உள்ளது.

இந்தநிலையில், தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் சிவநேசச்செல்வன், தலைமை ஆசிரியர் தனபாலசிங்கம், பிரதம ஆசிரியர் ஹரன், செய்தி ஆசிரியர் சிவகணேசன், வாராந்த இதழாசிரியர் பாரதி உட்பட்ட செய்திப்பிரிவின் அங்கத்தவர்கள், ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரெய்னோ சில்வா, செய்திப்பிரிவுப் பணிப்பாளர் சுதேவ ஹெட்டியாராச்சி, சூரியன் எப் எம்மில் நிகழ்ச்சிப்பிரிவு ஆலோசகர் நடராஜசிவம், முன்னாள் பிரதம ஆசிரியர் காசி நவரட்ணம், முன்னாள் பிரதம ஆசிரியர் குருபரன், முன்னாள் செய்தி ஆசிரியர் திருஞானசுந்தரம் தற்போதும் என்னுடன் இணைந்துள்ள செய்தி ஆசிரியர்கள் வி.எஸ். சிகாமணி, விக்கினேஸ்வரன், சதீப்குமார், கிருஸ்ணகுமார், ஸ்ரீநாகவாணிராஜா, நூலை வடிவமைத்த ஊடகவியலாளர் ம. கதிர் அனைவரும் இந்த நூலின் ஆக்கத்துக்கு முழு ஒத்துழைப்பு நல்கினர். எனது செய்தித்துறை வளர்ச்சிக்கு தினக்குரல் வாசகர்களும் சூரியன் எப்.எம் நேயர்களுமே முதல் காரணம். அவர்களுக்கு எனது நன்றி.

நூல் ஆக்கியோன்
**எம்.இந்திரஜித்**
சூரியன் FM செய்திமுகாமையாளர்.

05.04.2013

**Rs. 250.00**

வெளியீடு:
Sajee Associates

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org